1468

T.N.C.A. Debates

Official Report

Vol. 38 No. 1

1980

C

D
1211,31'N80

N80·38·1
123041

Y311,31 N80
N80-38-1
123041

உள்ளடக்கம்

7—2—1980


| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் .. .. | i—vi |
| (ii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. | vii |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட) .. .. | viii—xvi |
| 1. | இரங்கல் குறிப்புகள் | |
| | முன்னாள் உறுப்பினர்கள் திரு. பி. ஜெயராமன், திரு. எம். கன்னியப்பன் ஆகியவர்களின் மறைவு குறித்து .. .. | |
| 2. | வினாக்கள்—விடைகள் | |
| | உடுகுறியிட்ட வினாக்கள் | 2—38 |
| 3. | தகவல் கோரல் | |
| | (அ) திரு. க. இராசாராம் வீட்டில் தொங்கும் பெயர்ப் பலகை குறித்து .. .. | 39—41 |
| | (ஆ) 'மக்கள் குரல்' நாளேட்டில் பேரவையில் நடைபெறாத செய்தி வந்துள்ளது குறித்து .. .. | 40—42 |
| 4. | கவன ஈர்ப்பு | 129—130 |
| | சேலம் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து .. .. | 41—44 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிகள் | |
| | (அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவரணா) சட்ட முன்வடிவு, 1980 .. .. | 44 |

| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகை தாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன்வடிவு. 1980 .. .. .. | 44 |

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம் - (தொடர்ச்சி)

| | |
|---|---|
| திரு. என். சங்கரய்யா .. .. | 44—71 |
| திரு. க. இராசாராம் .. .. | 72—85 |
| திரு. ஜே. ஜேம்ஸ் .. .. | 86—102 |
| மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் | 93 |
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | 94—97 104, |
| திரு. க. சுப்பு .. .. .. | 103—122 |
| மாண்புமிகு எஸ். இராகவானந்தம் | 118 |
| திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் | 123—127 |
| திரு. எஸ். ஆர். இராதா .. .. | 128—137 |

7. அறிவிப்பு

| | |
|---|---|
| பேரவை அலுவல் குறித்து .. .. | 123—124 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 138 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

### திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்): பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, இலஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள், சுரங்கம், கனிவளம்,

2. திரு. இ. மனோகரன் (நிதி அமைச்சர்): நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப் பணி (கட்டடங்கள்), மற்றும் பொதுப் பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்): மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறை.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்): வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு, கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல், சீட்டு நிதி பற்றி சட்டம் இயற்றல்.

6. திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்): உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு, அரிசன நலம், எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர்.

7. திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்): செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்ப வியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, சின்கோனா உட்பட வனங்கள், மது அனுமதிச்சீட்டு வழங்கல்.

8. திரு. க. நாராயணசாமி (சட்ட அமைச்சர்): சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) : தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராம தானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெசவாலைகள், துறைமுகங்கள்.

13. திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மை பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது), வேளாண்மை பொறியியல்.

14. திரு. கே. இராசா முகமது (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) : கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

15. திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை.

16. செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்): மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம், நெடுஞ்சாலைகள்.

17. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) : கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்குதல் நீங்கலாக மது விலக்கு.

18. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பதவி விலகல் 2–2–1980 அன்று ஏற்கப் பெற்றது.



1468

## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்.

1. திரு. சு. ம. துரைராஜ் : முதலமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. எம். வின்சென்ட் : நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. ஆனூர் ஜெகதீசன் : கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. பி. முசிரி புத்தன் : வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. ஐசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. எம். ஏ. ஜெயவேலு : சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ஆ. வெள்ளைச்சாமி : கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. ப. கோ. கிட்டு : போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

9. திரு. இரா. அருணாசலம் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

*Thiru PRABHUDAS PATWARI.*

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prevention of Corruption, Large Scale Industries, Mines, and Minerals.

2. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature, Public Works (Buildings) and Establishment matters relating to Public Works Department.

3. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)— Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)— Co-operation, and Registration.

5. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)— Revenue, Commercial Taxes, Excise, Census., Legislation on Money Lending, Legislation on Chits.

6. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control. Harijan Welfare, Stationery & Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

7. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

8. THIRU K. NARAYANASWAMI (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, and Registration of Companies.

9. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. THIRU K KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions, Rural Indebtedness, Bhoodan and Gramdan.



11. THIRU S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, and Accommodation Control.

12. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Textiles and Ports.

13. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

14. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)— Rural Industries including village, cottage and small Industries, Milk and Dairy Development and Wakfs.

15. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

16. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)— Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians— Overseas, Refugees and Evacuees ; and Correctional Administration.

17. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)— Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor Permit.

18. THIRU P. SOUNDARAPANDIAN—Resignation accepted on 2-2-80.

## PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU S. M. DURAIRAJ—Parliament Secretary to Chief Minister.

2. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

3. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

4. THIRU P. M USIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

5. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

6. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

7. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

8. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

9. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி. எல்.

### * மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. பி. எச் பாண்டியன்
திரு. பொ. சிகாமணி
திரு. என்.கிட்டப்பா
திரு. ர. ஜெபமணி

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (எஸ்டேட் அலுவலர்).

### தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 2.2.1980அன்று அறிவிக்கப்பெற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட)

| | தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே.எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பென்னகரம். |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ. வ.). |
| 8 | அர்ச்சுனன், திரு. வீ. .. | ஆரணி. |
| 9 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.). |
| 10 | அரங்கநாதன், திரு. அ. க. | வேலூர். |
| 11 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, சென்னை. |
| 12 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 13 | அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | நாமக்கல் (செ.வ.). |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம், சென்னை. |
| 16 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 19 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 20 | ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 21 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 22 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 25 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 27 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 28 | இராதா, திரு. எஸ். ஆர். | கும்பகோணம். |
| 29 | இராமச்சந்திர ரெட்டி, திரு. எஸ். | திண்டிவனம். |



| | தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 30 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்). | அருப்புக்கோட்டை. |
| 31 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர். | சாத்தூர். |
| 32 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 33 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 34 | இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.). |
| 35 | இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 36 | இராமசாமி, திரு. கே. என். கே. | கோபிசெட்டிபாளையம். |
| 37 | இராமசாமி, திரு. கொ. .. | சிவகாசி. |
| 38 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 39 | இராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோவில். |
| 40 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 41 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 42 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 43 | இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 44 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 45 | உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி. |
| 46 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 47 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 48 | உமாநாத், திரு. ரா. .. | நாகப்பட்டினம். |
| 49 | உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 50 | எட்மண்ட், மாண்புமிகு, திரு. க. உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 51 | எத்திராஜ், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 52 | ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பட்டு |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 53 | ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை. |
| 54 | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 55 | கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 56 | கணேசன், திரு. எஸ். .. .. | பூம்புகார். |
| 57 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 58 | கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 59 | கபாலி, திரு. டி. கே. | மயிலாப்பூர், சென்னை. |
| 60 | கரியமாணிக்கம் அம்பலம். திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 61 | கருணாநிதி, திரு, மு. .. | அண்ணா நகர், சென்னை. |
| 62 | கருணாநிதி, திரு, தாழை. மு. | திருவாரூர், (செ.வ.) |
| 63 | கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 64 | கருப்பசாமி பாண்டியன் திரு. வீ. | ஆலங்குளம். |
| 65 | கலியமூர்த்தி, திரு. துரை. .. | சிதம்பரம். |
| 66 | காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 67 | காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்). | திருப்பரங்குன்றம். |
| 68 | காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 69 | காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 70 | கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 71 | கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | பல்லடம். |
| 72 | கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 73 | கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 74 | கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 75 | கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 76 | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 77 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 78 | குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டிபூர் (செ.வ.) |
| 79 | குழந்தைவேலு, மாண்புமிகு, ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 80 | கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 81 | கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 82 | கோவிந்தராசன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 83 | கோவிந்தன், புலவர், கா. | செய்யாறு. |
| 84 | கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |
| 85 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |
| 86 | சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 | சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 88 | சண்முகம், திரு. கூத்தக்குடி ச. | திருப்பத்தூர். |
| 89 | சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 90 | சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 92 | சந்திரன், திரு. ப. .. .. | பெரணமல்லூர். |
| 93 | சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 94 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டினம். |
| 95 | சரஸ்வதி, மாண்புமிகு செல்வி. பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 96 | சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபனாசம். |
| 97 | சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம் விளக்கு, சென்னை. |
| 98 | சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 99 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.). |
| 100 | சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 101 | சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 102 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 103 | சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம், (ஆ.வா.) |
| 104 | சின்னசாமி, திரு. வி. கோ. | பவானிசாகர். |
| 105 | சின்னையா, திரு. வீ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 106 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி. |
| 107 | சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 108 | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 110 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 111 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 112 | சுப்பிரமணியம், திரு. ஆ. கி. | கடலாடி. |
| 113 | சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 114 | சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 115 | சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு. | உத்திரமேரூர். |
| 116 | சுப்பிரமணியன், திரு. ஒ. .. | சிவகங்கை. |
| 117 | சுப்பிரமணியன், திரு. மா., சின்ன சேலம் | சின்னசேலம். |
| 118 | சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 119 | சுப்ரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 120 | சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 121 | சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | மொடக்குறிச்சி. |
| 122 | வெற்றிடம் .. | சங்கரநயினார்கோவில், (செ.வ.) |
| 123 | சுவாமி தாஸ், திரு. அ. ... | பத்மநாபபுரம். |
| 124 | செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 125 | செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 126 | செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான், (செ.வ.) |
| 127 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 128 | செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர். (செ. வ) |
| 129 | செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 130 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர், (செ.வ.) |
| 131 | சோமசுந்தரம், திரு. ஒ. ப. | பொள்ளாச்சி. |
| 132 | சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 133 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 | சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி ஆர். (அமைச்சர்). | ஸ்ரீரங்கம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 135 | சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 136 | தங்கவேல், திரு. ர. சு. .. | வால்பாறை (செ.வ.) |
| 137 | தங்கவேலு கவுண்டர், திரு. போ. | மேலமலையனூர். |
| 138 | தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 | தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 140 | தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 | தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ. வ.). |
| 142 | தனுஷ்கோடி, திரு. கோ. | ராஜபாளையம் (செ. வ.). |
| 143 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 | திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 | துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 | துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 | துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரைராஜ், திரு. சு. ம. .. (முதலமைச்சரின் பேரவைச் செயலர்). | பொன்னேரி (செ. வ.) |
| 151 | துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 152 | தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 | நடராசன், திரு. ஆர். .. | பேரூர். |
| 154 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 | நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 | நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 | நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர். |
| 158 | நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 160 | பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 | பரமசிவம், திரு. மொ. | வானூர் (செ. வ.). |
| 162 | பரமசிவன், திரு. ஏ. எம். | மேலூர். |
| 163 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 | பழனிசாமி, திரு. சொ. நா. | அவிநாசி. |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.) |
| 168 | பாக்கியதாஸ் திரு, டி. .. | விளவங்கோடு |
| 169 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 170 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 171 | பாலகுரு, திரு. வெ. .. | சோழவந்தான். |
| 172 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர், சென்னை. |
| 173 | பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 174 | பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 175 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை-1, சென்னை. |
| 176 | புஷ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 177 | பெரியசாமி, திரு. டி.பி.எம். | மதுரை மேற்கு. |
| 178 | பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ.வ.). |
| 179 | பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 180 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 181 | பெருமாள் திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 182 | பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 183 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 184 | பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). | திருச்செங்கோடு. |
| 185 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ. வ.). |
| 187 | மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ. வ.). |
| 188 | மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 189 | மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) | பாளையங்கோட்டை. |
| 190 | மாணிக்கம், திரு. சி. | திருச்சிராப்பள்ளி-1. |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின். பெயர் (2) |
|---|---|---|
| 191 | மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 192 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்). |
| 193 | மாரிமுத்து திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 194 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 195 | முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | முசிரி. |
| 196 | முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி. |
| 197 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 198 | முத்துசாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 200 | முத்தையா, திரு. கே. கே. | மருங்காபுரி. |
| 201 | முருகேசன், திரு. கூ. ச. . | திருவரம்பூர். |
| 202 | முனிரத்தினம், திரு. இரா .. | கும்மிடிபூண்டி. |
| 203 | முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம். |
| 204 | முனுசாமி, திரு. பொ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 205 | யூசுப், திரு. யா. சை. மு. | ராதாபுரம். |
| 206 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 207 | ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 208 | ரகோத்தமன், திரு. கோ. | முகையூர். |
| 209 | ரசாக், திரு. எம். எம். ஏ. .. | கடையநல்லூர். |
| 210 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 211 | ராமதாஸ், திரு. பி. | போடிநாயக்கனூர். |
| 212 | ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 | ராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் கோவில் (செ. வ.). |
| 214 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 | ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல். (செ.வ.). |
| 216 | ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம், (செ.வ.). |
| 217 | லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 | லத்தீப். திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி. |

| தொடர்எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின். பெயர் (2) |
|---|---|---|
| 219 | வடிவேல். திரு. கு. .. | கரூர். |
| 220 | வரதராஜன். திரு. என். .. | திண்டுக்கல். |
| 221 | வரதராஜன். திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 | வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 223 | வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்). | நாகர்கோவில். |
| 224 | விஜயராகவன். திரு. பொ. | கிள்ளியூர். |
| 225 | வெங்கிடுசாமி என்கின்ற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | ஆத்தூர். |
| 227 | வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 228 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 | வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 230 | ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | செங்கல்பட்டு. |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 | ஜெபமணி, திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 233 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 | ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | காட்பாடி. |
| 235 | ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டாறு. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

மாண்புமிகு அமைச்சர்கள்—

1. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2. திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3. திரு. ஆர். எம். வீரப்பன்.
4. திரு. கே. நாராயணசாமி
5. திரு. எஸ். இராகவானந்தம்.
6. திரு. கே. இராசா முகமது.

தலைமை வழக்கறிஞர் —
திரு. வி. பி. இராமன்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வியாழக்கிழமை, 1980 பிப்ரவரி 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. இரங்கல் குறிப்புகள்

**முன்னாள் உறுப்பினர்கள் 1. திரு. பி. ஜெயராமன், 2. திரு. எம். கன்னியப்பன் ஆகியவர்களின் மறைவு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. ஜெயராமன் அவர்கள் 25-1-80 ஆம் தேதியன்றும், திரு. எம். கன்னியப்பன் அவர்கள் 5-2-80 ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை திரு. பி. ஜெயராமன் அவர்கள் வட ஆற்காடு மாவட்டம் பேரணாம்பட்டுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை திரு. எம். கன்னியப்பன் அவர்கள் சென்னை துறைமுகத் தொழிலாளர் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உறுக்குறியிட்ட வினாக்கள்

#### முன்கடன்கள் தீர்க்கப்பட நிலவள வங்கிக் கடன் வழங்கல்.

*வினா எண். 81—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிரதம நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்குத் தனி நபர்களிடம் பட்டுள்ள கடனை செலுத்திவிட கடன் வழங்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அந்தத் தொகையை அதிகப்படுத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ), (ஆ), (இ) : அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பெற்றுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இது சம்பந்தமாக அறிக்கை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் விவசாயிகள் தனிப்பட்டவர்களிடத்திலே அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நகைகளை எடுத்துக்கொண்டு சென்று வைத்துக் கடன் வாங்கினால் அந்த நகைகளை எடுத்துக்கொண்டு போய்விடுகின்ற நிலைமை நாட்டிலே இருக்கின்றது. ஆகவே இவைகளைப் போக்குகின்ற வகையில், நம்முடைய விவசாயிகள் தனிப்பட்டவர்களிடத்திலே பெற்றிருக்கக்கூடிய கடன்களையும் அடைத்து அவர்களுடைய நகைகள் போன்றவற்றை மீட்டுத் தருவதற்காக இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய ரிசர்வ் வங்கியினுடைய தற்போதைய நடைமுறைகளின்படி 10 சதவீதம் வரை முன் கடன்களைத் தீர்த்து இதுபோன்று விவசாயிகளுடைய சுமைகளைத் தீர்ப்பதற்கு நிலவள வங்கி இன்றையதினம் உதவி புரிந்து வந்து கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான பார்வைக்கு வைக்கிறேன்.

[*141ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]



திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, 1979-80 ஆண்டைப் பொறுத்த வரையில் நெல்லை மாவட்டத்தின் நிலவள வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் சில வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கப்படுவதாகவும் சில வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறதே, அவ்வாறு சில வங்கிகள் கடன் கொடுக்கக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருப்பதாகக் கூறுகிறார்களே, ஏன் இந்தப் பாகுபாடு ? இந்தப் பாகுபாடு காட்டாமல் எல்லா நிலவள வங்கிகளின் மூலமாகவும் கடன் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய துணைக்கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாக இல்லாத காரணத்தால் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் அறிக்கையிலே 10 சதவீதம் முன் கடனைத் தீர்ப்பதற்காகக் கடன் வழங்கப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதோடு அடமானக் கடன்களைப் பொறுத்தவரையில் முன் கடன் தீர்க்கக் கோரப்படும் கடன் மனுவின் தேதியிலிருந்து குறைந்தளவு 3 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றிருக்கவேண்டும் என்றும் அப்போதுதான் கடன்கள் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். நில அடமான வங்கி என்று இருந்து பின்னர் நிலவள வங்கியாக மாற்றப்பட்ட பிறகு 4, 5 ஆண்டுகளாகக் கடன்கள் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அப்படி கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளாக 10 சதவீதம் என்ற அடிப்படையில் நிலவள வங்கியின் மூலமாக 1976-77 ஆம் ஆண்டில் 46 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 36 இலட்சம் ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டில் 28 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாயும் முன் கடன்களைத் தீர்க்க நிலவள வங்கியினுடைய வாயிலாக நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள நிலவள வங்கியிலே இருந்து தனியாருக்குக் கடன்கொடுக்கின்ற வகையில் 10 சதவீதம் ஒதுக்கித் தந்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அப்படி 10 சதவீதம் கடன் வாங்குவதில் அநேகம் பேர் பினாமியாக போலி டாகுமென்ட்ஸ் கொடுத்து அதன் மூலமாகக் கடன் பெற்று வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, என்னிடத்திலே அந்த விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே அந்த விவரம் இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே அருள்கூர்ந்து அரசிடத்திலே அதைக் கொடுத்தால் உரிய நடவடிக்கைகளை அரசு விரைந்து எடுக்கும் என்று உறுதியாகச் சொல்கிறேன்.

திரு. பெ, சு. திருவேங்கடம் ; பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 10 சதவீதம் என்று சொல்கிறார்கள். அதேபோன்று தனிநபர்களிடத்திலே இருந்து வாங்கப்படும் கடன்கள் 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே போகக்கூடாது என்றும் அப்போதுதான் கடன்கள் வழங்கப்படும் என்று விதி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படுகின்றபோது இந்தமாதிரி பத்து சதவீதம் என்று இருப்பதைத் தளர்த்தியும் தனிப்பட்டவர்களுடைய கடன்கள் ரூபாய் 5 ஆயிரத்துக்கு மேல் போகக் கூடாது என்பதையும் தளர்த்தி, அந்த விவசாயிகளுக்கு சொத்து ஏதாவது இருக்குமேயானால் அதைப்பொறுத்து அவர்கள் கோருகின்ற கடனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவரவர்களே, இப்போது இருக்கின்ற நடைமுறைகள் இந்திய ரிசர்வ் வங்கியினாலே வரையறுக்கப்பட்டது. 10 சதவீதம் என்பதும் தனிநபருக்கு 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே கொடுக்கக் கூடாது என்பதும் விதியிலே இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அனுதாபத்தோடு இந்த அரசு தக்க நேரத்திலே பரிசீலனை செய்யும்.

திரு. ஒ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, நிலவள வங்கிகளை ஆரம்பிக்கின்ற காலத்தில் தனி நபர்களிடமிருந்து விவசாயிகள் கடன் வாங்குவது போக்கப்பட வேண்டும் என்பதற்





காகத்தான் பிரதானமாக இந்தக் கடன் வழங்கப்பட்டது. ஆனால் இப்போது பல நாட்களாக அவர்களுக்குப் பல பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக தனிப்பட்டவர்களிடம் பெருவாரியாகக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் அவ்வாறு தனிப்பட்டவர்களிடம் அதிகமாகக் கடன் வாங்குகிறார்கள். ஆகவே அவர்கள் கடன் பட்டுள்ள நிலையிலே அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே இந்த பத்து சதவீதம் என்பதை மேலும் நீட்டிப்பதற்கு ரிசர்வ் வங்கியிடம் கேட்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் நிலவள வங்கி தொடங்கப்பட்டபோது, முன் கடனைத் தீர்ப்பதற்கு மட்டும் என்ற அடிப்படையில் இந்த நிலவள வங்கி தொடங்கப்படவில்லை. வேறு பல காரியங்களுக்காகவும், விவசாயிகளுக்குத் துணை புரியவேண்டும் என்ற விழுமிய நோக்கத்தோடும் துவக்கப்பட்டது. குறிப்பாக நிலவள வங்கிகள் வழங்கும் மொத்தக் கடனில் 70 சதவீதத்திற்குக் குறைவில்லாமல், கிணறுகள் வெட்டுதல் மற்றும் ஆழப்படுத்துதல், பம்பு செட்டுகள் அமைத்தல், டிராக்டர்களை வாங்குதல் மற்றும் விவசாயக் கருவிகள் வாங்குதல் போன்ற நேரடியாகத் தெரியக்கூடிய விவசாய உற்பத்திக் காரியங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது நியதி. பிறகு 20 சதவீதம் வரை நிலச்சீர்திருத்தம், வடிகால் வசதி முதலான மறைமுக விவசாய உற்பத்திக் காரியங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது நடைமுறை. இறுதியாக 10 சதவீதம் என்பது முன்கடன்களைத் தீர்த்தல், நிலங்களை விலைக்கு வாங்குதல் முதலிய காரியங்களுக்காக அளிக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்திய ரிசர்வ் வங்கியினுடைய விதிகளில் ஆரம்ப காலத்திலிருந்தே இருப்பது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சுப்பிரமணியம் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 9.10]

டாக்டர் கே. சமரசம் : இதுபோன்ற கடன்கள் தமிழ் நாட்டில் சில நிலவள வங்கிகளில் கொடுப்பது சமீபத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தத் தடையை நீக்கி தாராளமாக கடன்கள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அப்படிப்பட்ட தகவல் அரசிடம் இல்லை. அப்படிப்பட்ட விவரங்கள் இருந்தால் அருள்கூர்ந்து உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் பார்வைக்கு அதை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் காலத்தில் எல்லாம் ரிசர்வ் பாங்க் சட்டம் குறுக்கே நிற்கிறது, குறுக்கே நிற்கிறது என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் குறுக்கே நிற்கிற, தடங்கலாக இருக்கிற ரிசர்வ் பாங்க் சட்ட திட்டங்களை மாற்றுவதற்கு தமிழகஅரசு ஏதாவது முயன்றிருக்கிறதா ? என்ன ப்ரோகரஸ் இருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அது நிர்வாக பிரச்னை. அவ்வப்போது ரிசர்வ் பாங்கிடம் நாங்கள் சில சிரமங்களைச் சந்திக்க நேரிடும்போது அவர்களிடம் வாதாடிக் கொண்டுதான் வந்து கொண்டிருக்கிறோம், அவர்களின் மேலான பரிசீலனைக்கு வைத்துக்கொண்டுதான் தமிழக அரசு இருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள் : நிலவள வங்கிகள் மூலம் பெரும் பாலும் கிணறுகள் வெட்டவும், மோட்டார்கள் வாங்கவும் கடன்கள் அதிகமாகக் கொடுக்கிறார்கள், பல கோடி ரூபாய்க்கு. அந்தக் கடன்களை வசூல் செய்யும்போது விவசாயிகள் சங்கத்தில் நான் மெம்பராக இருக்கிறேன், ஆகவே நான் கடனைக் கட்ட இயலாது என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன் களை வசூலிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மூலக் கேள்விக்கு இது உடன்பாடுடையதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்றைக்கு கூட்டுறவு நிலவள வங்கிகள் சிலயிடங்களில் சரியான முறையில் நடைபெறுகின்றன, சிலயிடங்களில் சரியானமுறையில் நடைபெறவில்லை. இதற்குக் காரணம், ஆங்காங்கு வசூலாகாமல் இருக்கக்கூடிய நிலுவைதான் காரணம் என்று அரசாங்கத் தரப்பிலிருந்தும் சொல்லப்படுகிறது, வெளியேயும் சொல்லப்படுகிறது. சில நிலவள வங்கிகள் செயல் படாமல் ஸ்தம்பித்திருப்பதற்குக் காரணம் சரியானமுறையில் வசூலாகாமல் இருப்பதுதான். மேலும் தேர்தல் நடக்கவில்லை, இதில் தேர்தல்கள் வைக்க ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் ? அபிஷியல்ஸ், நான்-அபிஷீயல்ஸ் இருந்தால்தான் இது செயல்பட முடியும். ஆகவே தயக்கம் இல்லாமல் தேர்தலை வைக்க அரசு முன்வருமா ?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் சொன்ன உணர்வுகளை மனதில் வைத்துக் கொண்டு தான் இன்றைக்கு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு மசோதாவைக் கொண்டு வந்து அது ஆய்வில் இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று மாவட்டங்களுக்குச் சென்ற பிறகு விரைவில் நிச்சயமாக இந்த கண்ணியம் மிக்க சபையில் அது நிறைவேற்றப்பட்டு உறுப்பினர் அவர்கள் விரும்புவதுபோல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிச்சயமாக விரைவில் எவ்வளவு விரைவில் வர முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தல் நடத்தி பொதுமக்கள் பிரதிநிதிகள் மத்தியில் அது ஒப்படைக்கப்படும்.

திரு. வி. கோ. சின்னசாமி : ஒரு பஸ் முதலாளி இருக்கிறார் என்றால் அந்த பஸ் முதலாளி ஒரு சேட்டிடமோ அல்லது வேறு ஒருவரிடமோ பஸ்ஸை அடமானம் வைத்து ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் பெறுகிறார்கள். அதேபோன்று விவசாயிகள் நிலங்களை ஒட்டுமொத்தமாக பரப்பு எவ்வளவு வருகிறது என்று கணக்கெடுத்து அதன் அடிப்படையில் அவரவர்களுக்குத் தேவைப்படுகிற ரூபாய் எவ்வளவு வேண்டுமானாலும் சொத்து மதிப்பை வைத்துக் கடன் கொடுக்க அரசு சட்டதிட்டங்களை மாற்றி இனிமேலாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### கோவிலாங்குளம் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

*வினா எண் 82—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அருப்புக்கோட்டைத் தாலுகா கோவிலாங்குளம் கிராமம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் ரூ. 8,159 கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் யாரால் கையாடல் செய்யப்பட்டுள்ளது ?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

[1980 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) அருப்புக் கோட்டை தாலுகா கோவிலாங்குளம் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் ரூ. 7,640 கையாடல் நடைபெற்றுள்ளது என்பது தமிழ்நாடு கூட்டுறவு வங்கி சட்டம் 65 பிரிவின்கீழ் நடத்தப்பட்ட விசாரணை மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

(ஆ) கையாடல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. வி. பால்ராஜ் மற்றும் சங்கத்தின் முன்னாள் இளநிலை மேற்பார்வையாளர் செயலர் திரு. எஸ். சௌந்தையன் ஆகியோர் ஆவர்.

(இ) கையாடல் தொகையை திரும்பப் பெற முன்னாள் தலைவர் மீதும் செயலாளர் மீதும் சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களின் அசையா சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பணத்திற்காக ஜப்தி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கையாடல் புரிந்த செயலாளர், கூட்டுறவு இலாகாவின் அதிகாரி என்று கருதுகிறேன். அவர்மீது அதிகாரப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் குற்றச்சாட்டிலே ஈடுபட்டிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இன்றையதினம் அந்தச் செயலாளர் சௌந்தையன் என்பவர் இராமநாதபுர மாவட்ட வங்கியிலிருந்து தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. கையாடல் செய்ததாக கூறப்பட்ட முன்னாள் தலைவர் மீதும், செயலாளர் மீதும் இன்றையதினம் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய அசையா சொத்துக் களை ஜப்தி செய்திருக்கிறோம். செயலாளர் இன்றையதினம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதைப் போலவே, அந்தத் தலைவர் பொறுப்பிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.



1980 பிப்ரவரி 7]

## நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு மனைப்பட்டாக்கள்.

*வினா எண் 83— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவசமாக மனைப் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் 10 நிருபர் களுக்கு 22 தவணைகளில் காலக் கிரையத் தொகை (Market Value) செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தற்காலிக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் மனைக்கான முழுக் கிரயத்தையும் செலுத்தி விட்டபடியால் அவருக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது 10 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப் பட்டதாகவும், அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டு பணம் வழங்கிய தாகவும் சொன்னார்கள். எந்த ஊரிலே இந்த மனைப் பட்டா வழங்கப்பட்டது ? என்ன கிரயம் ஒரு மனைக்கு போடப்பட்டிருக் கின்றது என்பதை அறிய முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மனைக் கிரையம் மார்க்கெட் வேல்யூபடி போடப்பட்டிருக்கின்றது.

## நிலவரி முதலியவைகளுக்கான ரசீதுகள்.

*வினா எண் 84—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கிராம அதிகாரிகள் வசூலிக்கும் நிலவரி, நீர் வரிக்கான ரசீதுகளை தமிழில் எழுத அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

[1980 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) கிராம அதிகாரிகள் ஏற்கனவே தமிழில் உள்ள ரசீதுகளைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள்.

கிராமங்களில் பயன்படுத்தப்படும் எல்லாப் படிவங்களும் பதிவேடுகளும் இப்போது தமிழில்தான் உள்ளன. அதில் ரசீது புத்தகமும் அடங்கும். ரசீது புத்தகம் தமிழில் இருப்பதால் கிராம அதிகாரிகளும் தமிழில்தான் ரசீது எழுதுவார்கள் என நம்பப்படுகிறது. அதற்கென தனியே உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் பயன்படுத்துகின்ற ரசீதுகளில், வட்டாட்சி, கோட்டாட்சி அலுவலகங்களிலிருந்து தரப்படுகின்ற ரசீதுகள் இனிமேலாவது தமிழில் அச்சடிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே தமிழில் வரவேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்குத் தமிழில் எழுத வேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, பிர்க்கா என்பதற்குப் பதில் சரகம், வருவாய் சரகம் என்றும் தாலுகா என்பதற்குப் பதில் வட்டம், வருவாய் வட்டம் என்றும், அதேபோல் வருவாய் கோட்டம் என்றும் எழுத வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், கிராம முன்சீப்புகளால் கொடுக்கப்படுகின்ற ரசீதுகளிலே அந்த நிலத்தின் நெம்பர் போடப்படுவதில்லை. அதனால், தவறு ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, அந்தத் தவறுகளை நீக்குவதற்கு இனி அந்த ரசீதுகளில் சர்வே நெம்பர்களைப் போடுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராம அதிகாரிகள் நீண்டகாலமாக இப்படிச் செய்துகொண்டு வந்ததாகத் தெரிகிறது. அதைப் போக்குவதற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகளாக எவ்வளவு முடியுமோ, அவ்வளவு முயற்சிகளும் செய்துகொண்டிருக்கிறோம். இன்னும் பல சீர்திருத்தங்கள் செய்ய, நீங்களும் உதவி கரமாக இருக்க வேண்டும்.



1980 பிப்ரவரி 7]

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் தமிழில் அச்சடித்த ரசீது கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அச்சடித்த ரசீது தராமலேயே, வெள்ளைக் காகிதத்தில் எழுதிக் கொடுத்து வருகின்றார்களே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: குறிப்பிட்ட பெயர்களைச் சொன்னால் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பிர்க்கா, தாலுகா என்பதைச் சரகம் வட்டம் என்று மாற்றுவதைப் பற்றி மட்டும் சொல்லவில்லை எந்த வரி விதித்திருக்கிறோம், என்ன வரி விதித்திருக்கிறோம், என்பதைத் தமிழில் தெளிவாக எழுதாத காரணத்தால். 50 காசு 1 ரூபாய் என்று போட்டு ஏமாற்றி வாங்கும் முறை இருக்கும் காரணத்தால் அதை எல்லாம் தமிழில் தெளிவாக எழுதுவதற்கான வழிவகைகளை அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எல்லாமும் எல்லா இடங்களிலும் தமிழில்தான் நடக்கிறது. 1963-64 ஆம் ஆண்டில் சில கிராமங்களில் ஆந்திர மாநிலத்திலிருந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கு தமிழ் தெரியாமல் தெலுங்கிலே எழுதி வருகிறார்கள். இப்போதுதான் அந்தப் பகுதிகள் எல்லாம் முறைப்படி நம்முடைய மாநிலத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தமிழிலே எல்லா இடங்களிலும் கொண்டு வர எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல்: கிராமதிகாரிகள் தங்களுடைய வேலைகளை அவர்களுடைய வீடுகளையே அலுவலமாக வைத்து செயல்படுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்குப் பெரிய சிரமம் ஏற்படுகிறது. அவர்களிடத்திலே பணிந்து போகும் தன்மையும் ஏற்படுகிறது, ஆகவே, அவர்களுக்கு முறையான அலுவலகங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நிதிநிலை சரியாக இருந்தால் அதைப் பற்றி அரசு யோசிக்கும்.

திரு. வி. கோ. சின்னசாமி: ரசீது புத்தகத்தில் பல விவரங்கள் இருக்கின்றன. அந்த விவரங்கள் அத்தனையும் பூர்த்தி செய்யப்படுவதில்லை. அப்படிப் பூர்த்தி செய்யப்படாததன்

காரணமாக பல தவறுகள் ஏற்படச் சந்தர்ப்பம் ஏற்பட்டு மீண்டும் வசூலிக்கும் சந்தர்ப்பங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும் முறையில் விவரங்கள் அத்தனையும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட குறைபாடுகள் நீண்ட பலகாலமாக இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்று இந்த அரசு இப்போது கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டப்படி கிராமங்களில் இருக்கும் கூட்டுப் பட்டாக்களைத் தனிப் பட்டா ஆக்கவும், ரசீதுகளில் தேவையானவற்றை முறைப்படி பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்கும் இந்த அரசு முறையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. வி. கோ. சின்னசாமி ; ஒருசில மிகவும் வசதி படைத்தவர்கள் ஊரில் பெரியவர்கள் என்று கருதப்படுகிறவர்கள் சில பேர் கிராம முன்சீபுகளாக இருப்பவர்கள் மணியக்காரர் என்று வேறு ஒருவரை நியமித்து வசூலிக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமாதிகாரிகளை மாற்றி கிராம மக்களுக்குத் தொடர்புடையவர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிராமாதிகாரிகளானாலும் சரி, மாவட்ட ஆட்சித் தலைவரானாலும் சரி, வருவாய் அதிகாரியானாலும் சரி அவர்களுக்கு எங்கே வேலை இருக்கிறதோ அங்கேதான் தங்கவேண்டும், குடியிருக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவை மீறி யாராவது நடப்பார்களானால் விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்செண்ட் : ஜாயிண்ட் பட்டா என்ற முறையில் ஒருவருடைய பெயருக்குப் பட்டா வழங்கப்பட்டு, பின்னர் பல பேருக்குக் கிரையம் செய்யப்பட்ட பின்பும் கிராம அதிகாரிகள் வரி வசூலிக்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அப்படிப்பட்ட கூட்டுப் பட்டா இருப்பதால்தான் சங்கடம் என்று அதைத் திருத்த இப்போது நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டு 28 வட்டங்களில் வேலை நடந்து கொண்டிருக்கிறது. எல்லா வட்டங்களிலும் விரைவில் அந்தப் பணி நடைபெற்றால் இந்தக் குறைபாடு நீக்கப்படும்.



## Trawlers puschased from Mexico

*Q. No. 85 Tairu SALEM M. ARUMUGAM: Will the Hon. t e Ministeror Food be pleased to state :

(a) Whether the State Fisheries Corporation has purchased a number of Trawlers from private firms at Mexico ; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைமுன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பெற்றுள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மெக்சிகோவிலிருந்து 80 லட்சம் ரூபாயில் இழு படகுகள் வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வாங்கிய படகுகள் லாபத்தில் நடக்கின்றனவா அல்லது நட்டத்தில் நடக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; இரண்டு இழு படகுகளும் நல்ல லாபத்தைத்தான் கொடுக்கின்றன.

திரு. ந. தனசேகரன் ; லாபத்தில் நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். லாபத்தில் நடக்கிற காரணத்தால் மேலும் ஐந்தாறு இழு படகுகளை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவர் அவர்களே, தனியார் கம்பெனியிடமிருந்து இந்தப் படகுகள் வாங்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அந்தப் படகுகள் நம்முடைய நாட்டிலே, இந்தியாவிலேயே வாங்குவதற்கான சூழ்நிலை இல்லையா? இந்தியாவிலேயே அவைகளைத் தயார் செய்து கொடுக்கும் கம்பெனிகள் இல்லையா? அங்கே சென்று வாங்கியதன் நோக்கம் என்ன? அப்படி வாங்கியபோது வேறு எந்த கம்பெனியாகிலும் அதை செய்கிறார்களா என்று பார்க்கப்பட்டதா? ஏனென்றால் ஒரு சைக்கிளை வாங்கவேண்டுமென்றாலும்கூட நாம் 4, 5 இடங்களைச் சுற்றிப் பார்த்துத்தான் வாங்குகிறோம். அந்த முறையிலே 80 லட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட இந்தப் படகுகள் தனியார் கம்பெனியிலிருந்து வாங்கப்பட்டு இருக்கிற காரணத்தால் வேறு எந்தக்

* 139–140ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1980 பிப்ரவரி 7

கம்பெனிக்கும் சென்று பார்த்து அதன் பிறகு வாங்கப்பட்டதா? டெண்டர்கள் மூலம் வாங்கப்பட்டதா அல்லது தரகர்கள் மூலம் வாங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய ஒப்புதலோடு அவர்களுடைய ஆலோசனையின்பேரில் 1975 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது மெக்சிகோவிலிருந்து இழு படகுகளை வாங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. அருமையாக சுருக்கமாகச் சொல்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தாங்கள் சொலவதைப் பார்த்தால் அவர் தான் சுருக்கமாகச் சொல்கிறார், மற்றவர்கள் சுருக்கமாகச் சொல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்வதைப்போல இருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பலமுறைகள் அவர்கள் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டார்கள். இன்றைக்கு அவர்கள் சுருக்கமாகச் சொன்னார்கள், அதற்காக அவர்களுக்கு நன்றி என்றுதான் சொன்னேன்.

மீனவர்களுக்கு வழங்கப்பட்ட விசைப்படகுகள்.

*வினா எண் 86—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1979 ஆம் ஆண்டில், மீனவர்களுக்கு விசைப்படகு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: (அ) & (ஆ) பேரவையின்முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப் பெற்றுள்ளது.

*140-141ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1980 பிப்ரவரி 7]

திரு. ந. தனசேகரன்: தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்குகிற நேரத்திலே உண்மையிலேயே ஏழை எளிய மீனவர்களுக்குக் கிடைப்பதில்லை என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றதா? அப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாத அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் அப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் மீனவர்களிடமிருந்து வரவில்லை.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மீனவர்களுக்குத் தேவையான பிளாஸ்டிக் படகுகள் வழங்கப்பட்டிருக்கிறதா? அரசு மானியத் தொகை அளிப்பதன் மூலமாக அவைகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கண்ணாடி இழை படகுகள், அவுட் போர்டு எஞ்சின், பொருத்தி மீனவர்களுக்குக் கொடுக்கின்ற முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அது வெற்றியைத் தருமானால் தமிழ் நாட்டிலே உள்ள மீனவர்களுக்கு கண்ணாடி படகுகள், இயந்திரங்கள் பொருத்தப்பட்டு கொடுப்பதற்கு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையில் ஒரு படகின் விலை 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வரை இருக்கிறது. படகு வேண்டுவோர்கள் 5 சதவீதம் ரொக்கமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது, 10 சதவீதத்தை மானியமாகக் கொடுத்துவிட்டு மீதத்தைக் கடனாகக் கொடுப்பதாகச்சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் 12.14% வட்டி, கொள்ளை வட்டி வசூலிப்பதால் மானியம் கொடுப்பதிலே பிரயோசனமே இல்லாமல் போய்விடுகிறது. மீனவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கடனுக்கான கொள்ளை வட்டியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வழங்கப்படுகிற நேரத்திலே 10 சதவீதம் அரசு மானியம் கொடுப்பதைத் தவிர மீதத் தொகை கடனாகக் கொடுக்கப்படுகிறது. படகு வேண்டுகிறவர்கள் 5 சதவீதம் ரொக்கமாகக் கட்ட வேண்டும்.

[1980 பிப்ரவரி 7

கடனாகக் கொடுக்கப்படுவதில் 15 சதவீதம் அரசு வழங்கும், மீதம் ஏ. ஆர். டி. சி. மூலமாக வழங்கப்படுகிறது, அவர்களிடமிருந்து பணத்தைப் பெற வேண்டியிருக்கின்ற காரணத்தால் அவர்கள் நிர்ணயிக்கிற வட்டி விதத்தை நாம் மீனவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு வேறு மாற்று முகாந்திரம் காணக்கூடிய நிலை இல்லை. அரசு அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, அந்தப் படகுகளை அரசாங்கம் நேரடியாக வாங்குகிறதா அல்லது புரோக்கர்கள் மூலமாக வாங்குகிறார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அரசு அவைகளை வாங்கிக் கொடுப்பதில்லை. அரசு படகு கட்டுகிற துறைகளிலே அந்தப் படகுகள் கட்டப்படுகின்றன.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு விசை படகுகள் வழங்குவதற்கு 5 சதவீதம் ரொக்கம் செலுத்த வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் முன்பணம் கட்ட முடியாத சூழ்நிலை மீனவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, 15 சதவீதம் கடன் தொகையோடு அந்தத் தொகையையும் கடனாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு அப்படிப்பட்ட சங்கடமான நிலை இருக்கிறது. ஆகவே அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-30]

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர்களே, விசைப் படகுகளை அரசாங்கமே உற்பத்தி செய்கிறது என்று கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாகப்பட்டினம், சென்னை, தூத்துக்குடி ஆகிய மூன்று இடங்களிலே உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். அங்கே உள்ள உற்பத்தித் தளங்களை மூடும் யோசனை ஏதாவது உண்டா? இருக்கின்ற வெப்பாசிட்டிக்குயு குறைவாக அங்கே உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா? அடப்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் வலைவர்களே, மீன் வளர்ச்சிக் சழகத்திற்குச் சொந்தமான மீன்பிடி படகுகள் கட்டும் திட்டத்தை முடக்கும்



980 பிப்ரவரி 7]

உத்தேசம் நிச்சயமாக அரசுக்கு இல்லை. அதைப்போல, றைந்த வேலைத் திறன் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அதைத்தான் அங்கே பணியாற்றும் ஊழியர்களிடம் இந்தத் துறை வற்புறுத்தி வருகிறது.

திரு. ஒ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்படும் படகுகள் 1,82,000 ரூபாய் விலையாகவும் தனியார் கட்டும் படகுகள் 1,30,000 ரூபாய் விலையாகவும் இருக்கிறது. ஆகவே, சுமார் 50,000 ரூபாய் விலை வித்தியாசமிருப்பதால் மீன்பிடிக்காரர்கள் தனியாரிடம் சென்று வாங்கும் நிலைமையிருக்கிறது. மண்டபம், நாகபட்டினம் போன்ற இடங்களில் கட்டப்பட்டிருக்கும் பல படகுகள் விற்பனையாகாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? இதை நிவர்த்தி செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? அங்கிருப்பவர்கள் சொல்லும் காரணம், ஏதோ நல்ல மரம் பயன்படுத்தப்படுவதாகவும், சிறந்த ஆணிகள் போடுவதாகவும் சொல்கிறார்கள். இவ்வளவு விலை வித்தியாசம் இருப்பதால்தான் மீன் வளர்ச்சிக் கழகத்திடம் வாங்குவதைவிட தனியாரிடம் படகுகளை வாங்குகிறார்கள் என்று கூறப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான மூன்று படகு கட்டும் நிலையங்களிலும் கட்டப்படும் படகுகள் ஏற்கனவே எல்லாம் விற்றாகிவிட்டது. ஆகவே, விற்காமல் இருக்கிறது என்ற கேள்விக்கே இடமில்லை. கட்டப்படும் படகுகள் போதவில்லை எனற நிலைமைதான் இந்தத் துறையிலே இப்பொழுது இருக்கிறது. தனியார் கட்டுவதைவிட மீன் வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்படும் படகுக்காக விலை அதிகம் என்பது உண்மைதான். காரணம், அங்கே பல பிரச்னைகள் இருக்கின்றன. தொழிலாளர் ஊதியம், கொடுக்கப்படும் போனஸ், வேலை செய்யும் நேரம், அத்தனையும் இருப்பதால்தான் தனியார் கட்டும் படகுகளின் விலையைவிட இங்கே விலை அதிகமாக இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவரவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான படகு கட்டும் தளங்கள் யானையைக் கட்டித்தீனி போட்டுக் கொண்டிருப்பதைப் போன்ற நிலையில் இருப்பது தெரியுமா? அப்படி அதிகப்

பணம் படகு கட்டும் தளங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதன் காரணமாக மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாவது அரசுக்குத் தெரியுமா? அதற்கு நிவாரணம் என்ன என்பதைச் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நஷ்டம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவும், எற்படும் நஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகவும்தான் கண்ணாடி இழை படகுகளை அங்கேயே தயாரிக்கலாமா என்பது பற்றி—இயந்திரங்களைப் பொருத்தி கண்ணாடி இழை படகு தயாரிப்பையும் இந்தப் படகு கட்டும் நிலையமே ஏற்கலாமா என்பதை மீன் வளர்ச்சிக் கழகம் தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

## Purchase of fishing boats

* Q. No. 87—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Food be pleased to state:

(a) Whether a number of fishing boats are to be acquired by the Tami Nadu Government: and

(b) if so, the details therecf?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) & (ஆ) விவரமான பதில்* அவை முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 88

திரு. சென்னை மு. அரங்கநாதன்: (உட்கார்ந்து கொண்டே) தலைவரவர்களே .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி உட்கார்ந்து கொண்டே பேசுவதும், அழைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: வேண்டுமென்றே இப்படிச் செய்கிறீர்கள். ஏன் இதே மாதிரி செய்கிறீர்கள்?

* 142ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நடவடிக்கை எடுப்பேன். இப்படியே நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. சென்னை மு. ஆரங்கநாதன்: நடவடிக்கை எடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்து கொண்டே பேசுவது முறையா? உட்கார்ந்து பேசுவதும், அனுமதியில்லாமல் எழுந்து பேசுவதும் சரியல்ல, நீங்கள் உட்காருங்கள். முதலிலே மரியாதை தெரிந்து கொள்ளுங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நான் மரியாதையாகத் தான் நடந்து கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உங்கள் தலைவருக்காவது கட்டுப்படுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, நடவடிக்கை நடவடிக்கை என்று சொல்கிறீர்களே.. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு என்ன சம்பந்தம்? நான் அவரோடு பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: மீனவ சமுதாயத்தைப் பற்றி.. .. .. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? புருஷோத்தமனை நேற்றும் பார்த்தேன். கண்டபடி எழுந்து பேசுவதுதான் முறையென்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? மற்றக் கட்சிக்காரர்கள் இப்படியா தொல்லை தந்து கொண்டிருக்கிறார்கள்?

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நீங்கள் முதலில் சபாநாயகராக நடந்து கொள்ளுங்கள், கட்சிக்காராக நடந்து கொள்ளாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் இனிமேல் இப்படிப் பேசுவதை அனுமதிக்க முடியாது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: இது என்னுடைய தொகுதிப் பிரச்சினை. அனுமதிக்கவில்லை என்றால் நான் சபையை நடத்தவிட மாட்டேன் .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் அனுமதியில்லாமல் பேச உங்களுக்கு அனுமதியில்லை. (திரு. சென்னை மு. அரங்கநாதன் நின்று கொண்டிருந்தார்) உட்காருங்கள். நான் நின்று கொண்டிருக்கிறேன். சபையை நடத்த விட மாட்டேன் என்று நீங்கள் சொன்னதை முதலில் திரும்பப் பெற வேண்டும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நீங்கள் ஒன்—சைடாக நடக்க மாட்டேன் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் திரும்பப் பெறப் போகிறீர்களா இல்லையா? என்னைக் கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. திரும்பப் பெறாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நடவடிக்கை எடுங்கள். நான் பயப்படமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் யாருக்குப் பயப் பட்டீர்கள் தலைவருக்கும் பயப்படப்போவதில்லை. உங்கள் கட்சிக்கும் பயப்படப் போவதில்லை. சபையை நடக்கவிட மாட்டேன் என்று சொன்னதை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் நான் விடுவதாக இல்லை. அவைக்குத் தரவேண்டிய மரியாதையைத் தர வேண்டாமா?

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தங்களது இருப்பிடத்திற்கு தாங்கள் ஏற்றிருக்கிற பொறுப்புக்கு மரியாதை தருகிற கடமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்பதை நானும் அவருக்கு நினைவூட்டுகினறேன். அதே நேரத்தில் சில உறுப்பினர்களுக்கு, சில பிரச்னைகளில் நேரடியாக ஏதாவது ஒரு விதத்திலே பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆகவே உணர்ச்சி வசப்பட்டு கேள்வி கேட்க வேண்டும் என்ற துடிப்போடு வற்புறுத்துகிறார்கள். அப்படி வற்புறுத்துகிறபோது, தாங்கள்





திடீரென்று தங்களுக்கு மாறுபாடான கருத்தைச் சொல்கிறார் என்ற காரணத்தினாலே அவர்களுக்கு இதிலே சம்பந்தம் இல்லை என்று சொல்லுகிறீர்கள். உறுப்பினர்கள் எல்லோருக்கும் சம்பந்தம் உள்ளது. ஆனால் இதிலே நேரம் இல்லை என்று தாங்கள் சொல்ல முடியும். இப்படி ஒரு சில சூழ்நிலை வந்து விடுகிறபோது ஏதோ தங்களுடைய உரிமையை வலியுறுத்துவதாக எண்ணிக் கொண்டு அவர்கள் பேசுகிறார்கள். இந்த உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையை தாங்கள் மேலான இடத்தில் இருக்கிற காரணத்தால்.. .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் சமாதானம் செய்வதை நான் ஏற்றுக் கொள்ள இயலாததற்கு வருந்துகிறேன். அவர்கள் உட்கார்ந்து கொண்டே குரல் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் அப்படிக் கேட்பதில்லை. மற்ற எதிர்க்கட்சிக்காரர்களும் அப்படிச் செய்யவில்லை. உட்கார்ந்து கொண்டே குரல் கொடுப்பதும், சிரித்துப் பேசுவதும் போன்ற நிகழ்ச்சிகளை நீங்கள் அனுமதிக்கச் சொல்கிறீர்களா? இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேராசிரியர் அவர்கள் உண்மையிலேயே சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயார். இந்த அவையில் உட்கார்ந்து கொண்டே என்னைக் கூப்பிடுவதும், சிரித்துப் பேசுவதும், அங்கிருந்தே குரல் கொடுப்பதும் இந்த அவையினுடைய மரபுக்கு அழகா? எத்தனை முறை நான் பொறுத்துக் கொள்வது? சபையை நடத்த விடமாட்டேன் என்று சொல்லுகிறார். அவர் அப்படிச் சொன்னதை திரும்பப் பெறாவிட்டால், நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: நான் சொன்னது என் தொகுதியைப் பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு விஷயம். அது என் கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம், அல்லது என் பார்வையில் படாமல் போயிருக்கலாம். முதலில் நீங்கள் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: என்னுடைய கட்சியின் பொதுச் செயலாளர் வேண்டுகோளுக்கு இணங்க நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

சொன்னார். அவரைத் தாங்கள் நன்றாக அறிந்தவர். அதைத் தாங்கள் வேறு விதத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

## பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு திரையரங்கு கழகத்தின் மூலம் கடன் வழங்கல்.

*வினா எண். 89 திரு. து புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு கூட்டுறவு முறையில் திரையரங்கு அமைப்பதற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் மூலம் கடனுதவி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கூட்டுறவு முறையில் திரை அரங்கு அமைப்பதற்குக் கடனுதவி அளிக்கும்போது படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென தமிழ்நாடு திரையரங்கு கழகத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. திரையரங்கு கழகத்தின் சங்க அமைப்பின் விதிக் குறிப்பில் கண்டுள்ள சங்கத்தின் நோக்கம் பற்றிய விதிகள் திருத்தியமைத்த பிறகு நிதியுதவி வழங்கப்பெறும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு தியேட்டர் கார்ப்பரேஷன் நிதி தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். படித்த பட்டதாரி என்றால் ஆர்ட்ஸ் படித்தவர்களா, சயன்ஸ் படித்தவர்களா, எம்.பி.பி.எஸ்., பி.இ. என்று இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கும் கடன் உதவி அளிக்கப்படுகிறதா அல்லது கலைத் துறையில் சினிமாத் துறையில் ஏதாவது பட்டம் படித்தவர்களுக்கு மட்டும் தான் கடன் உதவி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன். அதைப்போல், கடன் பெறுகிறவர்கள், 'இனிசியல் கேப்பிடல்' முதலீடு எவ்வளவு செலவிட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு உள்ளதா? இது வரையில் எவ்வளவு பேருக்கு இப்படிக் கூட்டுறவு முறையில் கடன் வசதி செய்யப் பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, பல்கலைக் கழகத்திலே பி.ஏ., எம்.ஏ.



போன்ற பட்டங்கள் பெற்றவர்கள்தான் பட்டப்படிப்பு படித்த வர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த அரசு அந்தக் கழகத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது. அடுத்தடுத்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள் கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் பதிலிலிருந்து அந்தக் கழகம் திரைப்பட அரங்குகளுக்குக் கடன் அளிப்பதற்காக இருக்கிற கார்ப்பரேஷன் என்று தெரிகிறது. இதுவரையில் எத்தனை பேர் கடன் கேட்டிருக்கிறார்கள், மாவட்ட வாரியாக? எத்தனை பேர்களுக்கு திரையரங்கு கட்டுவதற்காகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இது பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதான கேள்வி. ஆகவே, தயவு செய்து உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் பட்டதாரிகள் என்று சொன்னார்கள். அப்படியானால் பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி., படித்தவர்களை எப்படிக் கருதுவது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, பி. ஏ., எம். ஏ. போன்ற பட்டப்படிப்பு என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, பட்டதாரி களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி யானால் பட்டதாரி அல்லாதவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்களா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்பது தான் கழகத்தின் நோக்கம். ஆனால் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது எங்களுடைய கொள்கை.

## சிறைக்காவலர் பயிற்சி நிலையம்.

*வினா எண்.90—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறைச் சாலைகளில் கைதிகள் நடத்தப்படும் விதம் குறித்து வார்டர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனின் அதன் விபரம் என்ன?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மத்திய சிறையில் சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சிறைக் காவலருக்கு 6 மாத காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு தொகுப்பில் 48 காவலர்கள் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். பயிற்சி காலத்தில் சிறை சம்பந்தப்பட்ட பல பொருட்கள் பற்றி விரிவுரை செய்யப்படுகிறது. சிறைவாசிகள் சிறையில் நடத்தப்படும் விதம், கைதிகளை வகைப்படுத்தல், கைதிகளை அனுமதித்தல், பொது ஒழுக்கமும் நடைமுறைப்பணியும், உணவு, உடை, நேர்காணலும், சிறை வாசியின் வெளித் தொடர்பும், மாற்றல், விடுதலை போன்ற பல விதி முறைகள் தெளிவாக விளக்கப்படுகின்றன. பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில் 40% மதிப் பெண்கள் பெற்றால்தான் பயிற்சி பெறும் சிறைக்காவலருக்கு தகுதிகாண் பருவத்தின் நிறைவு உறுதி செய்யப்படுகிறது.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த சிறைச்சாலைகளிலே நல்ல நிலையை உருவாக்க மேலோட்டமாக விதிமுறைகளை வைத்திருக்கிறார்கள். ஆயுள் தண்டனை போன்ற பெரும் தண்டனை பெற்று, நீண்டகாலமாக சிறையிலே இருப்பதால் அவர்களுக்கு விரக்தி ஏற்பட்டு விபரீதம் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்காக கேரளத்தில் இப்போது பொறுப்பு ஏற்றிருக்கிற ஐக்கிய முன்னணி ஆட்சியினர் 7, 8 ஆண்டு சிறையில் இருந்தால் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். விரக்தி மனப்பான்மையைத் தவிர்க்க கேரள இடதுசாரி சர்க்கார் இப்படி உத்தரவிட்டிருக்கிறது. அவர்கள் இந்த ஆட்சிக்குத் தோழமைக் காரர்கள்தான். அவர்கள் என்ன நடைமுறையை கையாண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, அப்படிப்பட்ட உத்தரவை இங்கும் பிறப்பிப்பார்களா?



திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, 14 ஆண்டுகளுக்கு முன்பு விடுதலை செய்யக் கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால் எந்த அடிப்படையில் கேரள அரசு உத்தரவிட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, 'ஜெனரல் அம்னாஸ்டி'—பொது மன்னிப்பு என்ற முறையில் நக்சலைட் உட்பட அத்தனை பேர்களையும் விடுதலை செய்து, கேரள அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி அந்த அடிப்படையிலே இங்கேயும் விடுதலை செய்ய உத்தரவிடுவார்களா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, பல்வேறு சந்தர்ப்பங்களில் பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் இந்த அரசு விடுதலை வழங்கி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த ஆலோசனையும் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, மதுரை மத்திய சிறைச்சாலையிலே கைதியாக நான் இருந்திருக்கிறேன். என்னைப் பார்க்க வருபவர்கள் எனக்கு வாழைப்பழம், கடலை மிட்டாய் போன்றவைகளைக் கொடுத்தனுப்பினால் அங்கே இருக்கிற 'வார்டர்கள் அதிலே முக்கால் பகுதியை எடுத்து விடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒழுங்கு பயிற்சி கொடுக்கப்படுமா?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின் போது அரசாங்க ஊழியர்களையோ அல்லது குறிப்பிட்ட ஒருவரையோ குறை சொல்லி கேள்வி கேட்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ''லைஃப் சென்டன்ஸைப்'' பொறுத்தவரையிலே 8 ஆண்டுகள் என்ற அளவிலே குறைப்பதற்கு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் குறுக்கே நிற்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். லீகல்லாகப் பார்க்கின்றபோது ''லைஃப் சென்டன்ஸைப்'' பொறுத்தவரையில் 14 வருடங்கள் ''அப்சார்ப்'' பண்ணப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் The Government has got powers to release anybody at any time. இந்த மாதிரிப் பிரச்சினைகளின் காரணமாகத்தான் சமீபத்திலே திருச்சி சிறைச்சாலையிலே கூட ''ஃபையரிங்'' எல்லாம் நடந்தது.

பல சிறைச்சாலைகளிலே உண்ணாவிரதம் நடக்கின்றது. ஆகவே அரசாங்கம் தயவுசெய்து இதில் தலையிட்டு தன்னுடைய ''இன்டிப்பென்டன்ட் பவர்ஸை'' ''யூஸ்'' பண்ணி அண்ணா பிறந்த நாள் விழா, பெரியார் பிறந்த நாள் விழா போன்ற காலங்களில் இந்த ''லைஃப் சென்டன்ஸிலே'' 8 ஆண்டு பூர்த்தி செய்தவர்களை விடுதலை செய்வதற்கு சீரியஸ்ஸாக முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, கேரளாவிலே கூட இந்த மாதிரி ஆயுள் தண்டனையைப் பொறுத்தவரையில் 14 ஆண்டுகளுக்கு முன்பு விடுதலை செய்கின்ற வகையிலே மிகவும் சிரமங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பெரும்பாலான பேரவை உறுப்பினர்கள் சிறைச்சாலைகளிலே அனுபவம் பெற்றவர்களாக இருப்பவர்கள் என்பது நமக்குத் தெரியும்.

பல சிறைச்சாலைகளிலே உள்ள வார்டர்கள் கைதிகளாகச் செல்பவர்களை மனிதத்தன்மையோடு நடத்தாமல் மிருகத்தனமாக நடத்திக்கொண்டு வருவதை அரசு அறியுமா? அவ்வாறு நடத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இதுவரை தண்டனை ஏதேனும் விதித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய செயல்கள் எதுவும் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. அது வந்தால் உடனடியாக அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்கள் என்ன கேட்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியும், அதாவது சிறைச்சாலையிலே கைதிகளுக்கு வெளியிலே இருந்து கொண்டு போகப்படுகின்ற பொருட்களை அதிகாரிகள் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்ற அளவிலே அதிகாரிகளைக் களங்கப்படுத்துகின்ற வகையிலே கேள்வி கேட்கக் கூடாது. ஆனால் அவர் சொன்னது அதிகாரிகள் தங்கள் பணிகளிலே சில தவறுகளைச் செய்கிறார்கள் என்று



ஒட்டுமொத்தமாகச் சொல்லி கேள்வி கேட்டார்கள். ஆனால் நீங்கள் கொண்டு போகப்படுகின்ற பொருட்களில் பாதிக்கு மேல் எடுத்துக்கொள்கிறார்கள் என்று கேட்கிறீர்கள். அவ்வாறு கேட்கக் கூடாது. அது தவறு. உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, அரசியல் கைதிகளையும், கிரிமினல் குற்றவாளிகளோடு இணைத்துப் போடுகிற வழக்கம் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறதே, அதைத் தவிர்த்து அரசியல் கைதிகளைத் தனியாகவும் கிரிமினல் குற்றவாளிகளைத் தனியாகவும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அந்த முறை ரத்து செய்யப்பட்டுவிட்டது. அரசியல் கைதிகள் தனியாக வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. து. இராமசாமி: தலைவரவர்களே, வாரம் ஒரு முறை ஜெயில் சூப்பிரண்ட் போன்ற அதிகாரிகள் பார்க்க வருகின்ற நேரத்தில் கைதிகள் தங்களுடைய குறைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். அவ்வாறு கைதிகள் குறைகளைச் சொன்ன காரணத்திற்காக அந்தப் பெரிய அதிகாரிகள் சென்றுவிட்ட பிறகு வார்டர்களால் துன்புறுத்தப்படுகிறார்கள். ஆகவே அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, அதுபற்றிய புகார்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, சிறைச்சாலைகளிலே கன்விக்ட் வார்டர்கள் என்று இருக்கிறார்கள். அவர்கள் 8 மணி நேரம் வேலை செய்வற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்கு 2 ரூபாய் என்ற அளவிலே மிகக்குறைந்த சம்பளம்தான் வழங்கப்படுகிறது என்று அறிகிறேன். அதோடு அங்கிருக்கின்ற கைதிகளை ''கான்விக்ட்'' வார்டர்கள் கடுமையாகத் தாக்குவதாகவும் சொல்லப்படுகிறதே, அது தவிர்க்கப்படுமா? மேலும் அந்த கான்விக்ட் வார்டர்களுக்கு வேறு வேலைகள் கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அந்த கான்விக்ட் வார்டர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 7

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தேவைக்குப் போதுமான அளவில்தான் கான்விக்ட் வார்டர்ஸ் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மன உறுதியும் நம்பிக்கையும் வரவேண்டும் ; என்ற எண்ணத்தில்தான் அத்தகைய வார்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மேலும் நியமிக்க வேண்டுமென்றால் அது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : சிறைச்சாலைகளில் வார்டர்களுக்கு தடி கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகளை அவர்கள் அடிக்கிறார்கள். ஆகவே, கொலை செய்த கைதிகளை எப்படி அடிப்பது, அரசியல் கைதிகளை எப்படி அடிப்பது, திருடிய கைதிகளை எப்படி அடிப்பது என்று அவர்களுக்குத் தனியாகப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறதா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அத்தகைய பயிற்சி கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

*வினா எண். 91—திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல்லில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சப்-கோர்ட்டிற்கு புதியதாகக் கட்டிடம் கட்டவும்-வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறைகளை அமைத்துத் தரவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இல்லை ஐயா.

திரு. கா. செங்கோடன் : நாமக்கல் கோர்ட் ஏற்கனவே ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தில்தான் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம் வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அதே போல் வழக்கறிஞர்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 500 என்றளவில் உயர்ந்திருக்கிறது. எனவே அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டி சிறப்பிக்க வேண்டியது அரசின் கடமை. அதே நேரத்தில் வழக்கறிஞர்களுக்கு அங்கே ஓய்வறை கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1980 பிப்ரவரி 7]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 500 வழக்கறிஞர்கள் நாமக்கல்லில் இருக்கிறார்கள் என்றால் அது நம்பக்கூடிய விஷயமல்ல. மேலும் சென்ற ஆண்டுதான் இந்த நீதிமன்றம் அங்கே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரிய நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி வசதி இல்லை. ஆகவே இப்போது கட்டடம் கட்டுகிற உத்தேசமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கலைக்கூடம் அமைத்தல்.

*வினா எண். 92—திரு. வே. கருணாமூர்த்தி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வரலாற்று சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் பல கிராமங்களில் உள்ள சிற்பங்களை சேகரித்து கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கலைக்கூடம் (MUSEUM) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் செங்கமேடு என்ற இடத்தில், வரலாற்று சிறப்பும், கலைச் செறிவும் கொண்ட கலிங்கத்து சிற்பங்கள், வைரவர், வைரவி சிலைகளை தொல்பொருள் துறை எடுத்து தனியாக ஒரு கட்டிடம் எழுப்பி அதன் உள்ளே வைத்துப் பாதுகாத்து வருகிறது. அதைத் தொடர்ந்து பிற இடங்களில் உள்ள சிலைகளையும் சேமித்து பாதுகாக்கும் பணியை இவ்வாண்டு மேற்கொள்ளும். அதற்காகத் தனியாக அங்கு ஒரு கலைக்கூடம் அமைக்கப்படுமா என்பது அங்கே கிடைக்கப் பெறக் கூடிய சிற்பங்களின் எண்ணிக்கை அவைகளின் தொன்மை, வரலாற்றுச் சிறப்பு, கலைச் செறிவு போன்றவைகளைப் பொருத்து அமையும்.

நுண்படச் சுருள்களுக்கான காப்பகம்

*வினா எண். 93—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-79 ஆண்டு ஆவணக்காப்பக நுண்படச்சுருள் அறை நிறுவ, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா ?

(ஆ) காப்பகத்தில் புராதன பத்திரங்களைப் பாதுகாக்க நுட்ப பொறியாளர்களின் அபிப்பிராயம் கோரப்பட்டதா ?

[1980 பிப்ரவரி 7

(இ) ஆம் என்றால், அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஈரோடு, கரூர் பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்கள்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோடு, கரூர் ஆகிய இரு நகர் மன்ற பேருந்து நிலையங்களில் பொதுக்கழிப்பிடம் பயன்படுத்தும் பயணிகளிடம் கட்டணம் வசூலிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தகு நிலையங்களில் பொதுக் கழிப்பிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சியில் பிரதான பேருந்து நிலையத்தில் 6 இருக்கைகள் கொண்ட கழிப்பிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : நான் மூலக்கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, இரண்டு நகரமன்ற பேருந்து நிலையங்களில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பற்றியது. தமிழ்நாட்டிலுள்ள பெருவாரியான நகரமன்றங்கள் பராமரிப்பிலுள்ள பொதுக் கழிப்பிடங்கள், குறிப்பாக பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏலம்விட்டு, ஏலம் எடுத்தவர்கள் பராமரிப்பில் விடப்படுகின்றன, அப்படி அவர்கள் பராமரிப்பில் விடும்போது, அவர்கள் பணத்தை மட்டும் வசூலிக்கிற அடிப்படையில் பணம் வசூலிக்கக்கூடிய அளவிற்கு பொதுக்கழிப்பிடங்களை சுத்தப் படுத்துவது கிடையாது. ஆகவே அதைப் பயன்படுத்துகிற பயணிகள் பொதுக்கழிப்பிடங்களை மோசமான நிலையில் பயன்படுத்துவதன் காரணமாக பல்வேறு தொத்துநோய்களுக்கு ஆட்படுகிறார்கள் என்பதை அரசு உணர்ந்து அதைத் தடுக்க



1980 பிப்ரவரி 7]

உடனடியாக இந்தப் பொறுப்பை நகராட்சி மன்றங்கள் மேற் கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவை உடனடியாக அரசு பிறப்பிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவாக இந்தக் கட்டணக் கழிப்பிடங்கள் சுத்தமான நிலையில்தான் பராமரிக்கப் படுகின்றன என்றுதான் அரசுக்குத் தெரியவருகிறது, குறிப்பிட்டு ஏதாவது புகார் தந்தால் அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்,

திரு என். கிட்டப்பா : இத்தகைய பொதுக்கழிப்பிடங்கள் உள்ள சிலயிடங்களில் சிறுநீர் கழிக்கக் கூட பத்துக் காசு வாங்கிக் கொண்டுதான் உள்ளே அனுப்புகிறார்கள். அதைக் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கட்டணக் கழிப்பிடங்கள் என்றால் கட்டணம் கொடுத்துத்தான் அதற்குரியதைப் பயன் படுத்த வேண்டும். சில இடங்களில் கட்டணம் இல்லாத கழிப்பிடங்கள் பக்கத்தில் இருக்கின்றன, அதைப் பயன் படுத்தலாம்.

சிவலிங்கபுரம் பள்ளிக் கட்டிடம்.

*வினா எண், 95—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவில்பட்டி தாலுகா கடம்பூர் பேரூராட்சி சிவலிங்கபுரம் கிராமத்தில் 1967-ல் ஆரம்பப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடம்பூர்த்தி பெறாமல் மரநிழலிலும் ஓலைக் குடிசையிலும் பள்ளி நடத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் அதற்கான காரணம் என்ன?

(இ) கட்டிடம் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தெரியும்.

(ஆ) பள்ளிக் கட்டிட வேலை கதவு நிலைமட்டம் வரை கட்டப்பட்டு மீதமுள்ள வேலை பேரூராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் செய்ய இயலாமல் நிறுத்தப்பட்டது.

(இ) பாக்கி வேலையை கோவில்பட்டி உதவி கோட்டப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று 31-3-80-க்குள் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[1980 பிப்ரவரி 7

[முற்பகல் 10.00]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதி இல்லாததன் காரணமாக செய்யவில்லை என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே அந்தப் பேரூராட்சி மன்றத்தில் இருந்த நிர்வாக அதிகாரி முறைகேடு செய்ததன் காரணமாக அந்தக் கட்டடம் தடைபட்டதாகவும், அது விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, 10, 12 ஆண்டுகள் ஆகியும் அப்படியே, அதே நிலையில் நிலைமட்டத்திலேயே இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, இந்த 80வது ஆண்டுக்குள்ளேயாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, அந்த முறைகேடு செய்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்காமல், கட்டிடம் இல்லாமல் குழந்தைகளைத் தண்டனைக்கு, அவஸ்தைக்கு உள்ளாக்குவது சரியாகாது. எனவே, உடனடியாக அந்தக் கட்டிடத்தை முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 31-3-80 க்குள் கட்டி முடிக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

## ஏற்காட்டிலுள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண். 96—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஏற்காட்டில் உள்ள தேயிலை, காப்பித் தோட்டத் தொழிலாளிகளுக்கு மற்றப் பகுதிகளில் உள்ள தேயிலை, காப்பி தோட்டத் தொழிலாளிகளுக்குத் தரப்படுவதுபோல் கூலி நிர்ணயம் செய்யாதது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசுக்குத் தெரியும்.

(ஆ) 1975-ஆம் ஆண்டு அரசினரால் தோட்டத்தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு தன்னுடைய பரிந்துரையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை மாற்றி நிர்ணயம் செய்கையில் ஏற்காடு, சேர்வராயன் பகுதியில் உள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றப் பகுதி



1980 பிப்ரவரி 7]

காப்பி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் உள்ள குறைந்த பட்ச ஊதிய வித்தியாசத்தை நீக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. அதன்படி 18-11-1976 ம் நாளிட்ட அரசு ஆணை எண். 1016இல் குறைந்த பட்ச ஊதியம் மறுமுறை திருத்தி அமைக்கப்பட்டது. பிறகு தொழிலாளர் நல ஆணையரின் 21-9-77ம் நாளிட்ட அறிவிக்கையில் பஞ்சப்படி வாழ்க்கைத் தர புள்ளிக்குத்தக்கவாறு அரசுஆணையில் கூறியபடி குறைக்காமல் கொடுக்க வேண்டும் என அறிவித்ததின் பேரில் சில மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுவை தாக்கல் செய்தனர். உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் தொழிலாளர் நல ஆணையரின் அறிவிக்கையை தள்ளுபடி செய்து அரசால் மாற்றி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் செல்லாது என தீர்ப்பளித்துவிட்டது.

2. எனவே ஊதிய விகிதங்களை மறுபடியும் மாற்றியமைத்து எல்லா காப்பி தேயிலைத் தோட்டப் பகுதிகளுக்கும் அது பொருந்தும்படி செய்வது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

## அம்பத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

*வினா எண். 97—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பத்தூர் நகரியப் பகுதிகளுக்கும் வில்லிவாக்கம் நகருக்கும் குடிநீர் வழங்குவதற்காக வகுக்கப்பட்ட 'குடத் தலையாறு திட்டம்' நிறைவேற்றப்படாமல் இருக்கக் காரணம் யாது?

(ஆ) அப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குடிநீர் பஞ்சத்தைப் போக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) போதுமான நீர் ஆதாரம் கிடைக்காததால், திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) சென்னைப்பெருநகரில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கும் குறிப்பு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது. இடைக்காலத்தில் சென்னை மாநகராட்சியைச் சார்ந்த வில்லிவாக்கம் பகுதியில் அதிக தட்டுப்பாடுள்ள இடங்களில் இரும்பு நீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு லாரிகள் மூலம் நீர் நிரப்பப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கூறியிருக்கிறேன். போதுமான அளவில் இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட

வில்லை என்பது ஒன்று. வைக்கப்பட்ட இரும்புத் தொட்டிகளில் தண்ணீர் இல்லை என்பது இரண்டு, முறையாக விநியோகிக்கப்படவில்லை என்பது மூன்று. இந்த மூன்று குற்றச்சாட்டுகள் இருக்கின்ற காரணத்தினால், திரும்பத் திரும்ப அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இதிலே கவனம் செலுத்தி வில்லிவாக்கம் பகுதியில் போதுமான இரும்பு நீர்த் தொட்டிகளை தாற்காலிகமாக வைக்க வேண்டும். அவைகளிலே முறையாக நீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

## ஹோமியோபதி பயிற்சி பெற்ற டாக்டர்கள்

*வினா எண். 98—திரு. கே. உச்சி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் Homoeopathy Medical Council லால் நடத்தப்படும் அரசாங்க தேர்வில் வெற்றிபெற்று பதிவு செய்துள்ள ஹோமியோபதி டாக்டர்கள் எத்தனைப் பேர்கள்?

(ஆ) ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில்—ஹோமியோபதி டாக்டர்களை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன்:

(அ) 'ஏ' பிரிவு 109

'பி' பிரிவு 12,865

தேர்வில் வெற்றிபெற்று 'சி' பிரிவு மருத்துவர்களாக பதிவு பெற்றவர் 2,215

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, அப்படித் தேர்வு பெற்றவர்கள் கிராமங்களில் மருத்துவ வசதியை மக்களுக்கு வீடுகளுக்குச் சென்று செய்து கொடுப்பதுபற்றி இந்த அரசின் பரிசீலனையில் இருப்பதை சற்று வேகப்படுத்தி, அவர்கள் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை அரசு பரிசீலிக்கும்.





திரு. ஜே. ஜேம்ஸ்: ஓமியோபதி பயிற்சி பெற்ற டாக்டர்கள் தேவைக்குப் போதுமான அளவுக்கு இல்லை. பயிற்சி அளிப்பதற்கு அரசு ஒரே ஒரு மருத்துவக் கல்லூரிதான் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, தனியார் ஓமியோபதி கல்லூரிகள் அமைக்க அரசு தேவையான நிதி உதவியை அளிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: தற்போது அந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

## திருப்பாலைக்குடியிலுள்ள ஒன்றிய மருத்துமனை

*வினா எண். 99—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா, திருப்பாலைக்குடியில் உள்ள ஆர். எஸ். மங்கலம் யூனியன் ஹோமியோபதி மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: அத்தகைய வேண்டுகோள் மக்களிடமிருந்து வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: அந்த மருத்துவமனையை அலோபதி மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று கோவிந்தமங்கலம் ஊராட்சித் தலைவர் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அது ஒன்றுதான் இதுவரை அரசுக்கு வந்திருக்கிறது. தற்போது அதை மாற்றுவதாக இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: மற்ற பல யூனியன்களில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டு நடத்துவதற்கு ஆர்டர் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஏன் ராஜசிங்கமங்கலத்தையும் எடுத்துக் கொள்ளக் கூடாது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: படிப் படியாக ஊராட்சி மன்றங்களிலுள்ள மருத்துவ மனைகளை அரசு ஏற்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் தற்போது அரசு ஒவ்வொன்றாக எடுத்து வருகிறது. அந்த வகையில் இதையும் எடுத்துக் கொள்ள அரசு ஆலோசனை செய்யும்.

## திருச்சிராப்பள்ளி பொது மருத்துவமனை.

*வினா எண். 100—திரு. கே. செளந்திரராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார:

(அ) திருச்சியில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள், செவிலியர்கள் பணியாற்றுகிறார்கள்?

(ஆ) திருச்சி பொது மருத்துவமனையில் எந்த எந்த பிரிவுகளில் வைத்திய வசதிகள் உள்ளன?

(இ) இந்த மருத்துவமனையை மேலும் விரிவாக்க ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இம் மருத்துவமனையில் 51 உதவி மருத்துவ அதிகாரிகள் (CIVIL ASSISTANT SURGEONS) பணியாற்றுகிறார்கள். இதில் 10 மருத்துவ அதிகாரிகள் பணியிடை விடுப்பு பதவிகளும் (RESERVE DUTY POSTS) அடங்கும்.

இதைத் தவிர மாவட்ட தொழுநோய் நிவாரண மருத்துவ அதிகாரியும், மருந்துகளில் சிறப்புப் பட்டம் பெற்ற மருத்துவர் ஒருவரும் பணியாற்றி வருகின்றனர். இங்கு பணியாற்றும் செவிலியர்களின் எண்ணிக்கை 92.

(ஆ) கதிரியக்கப் பிரிவு, இரத்த சேமிப்பு நிலையம், மற்றும் பல்நோய் சிகிச்சை, மனநோய் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சை, முடநீக்கவியல் சிகிச்சை, சிசு நோய் சிகிச்சை. கண் நோய் சிகிச்சை, பால்வினை நோய் சிகிச்சைக்கான பிரிவுகளில் வைத்திய வசதிகள் அளிக்கப் படுகின்றன.

(இ) தற்போது இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.

திரு. கே. சௌந்திரராசன் : திருச்சி மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் எத்தனை பேர்? அதிலே இப்போது பணியாற்றுகிறவர்கள் எத்தனை பேர்? காலியாக இருக்கும் இடங்கள் எத்தனை? அதை நிரப்புவதற்கு இந்த அரசாங்கம் எவ்வாறு விரைந்து நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் 41 பேர். இப்போது 41 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது தவிர விடுப்பு மருத்துவர்கள் என்ற நிலையிலேயே பத்து பேர் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)





## 3. தகவல் கோரல்

(அ) திரு. க. இராசாராம் வீட்டில் தொங்கும் பெயர் பலகை குறித்து

திரு. துரை முத்துசாமி : தற்போது புதிதாகச் சட்ட மன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. ராசாராம் அவர்கள் முன்பு தமிழகத்தின் தனிப் பிரதிநிதியாக டில்லியில் இருந்தார்கள். அவர்கள் இன்னும் அந்தப் பதவியில் இருக்கிறார்களா? அவர்கள் வீட்டு போர்டில் அப்படி எழுதப் பட்டிருப்பது இன்னும் தொங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்பமிகு பேரவைத் தலைவர் : அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி விட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். போர்டு இருப்பதை பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : பத்திரிகையில் வரும் செய்தியை நம்பி இங்கே பேசக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் இப்போது பத்திரிகைச் செய்தியைக் கூறுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி இப்போது இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற முறையில் தான் கூறினேன்.

திரு. க. இராசாராம்: அந்த போர்டு என் பெயர் உள்ள போர்டு. பெயரை மாற்றுகிற சூழ்நிலை வரவில்லை. அந்த போர்டில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி என்று இல்லை. அவர்கள் சமீபத்தில் என் வீட்டுக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். வந்தால் பார்க்கலாம்.

(ஆ) மக்கள் குரல் நாளேட்டில் பேரவையில் நடைபெறாத செய்தி வந்துள்ளது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்று நடந்த சம்பவத்தையொட்டி பத்திரிகையிலே வந்திருக்கும் செய்தியைத் தலைவரவர்கள் படித்திருக்கலாம் என்று கருதுகிறேன். கூத்தகுடி சண்முகம் பேச எழுந்த பொழுது * * என்று திராவிட முன்னேற்றக் கழக கட்சியிலிருந்து சிலர் சப்தம் போட்டதாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. இது என் மனதைப் புண்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நேற்று பேராசிரியர் அவர்கள் பேசுகிற பொழுது நான் குறுக்கிடவில்லை. அவர்கள் பண்போடு பேசுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் பேசி முடிந்த பிறகு, முதலில்

---

* * மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

என்னைக் கூப்பிட்டீர்களே என்று கேட்டேனே தவிர. அவர்கள் பேச்சில் நான் குறுக்கிடவில்லை. நான் எழுந்த பிறகு * என்று கூத்தகுடி சண்முகத்தை சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாடு பூராவும் தகவல் வருமானால் அது எந்த அளவிற்கு என் மனத்தைப் புண்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதே நிலைமையில் வேறு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு வந்து, * * என்று பத்திரிகையிலே வந்திருக்குமானால் எவ்வளவு ஆழமான மனவருத்தம் அடைந்திருப்பார்கள், எப்படிக் கிளப்பியிருப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, * * என்று அவர்கள் சொல்லவில்லை என்றாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. சொன்னதாகப் போட்டிருப்பவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆகவேதான் சட்டமன்றக் கூட்டத்திற்கு நான் கேள்வி நேரத்திற்குக் கூட வரவில்லை. மனம் சங்கடப்பட்டேன். நான் மேடையிலே கூட 'நீ' என்று பேசாதவன், அதைப் போல 'நீ' என்று என்னைப் பற்றிப் பேசினாலும் அதைத் தாங்கிக் கொள்ள முடியாதவன். அப்படியிருக்கும் பொழுது, இந்தச் சபையின் மரபைக் காக்க அவர்கள் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் 'மக்கள் குரல்' பத்திரிகையை என்னிடத்தில் கொடுத்து, * * என்று போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை பேரவையில் எழுப்புங்கள், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்டு பிறகு தீர்ப்புச் சொல்கிறேன் என்று தெரிவித்தேன்

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, மக்கள் குரல்' பத்திரிகையில் வந்ததைப் பற்றி இங்கே வந்து சொல்வதானால் மற்றப் பத்திரிகைகளில் வந்திருப்பதைப் பற்றியும் சொல்ல வேண்டிவரும். முரசொலி' பத்திரிகையில் அப்படிப்பட்ட செய்தி வரவில்லை. தவறாக 'மக்கள் குரல்' பத்திரிகையில் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கொண்டு வருவது வேறு பிரச்னை. பத்திரிகையிலே வந்திருப்பதைப் போல சொன்னார்களா?

திரு. து. புருஷோத்தமன் : நீங்கள் இந்த அவையிலே இருந்திருக்கிறீர்கள், உங்களுக்கும் தெரியும் அப்படிப் பேசவில்லை என்பது .. ..

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * அந்த நேரத்தில் பலரும் எழுந்து பேசியதனால் என்னால் சரியாக எதனையும் கவனிக்க முடியாமல் போயிற்று; அந்த வார்த்தைகளைச் சொன்னது உண்டா?

திரு. து. புருஷோத்தமன் : அருகில் இருக்கின்ற உங்களுக்கே காது கேட்கவில்லையென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொன்னீர்களா, இல்லையா?

திரு. து. புருஷோத்தமன் : சொல்லவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, மக்கள் குரல் பத்திரிகையில் வந்ததோடு, 'தினமணி' பத்திரிகையிலும் மறைமுகமாக, நாசுக்காகப் போடுகிறார்கள். நான் வேண்டுமென்று யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆனால் இது மற்றவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். யாரும் சொல்லவில்லை என்பதால் நான் இதில் அதிகமாகப் பேச விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் அப்படிச் சொல்லவில்லை என்பதால பிரச்னைக்கே இடமில்லை.

## 4. கவன ஈர்ப்பு

### சேலம் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு. தீ. எம். அண்ணாமலை, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் கொடுத்துள்ளார்கள்.

[முற்பகல் 10-10]

திரு. எம், அண்ணாமலை: தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் மேட்டூர் கெமிக்கல்ஸ் ஆர். சி. பிளாண்ட் கழிவு நீரால், குடிநீர் கிணறுகளும் பாதிக்கப்பட்டதால் அப்பகுதி மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த பொது நிகழ்வினைப் பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பி. என். பட்டி, வீரக்கல்புதூர், ஆகிய ஊர்களிலுள்ள கிணறுகள் ஆய்வு செய்யப்பட்டன. 187 கிணறுகள் ஏற்கெனவே மூடப்பட்டுள்ளன. இப்போதுள்ள 107 கிணறுகளில், பாசனக் கிணறுகள் 27 மற்றும் பருகுநீர்க் கிணறுகள் 80, 27 பாசனக் கிணறுகளில், 5 கிணறுகள் பயன்படுத்தத்தக்கவை, 2 கிணறுகள் பொறுத்துக் கொள்ளத்தக்கவை (tolerable) 20 கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றன. 80 பருகுநீர் கிணறுகளில் 16 கிணறுகள்தாம் பயன்படுத்தத்தக்கன. 6 கிணறுகள் பொறுத்துக்கொள்ளத் தக்கன (tolerable) மீதி கிணறுகள் பயன்படுத்தத் தகுதியற்றவை. பயன்படுத்தத் தகுதியற்ற கிணற்று நீரை முழுவதுமாக இறைத்து விடுதல், இறைக்கப்பட்ட நீர் கிணறுகளின் அருகில் தேங்காமல் தவிர்த்தல் முதலிய தீர்வு நடவடிக்கைகள் எடுக்குமாறு கூறப்பட்டுள்ளன.

2. தற்போது திருவாளர்கள் கெமிபிளான்ட் நிறுவனமும். ஆர், சி. பிளான்ட் நிறுவனமும் நாளொன்றுக்கு 30,000 காலன் முதல் 40,000 காலன் வரை பாதுகாக்கப்பட்ட தண்ணீரை, மேற்கூறிய கிராமங்களுக்கு 5 மணி நேரம் விநியோகம் செய்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் மேற்கூறிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குகிறது.

மேற்கூறிய இரண்டு தொழில் நிறுவனங்களின் அலுவலர்களுடன் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டு 31-7-79-க்குள், அவர்களுடைய தொழில் கூடங்களிலிருந்து வெளியேற்றும் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துவதற்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று நிறுவனங்களின் அலுவலர்கள் இசைவுடன் தீர்மானிக்கப்பட்டது. இம்முடிவுக்குப் பிறகு 20-6-79-ல் மேற்படி தொழில் கூடங்களை நேராய்வு செய்தபோது கெமிபிளான்ட் நிறுவனம் தற்போது தன்னுடைய கழிவு நீரை சுற்றுப்புறத்தில் வெளியிடுவதை நிறுத்தி விட்டதாகவும், கழிவுநீர் 11 செ.மீ. P.V.C. குழாய் மூலம் 3 கி.மீ. அப்பால் உள்ள மேட்டூர் அணைக் கால்வாயில் விடுவதாகவும் அறியப்பட்டது. இதனால் சுற்றுயுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் கெடுவது நிரந்தரமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே உள்ள பருகுநீர் பற்றாக்குறை வருகின்ற மழைக்காலத்தில் மேலும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்பிலிருந்து அந்த விவசாயிகளுடைய கிணறுகளுக்காக நடவடிக்கை எடுத்து ஏற்கனவே 187 கிணறுகள் மூடப்பட்டதாகவும் மற்றவை பயன்படுவதாகவும் சொன்னார்



கள். ஆனால் இது நடைபெறவில்லை. இன்னும் பொட்டேனேரி நல்லாகவுண்டம்பட்டி, பி. என். பட்டி, வீரக்கல்புதூர். சல்லிக்காடு, கோம்பூரான்காடு ஆகிய இடங்களிலே 100-க்கும் மேற்பட்ட இறைப்புக் கிணறுகளும், 500க்கும் மேற்பட்ட குடிநீர்க் கிணறுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீர் சப்ளை செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அங்கே மேட்டூரிலிருந்து சேலம் வரக்கூடிய பைப்லைனிலே துளைபோட்டு செத்துக்காடு பகுதியில் கரட்டு உச்சியில் ஒரு டாப் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி போட்டதும் கிராமங்களுக்கு பயனற்ற முறையில் தூரப்பகுதியாகும். கோம்பூரான்காடு, புதுரெட்டியூர் என்ற இடத்திலே டாப் போட்டால் தான் அங்கே இருக்கின்ற கிராமங்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கும் என்பதாகும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் கேள்வியாக எழுப்பி தகவல் பெற வேண்டுமே தவிர, உரையாற்றுவது நல்லதல்ல.

திரு. எம். அண்ணாமலை : ஒரே ஒரு இடத்திலே குழாய் போட்டு குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்தக் கிராமங்கள் அனைத்திற்கும் குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதோடு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களுக்கும் கிணறுகளுக்கும் நட்ட ஈடு கொடுக்கப்படுமா என்பதை அறியக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர், சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, குடி தண்ணீருக்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிராமங்களுக்கு 5 மணி நேரம் தண்ணீரை விநியோகம் செய்கிறார்கள். இதைத் தவிர குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று குறைபாடுகள் இருக்குமானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே மேட்டூர் ஆர். சி. பிளான்ட் மட்டுமல்லாமல் பரவலாகத் தமிழ்நாட்டிலே உள்ள தொழிற்சாலைகளின் கழிவு நீரால் குடிநீர் பாதிக்கப்படுவதோடு, விளை நிலங்களும் பாதிக்கப்பட்டு விடுகிற காரணத்தினால் பொதுவான ஒரு சட்டத்தை இயற்றி, தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குகிறபோது அவை இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற முறையிலே நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவு 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரண) சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10-20]

### (ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன் வடிவு, 1980

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்களது குத்தகை பாக்கி (நிவாரண) சட்ட முன் வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி).

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற பொது விவாதத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்



ஏற்கனவே எங்களுடைய உறுப்பினர்கள் சிலர் பேசியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பின்வரும் கருத்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக ஆளுநர் அவர்களுடைய உரையிலே இதற்கு முன்பெல்லாம் அரசாங்கத்தினுடைய பொதுவான கொள்கையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தக் கொள்கைகளைப் பற்றி ஒரு பொதுவான விவாதத்தை நாம் நடத்திப் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்போது இங்கே அந்தப் பிரச்சினைகளுக்குப் போவதற்கு முன்னாலே அந்தப் பிரச்சினைக்குப் போக வேண்டாம் என்று சொல்லியோ, காங்கிரஸ் கட்சியின் தரப்பிலே ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்த அரசாங்கம் தொடர்ந்து பதவியிலே இருப்பதற்கு அருகதை அற்றது. ஆகவே அவர்களாகவே ராஜினாமா செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் தரப்பிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது

நேற்றைய தினம் இங்கே பேசிய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் அதே கோரிக்கையை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஆகவே கவர்னர் உரையில் கண்டிருக்கக் கூடிய அரசாங்கக் கொள்கை விஷயம் பற்றி பிறகு நான் பேசுகிறேன். ஆனால் அதற்கு முன்னாலே இந்த ஆட்சி நடைபெறுவதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்ற பிரச்சினை பற்றி தெளிவாக நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். எனவே தான் கூற விரும்புகிறேன், எங்களுடைய உறுப்பினர்கள் பேசும் போதும் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி 42% வாக்குகளைப் பெற்று 67 சதவிகிதம் இடங்களைப் பெற்றிருக்கிறது. இந்த நாட்டின் அமைப்பில் விகிதாசார பிரதிநிதித்துவம் என்ற முறை அமலில் இல்லாத காரணத்தினால் மக்களுடைய வாக்குகளுக்கும் ஒவ்வொரு கட்சிக்கும் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் கிடைக்கக் கூடிய இடத்திற்கும் பெருத்த வித்தியாசம், பெருத்த இடைவெளி ஏற்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நான் இதைக் கூறக்கூடிய நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்கும், வேறுசில மாநிலங்களின்—மேற்கு வங்காளத்தில், கேரளாவில் அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளுக்கு ஏற்ப, அங்கு இடங்கள் கிடைக்கவில்லை என்பதை கவனத்தில் கொண்டிருக்கிறோம். நாங்களும் அதை உணர்ந்து கொண்டு தான் இருக்கிறோம். இரண்டு பக்கத்தையும் தாக்கக்கூடிய தவறான முறை இந்த நாட்டில் அமலில் இருக்கிறது. ஏறத்தாழ மக்களுடைய வாக்குகளுக்கும், ஒவ்வொரு கட்சிக்கும் சட்டமன்றத்திலே கிடைக்கக்கூடிய இடங்களுக்கும் ஒரு இணைப்பிருந்தால் அது மக்களுடைய அபிப்பிராயத்தை சரியான முறையிலே பிரதிபலிக்கக் கூடிய ஒரு அமைப்பாக இருக்கும்.

ஆகவே மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடத்தாத சட்டமன்றங்களைக் கலைக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சி கூறுமானால் அவர்கள் இந்த நாட்டில் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கிற சிறுபான்மையாளர்கள் வாக்குகளைப் பெற்றுத்தான் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். எனவே மிகுந்த ஆதிக்க உணர்வோடு மற்ற சட்டமன்றங்களைக் கலைப்பதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட கட்டாயத்தை திணிப்பதற்கு எவரும் உரிமை பெற்றிருக்கவில்லை என்பதைத் தான் முதன்முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்று நாம் சிந்தனை செய்து பார்ப்போமானால் தமிழகத்திலேயே இந்த விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை அமலில் இல்லாத காரணத்தால் எப்படி பல்வேறு கட்சிகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்தத் தேர்தல் களத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், சேர்ந்து பெற்று இருக்கக்கூடிய வாக்குகள் தமிழகத்தில் 1,00,57,000. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதா கட்சியும் பெற்று இருக்கும் வாக்குகள் 73,92,000; முஸ்லீம் லீக் கட்சி பெற்று இருக்கிற வாக்குகள் கட்சி என்ற முறையிலே தேர்தல் புள்ளி விவரங்களில் குறிப்பிடப்படாததால் அதை நான் அதிலே சேர்த்துக் கொள்ளவில்லை. ஆகவே, காங்கிரஸ் கட்சியும், தி. மு. கழகமும் சேர்ந்து 1 கோடியே 57 ஆயிரம் பெற்று இருக்கிற போது அவர்களுக்குக் கிடைத்து இருக்கும் இடங்கள் 36, 73 லட்சம் வாக்குகளைப் பெற்று இருக்கக்கூடிய அடுத்த தேர்தல் அணி பெற்ற இடங்கள் 2. இதைப் பார்த்தாலே, இந்தத் தேர்தல் அமைப்பு முறையில் இருக்கக் கூடிய அடிப்படையான குறைபாட்டை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

உண்மையிலேயே மக்களின் வாக்குகளுக்கும், இடங்களுக்கும் ஏதாவது ஒரு தொடர்பு இருக்குமானால், இன்றைக்கு ஒரு அணிக்கு 4 இடம் கிடைத்து இருந்தால், அடுத்த அணிக்கு 3 இடங்கள் ஏறத்தாழ கிடைத்து இருக்கும். கிடைத்து இருக்க வேண்டும். இது தான் இன்றைக்கு மக்களின் வாக்குகளுக்கும், இடங்களுக்கும் உள்ள உண்மையான வித்தியாசமான நிலைமை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தக் கருத்தை நான் சொல்கிற போது மேற்கு வங்கத்தில் இதே பாதிப்பு காங்கிரஸ் கட்சிக்கு வந்து இருக்கிறது. கேரளாவில் இதே நிலைமைக்குக் காங்கிரஸ் கட்சி ஆளாக்கப்பட்டு இருக்கிறது. இதனை அவர்கள் மனதில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள்



பெற்றுள்ள வாக்குகளுக்கு கேரளத்தில் அதிக இடங்கள் விகிதாசார முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு இருந்தால் வந்து இருக்கும். ஆகவே தான் கூறுகிறோம், விகிதாசார அடிப்படையில் இந்தத் தேர்தல் முறை இருக்க வேண்டும், அதனைத் தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வரக்கூடிய நிலை இருக்கிறது. இதை வேறு பல ஜனநாயகச் சக்திகளும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆனால் மத்தியில் ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிற காங்கிரஸ் கட்சி கடந்த 30 ஆண்டு காலமாக இந்தசரியான கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் கொள்கை குறித்து பாராளுமன்றத்தில் தீர்மானம் வருகிறபோது அதனைத் தொடர்ந்து அவர்கள் எதிர்த்துக் கொண்டே வருகிறார்கள். மெஜாரிட்டி ஓட்டுகளைப் பெற்று மிகப் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுக் கொள்வது அவர்களுக்குச் சாதகமாக இருப்பதால் அவர்கள் இது வரையில் அதை எதிர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

ஒரு உண்மையை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் மக்கள் மத்தியில் இருக்கும் அடிப்படையான பலத்தை உணர்கிற காரணத்தால் எந்த விதமான சோர்வுக்கும் நாங்கள் ஆளாக்கப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட தேர்தல் காலத்தில் 4% அல்லது 5% வாக்காளர் மத்தியில் மனமாற்றம் ஏற்படுமானால் அது தேர்தல் முடிவின் அடிப்படையையே மாற்றி விடும் தன்மையை உடையதாக இருக்கிறது. அதைத்தான் நாம் நடந்து முடிந்த தேர்தலில் பார்த்தோம். இந்த முறையை மாற்றா விட்டால், அவர்களும் கூடிய சீக்கிரத்தில் பல மாநிலங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்று குறைவான இடங்களைப் பெறுகின்ற நேரத்தில் இந்த விகிதாச்சார முறை வேண்டும் என்று சொல்வார்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

இது ஒரு புறம் இருக்கட்டும். இன்று ஒரு கருத்து சொல்லப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்டு விட்ட முடிவு இந்த மாநில சர்க்கார் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகும் என்று வலியுறுத்தப்பட்டது. வாஸ்தவத்தில் இன்று நடைபெற்ற தேர்தல் முடிவின் அடிப்படையில் ஆட்சி நடத்துவது யார் என்ற பிரச்சினை வந்தது. அதற்கு கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ஜனதா கட்சி எடுத்த ஒரு கண்ணோட்டத்தின் அடிப்படையில், காங்கிரஸ் கட்சிக்கு மாற்றுக்கட்சியாக ஒரு மத்திய சர்க்கார் அமைக்கப்பட்டு இருப்பதால், இந்திய மக்களில் கணிசமான பகுதியினர் அந்தக் கட்சியை எதிர்த்து வாக்களித்த காரணத்தால், அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியைக் கலைத்தார்கள் என்பது அன்றைய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் விமர்சனங்களில் ஒரு முக்கியமான காரணமாகும்.

அதைவிட்டுவிட்டு, இந்த மாநில சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் மீது மக்கள் கொடுத்த தீர்ப்பு என்று சொல்லி, ஆட்சியிலே இருந்து இறங்க வேண்டுமென்று சொல்லுகிற வாதம் முற்றிலும் பொருந்தாத ஒரு வாதமாகும்.

[முற்பகல் 10·30]

உதாரணத்திற்காகச் சொல்கிறேன்; அப்படியே பார்ப்போம். கேரளத்திலே இந்திரா காங்கிரஸ் கட்சி அணி 8 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்த விகிதாச்சாரத்திலே பார்க்க வேண்டுமென்று சொன்னால், கேரளத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் 7 சட்டமன்ற தொகுதிகள் அடங்கும். இன்றைக்கு நான் கேட்க விரும்புகிறேன். நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்த ஒருசில நாட்களுக்குள்ளாகவே கேரளத்திலே நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 56 இடங்களைப் பெறவில்லை. மிகக் குறைவான இடங்களைத்தான் பெற்றார்கள். அப்படியானால் என்ன அர்த்தம்? அங்கே ஜனவரி மாதத்தில் நடைபெற்ற தேர்தல் நிலை ஒன்றாக இருந்தது. அப்போது நடைபெற்றது நாடாளுமன்றத் தேர்தல். அந்தத் தேர்தல் நடந்து முடிந்த ஒரு சில வாரங்களுக்குள் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் நிலை வேறாக அமைந்திருக்கிறது. இந்த மாற்றம் ஒரு சில ஆண்டுகளில் அல்ல; ஒரு சில வாரங்களில்.

கொல்லம் பாராளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அங்கே சில வாரங்கள் கழித்து சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. கொல்லம் நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கிய 7 சட்டமன்றத் தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் கட்சி 6 இடங்களில் தோல்வி அடைந்தது. சிந்தனை செய்து பாருங்கள். ஒரு சில வாரங்களுக்குள்ளாக நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தீர்ப்பும், சட்டமன்றத் தேர்தலில் ஒரு தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. நாடாளு மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சி அதே கொல்லம் தொகுதியில் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்திருக்கிறது, அங்கே இடதுசாரி ஐக்கிய கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. அப்படியானால் இந்த வெற்றியை வைத்து சில தினங்களுக்கு முன்னால் வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் இராஜிநாம



செய்ய வேண்டும் அல்லவா? ஆண்டுக் கணக்கில் கூட அல்ல; ஒரு சில வாரங்களில் தோல்வி அடைந்த காரணத்தால் கொல்லம் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர், நீங்கள் கூறுகிறபடி பார்த்தால் இராஜிநாமாச் செய்திருக்க வேண்டும். இராஜிநாமாச் செய்தாரா? செய்யவில்லை. நாங்கள் இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டோமா? நாங்கள் கேட்கவில்லை.

அதைப்போல இன்னொரு உதாரணம். நண்பர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் இன்றைக்கு இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசிலே ஒரு துணை அமைச்சராக இருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியுடன் மதுரை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதே தொகுதியில் 3 மாதங்கள் கழித்து 1977 ஜூன் மாதத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. அந்த 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் மாற்றுக் கட்சியினர் வெற்றிபெற்றார்கள். அப்படியானால் ஜூன் மாத சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னால், தன்னுடைய கட்சி தோற்கடிக்கப்பட்ட செய்தியை கேட்டவுடனே ஆர். வி. சுவாமிநாதன் தன்னுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்திருக்க வேண்டும். இராஜிநாமா செய்தாரா? செய்யவில்லை. நாங்கள் இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டோமா? கேட்கவில்லை. இதை ஏன் கூறுகிறேன் என்றால் இன்றைக்கு அந்த உண்மையை மறந்து விட்டு அவர்கள் பேசுவது எங்கே போய் முடியும்? அண்ணா தி.மு.க. உதவிடன் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் போது 15 இடங்களைப் பெற்றிருந்தார்கள் என்று கருதுகிறேன். ஆனால் 3 மாதம் கழித்து நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி 27 இடங்களில் தான் வெற்றி பெற்றது. 15 நாடாளுமன்றத் தொகுதிகளில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் பார்த்தால் அவர்கள் 90 இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும், ஆனால் அவர்களால் 27 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. அதன் அர்த்தம் என்ன? 3 மாதங்களுக்குள்ளாக வேறுவிதமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டதால், அந்தத் தீர்ப்பை ஏற்று, 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இராஜிநாமா செய்திருக்க வேண்டும் அல்லவா? அவர்கள் இராஜிநாமாச் செய்தார்களா? இல்லை. அவர்கள் செய்யாததை மற்றவர்களிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கிறார்

கள். ஆகவேதான் கூறுகிறேன். சரித்திரத்தைக் கொஞ்சம் திருப்பிப் பாருங்கள். இப்படிப்பட்ட கோரிக்கையை வைக்க வேண்டுமா என்று உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

நாங்கள் காங்கிரஸ் கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஒரேமாதிரியாகப் பார்க்கவில்லை. காங்கிரஸ் கட்சியை கடந்த காலத்திலே எதிர்ப்பதற்காகப் போராடிய ஒரு கட்சி என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் பார்க்கிறோம். அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடுகளை நாங்கள் செய்திருக்கிறோம். ஆனால் அந்தக் கட்சியினர் இன்றைக்கு இந்தத் தேர்தல் முடிந்தவுடன் ராஜிநாமாச் செய்யுங்கள் என்று இந்த அமைச்சரவையைப் பார்த்துக் கேட்கிறார்கள். நான் அவர்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். 1977—ஆம் ஆண்டு ஜுன் மாதத்திலே தஞ்சை பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சட்ட மன்றத் தொகுதிகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. அதற்குப் பிறகு தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கான உப தேர்தல் நடைபெற்றபோது அதில் அக் கட்சி தோல்வியுற்றிருக்கிறது. அப்படி என்றால் 1977—ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் அந்தத் தொகுதியிலே உள்ள வெற்றி பெற்ற கட்சியினருக்கு நாடாளுமன்ற உப தேர்தலிலே மக்கள் வாக்களிக்கவில்லை. அப்பொழுது உடனடியாக அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும். எங்கள் மீது நம்பிக்கையில்லை, ஆகவே அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் ராஜிநாமாச் செய்கிறோம் என்ற முறையில் செய்திருக்க வேண்டும். செய்தீர்களா? செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டதா? கேட்கப்படவில்லை. ஆகவே ஒரு முறை நடக்கின்ற தேர்தலை மற்றொரு தேர்தலோடு ஒப்பிட்டு இவ்வாறு ராஜிநாமாச் செய்யுங்கள் என்று கேட்பது ஜனநாயக அடிப்படை அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து ஜனதாக் கட்சி 1977—ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வந்தவுடனே சில மாநிலச் சட்ட மன்றங்கள் கலைக்கப்பட்டது குறித்து ஏற்கெனவே தோழர் கோவிந்தராசன் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். அப்போது ஒரிசா போன்ற மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களும் தங்களுடைய 5 ஆண்டுக் கால ஆட்சியை முடித்துவிட்டிருந்த மாநிலங்கள். 1952—ஆம் ஆண்டிலேயிருந்து அவசரகால நிலை என்பது இந்தியாவிலேயே ஏற்பட்டதே இல்லை. பின்னர் ஏற்பட்ட அந்த அவசர கால ஆட்சியை முறியடித்த பிறகு மக்களாலே தேர்ந்தெடுக்கப்பெற்ற ஜனதாக் கட்சியினர் அப்போதிருந்த சூழ்நிலை



யிலே அந்த நடவடிக்கைச் செய்தார்கள். அதைவிடுத்து பொதுவாக அந்தக் கோட்பாட்டை அமல் நடத்துகிறோம் என்று சொன்னால் அதனுடைய விளைவுகள் என்ன ஆகும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்தத் தேர்தலிலே பெற்ற வெற்றி காங்கிரஸ் அணியினுடைய வெற்றி என்று கூறினார்கள். அவர்கள் அவ்வாறு குறிப்பிடுகின்றபோது காங்கிரஸ், தி.மு.க. அணி வெற்றி பெற்றது என்று கூடக் கூறவில்லை. அல்லது அவர்கள் முற்போக்கு அணியினுடைய வெற்றி என்று கூடக் கூறவில்லை. ஆகவே இது ஏதோ தற்செயலாக வார்த்தையிலே விட்டுப்பட்டு விட்ட ஒன்றாக நான் கருதவில்லை.

அடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. இளைய பெருமாள் அவர்கள் இந்தத் தேர்தல் முடிந்த பிறகு தெளிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். 1967-ஆம் ஆண்டிலே ஆட்சிப் பொறுப்பை இழந்த காங்கிரஸ் மீண்டும் தமிழகத்தில் ஆட்சிக்கு வரவேண்டும் என்று எங்களுடைய ஊழியர்கள் துடியாகத் துடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு ஏற்பட்டுவிட்ட தோல்விக்குப் பதிலாக வெற்றி பெற்றாக வேண்டும் என்று அவர்கள் துடிதுடிக்கிறார்கள். எனவே பாண்டிச்சேரியில் நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விட்டுக் கொடுத்ததைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை எங்களுக்கு விட்டுக் கொடுக்கும் என்றும் அவர்கள் உறுதியான நம்பிக்கை தெரிவித்தார்கள். நாங்கள் உடனே ஒன்றை எதிர்பார்த்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிடத்திலிருந்து அப்படி ஒரு உடன்பாடு கிடையாது என்றும், பாண்டிச்சேரி என்பது ஒரு சிறு பிரதேசம் ஆனால் தமிழ்நாடு என்பது ஒரு பெரிய மாநிலம், ஆகவே அவர்கள் பாண்டிச்சேரியைக் காட்டி தமிழகத்தை எடுத்துக் கொண்டு போவதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் உடன்படாது என்று ஒரு மறுப்பு அறிக்கை வரும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி மறுப்பு அறிக்கை வரவில்லை. இதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கே ஒரு கஷ்டம் இருக்கிறது. அதாவது அவ்வாறு சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் உடனடியாக அவர்களுடைய உறவு முறிந்துவிடுமே என்ற ஒரு பயம் இருக்கிறது. அதே நேரத்தில் இன்னொன்றும் இருக்கிறது. அவர் சொல்வதை மறுக்கவில்லையென்றால்

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அணியினர் மத்தியிலே என்ன நிலைமை ஏற்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை இரண்டு கட்சிகளாக இருக்கலாம். 1967-ஆம் ஆண்டிலே காலம் சென்ற திரு. சி. என். அண்ணாதுரை அவர்களுடைய தலைமையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்துடன் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உடன்பாடு செய்து தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஏற்பட்டது என்பது தமிழ்நாட்டு அரசியலைப் பார்த்தால் தெரியும்.

[முற்பகல் 10-40]

இந்திய பெருமுதலாளிகள் கட்சி என்று நாங்கள் காங்கிரஸ் கட்சியை வர்ணிக்கிறோம். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் முதலாளித்துவ காட்டு ராஜாக்களின் ஆட்சியை மாற்றுவதற்காக இன்றைக்குத் தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை மாற்றுங்கள் என்று அந்தத் தேர்தல் அறிக்கை கூறியது. தமிழ்நாட்டில் மாற்றினார்கள். 1967ல் இருந்து 1980 வரை அந்த ஆட்சி வரவில்லை. ஆனால் இன்றைக்கு ஒரு புதிய ஆபத்து தலை தூக்கிக் கொண்டு இருக்கிறது. அந்த ஆபத்து என்ன, அது என்ன வடிவத்தில் வருகிறது என்றால், முதலிலே அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் காங்கிரஸ் கட்சியினர் கேட்டார்கள், சட்டமன்றத்திற்கு இடத்தை விட்டுக் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை, நாடாளுமன்றத் தொகுதிகளில் பத்துத் தொகுதிகள் கொடுத்தால் போதும் என்று முதலில் உடன்பாடு செய்தார்கள்.

பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உடன் பாடு செய்து கொள்ளும்போது 15 நாடாளுமன்றத்தொகுதிகளைக் கொடுத்தால் போதும் என்று உடன்பாடு செய்தார்கள். ஆனால் இப்போது நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பத்து பதினைந்தாகி கடைசியில் பாண்டிச்சேரியையும் தமிழ் நாட்டையும் சேர்த்து 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் 23 கொடுக்க வேண்டும் என்ற நிலைமைக்கு வந்து வெற்றியும் பெற் றார்கள். 10, 15, பின்னர் 23 ஆகியது. நான் காங்கிரஸ்கட்சி நண்பர்களோடு பேசிக்கொண்டு இருந்தபோது அவர்கள் சொன் னார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களைப்





பெற்ற கட்சிதானே தமிழ்நாட்டில் வரவேண்டும், அதை நாங்கள் கேட்பதில் என்ன தப்பு இருக்கிறது என்று. தமிழ்நாட்டில் நாடா ளுமன்றத் தேர்தலில் வாக்குகளின் சதவிகிதத்தைப் பார்த் தீர்களா, நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 31.61% வாக்குகள் கிடைத்திருக்கிறது காங்கிரஸ் கட்சிக்கு. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 23·01% வாக்குகள் கிடைத்திருக்கிறது. ஆகவே நாங்கள்தான் அவர்களைக் காட்டிலும் பெரிய கட்சி, ஆகவே நாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்று கூறினால் அதில் என்ன தவறு இருக்கிறது என்று அவர்கள் கேட்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், காங்கிர கட்சிக்குக் கிடைத்த இந்த 23 இடங்கள் அவர்கள் சொந்த பலத்தில் கிடைத்ததா? அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய 31.61% வாக்குகள் பல்லாயிரக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் வேலை செய்து அவர்களுக்கு இந்த வாக்குகளைச் சேகரித்துக் கொடுத்த பிறகு அவர்கள் இப்போது இப்படிச் சொல் கிறார்கள். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிப்பது போல் 10லிருந்து 15 என்றாகி இப்போது 23யைப் பெற்று அதன் அடிப்படையில் உங்கள் ஆதரவைப் பெற்று அதிக இடங்களைப் பெற்றப்பின் நாங்கள்தானே பெரிய கட்சி, ஆகவே இந்திரா காங்கிரஸ் அணி என்று சொல்கிறார்கள். கவர்னர் அவர்கள் உரைக்கு ஆட்சேபணை தெரிவித்து காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும், முஸ்லிம் லீக்கும், அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக்கும் வெளியேறினார்கள். நாங்களும் ஒரு காலத்தில், சென்ற ஆண்டு கவர்னர் உரையில் பல்வேறு பிரச்னைகள் பற்றி, பல்வேறு கட்சிகள் வெளியேறினோம், ஒரு வருக்கொருவரும் சம்பந்தமில்லாமல் முன்னாலும் பின்னாலும் பேசினோம். ஏனென்றால் ஒரு இணைப்புக் கிடையாது.

<u>திரு. மு. கருணாநிதி :</u> குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டு கிறேன். ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். நாங்களாவது வெற்றி பெறாமல் இருந்த தொகுதிகளை, 23 தொகுதிகளை காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் நேரத்தில் அவர்கள் போட்டியிடு வதற்காக பகிர்ந்தளித்தோம். அதே நேரத்தில் திரு. சங்கரய்யா அவர்களை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தஞ்சைத் தொகுதியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருந்த தொகுதியை இந்திரா காங்கிரஸுக்கு அ.தி.மு.க. விட்டுக் கொடுத்ததே அதைப் பற்றி திரு. சங்கரய்யா அவர்கள் என்ன கூறுகிறார்கள்?

<u>திரு. என். சங்கரய்யா :</u> அவர்கள் இன்றைக்கு என்ன சர்ச்சையில் ஈடுபட்டாலும் நாங்கள் திராவிட இயக்கத்திலிருந்து ஏற்பட்ட கட்சிகளை ஒரு நட்புறவின் அடிப்படையில் பார்க்

கிறோம். இந்திய பெரு முதலாளிகளின், அவர்கள் நலன்களைப் பிரதிபலிக்கக்கூடிய காங்கிரஸ் கட்சிபால் எந்தக் கட்சி என்ன நிலை எடுக்கிறது என்பதை வைத்துத்தான் நாங்கள் எங்கள் கொள்கையைத் தீர்மானித்திருக்கிறோம். இந்தியாவிலே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும், எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடுவதற்கும் எந்தக் கட்சி முன்வருகிறதோ அந்தக் கட்சியோடு தேர்தல் உடன்பாடு செய்துகொள்வது என்ற கொள்கையை நாங்கள் கடைபிடித்துக் கொண்டு வருகிறோம். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்குத் தெரியும். 1977ல் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல்கள் நடந்தபோது அவர்கள் இந்திரா காங்கிரஸோடு சேர்ந்தும், நாங்கள் ஜனதாக் கட்சியோடும் திராவிட முன்னேற்றக் கழகத்தோடும் சேர்ந்து அதை எதிர்த்துப் போராடினோம். தோல்வி அடைந்தோம்; அதை பற்றிக் கவலைப் படவில்லை. மதுரை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடு உடன்பாடு கொண்டது. தேர்தலில் ஈடுபட்டோம். தஞ்சை உபதேர்தலில் இவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியை ஆதரித்தார்கள். அப்போது நாங்கள் உங்களோடும், ஜனதாக் கட்சியோடும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடும் சேர்ந்து எதிர்த்தோம். இதுதான் எங்கள் கொள்கை, எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பதற்கு எந்தக் கட்சி முன்வருகிறதோ அல்லது எந்தக் கட்சிகள் முன்வருகின்றனவோ அவர்களோடுதான் மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் உறவு இருக்கும்; இங்கு மட்டுமல்ல, இந்தியாவிலேயே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அன்று கவர்னர் உரையின்போது நாங்கள் செய்தது ஒரு 'ஸிம்பாலிக் ஜெஸ்ஜர்', அதில் ஒரு பொருள் அடங்கியிருக்கிறது, இந்தச் சட்டமன்றத்தில் இன்றையதினம் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் அந்த முறையில் எழுந்து இந்த மந்திரிசபை நீடிக்க உரிமை இல்லை என்று முதலிலே அவர்கள் சொல்லி அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி கூறி வெளியேறியிருந்தால் அது வரிசைக்கிரமத்திற்கு பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் நண்பர் திரு. மார்முத்து அவர்கள்— காங்கிரஸ் அணிதான் வெற்றி பெறும்— என்று சொல்லியதைப்போல்—இல்லை—திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே, அந்த இடத்தை இழந்து விட்டார்கள்......

<u>திரு. மு. கருணாநிதி:</u> தலைவர் அவர்களே, திரு.சங்கரைய்யா அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற முறை கவர்னர் அவர்கள் உரையிலே வெளியேறியபோது கூட, அந்த



உரிமையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முதல் தடவையாக எடுத்துக்கொண்டது. அதற்குப் பிறகுதான் பேராசிரியர் அவர்கள் இங்கே அந்த உரையைப் படித்துவிட்டு, கவர்னர் அவர்கள் உரைக்கு மறுப்பு தெரிவித்துவிட்டு வெளியேறினார்கள்.

<u>திரு. என். சங்கரைய்யா :</u> இந்தக் கேள்வி வரும் என்றுதான் நான் முதலிலேயே பதில் சொன்னேன். சென்ற ஆண்டு கவர்னர் அவர்கள் உரையின் போது, வெளிநடப்புச் செய்வது பற்றி நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழகமும், நாங்களும் சேர்ந்து ஒரே மாதிரியான அரசியல் கொள்கைபற்றி அறிக்கை வெளியிடவில்லை; நீங்கள் வெளியிட்ட காரணம் வேறு; நாங்கள் வெளியிட்ட காரணம் வேறு; மற்றகட்சிகள் வெளியிட்ட காரணங்கள் வேறு: ஆகவே, நாங்கள் உங்களோடு பேசி, அந்த வரிசையிலே போவது என்பதில்லை.

அன்றைக்கு எங்களுடைய கொள்கையை சொல்வதற்காக நாங்கள் முதலிலே சொல்லி, வெளியே போனோம், ஆனால் இங்கே அப்படியில்லை, இங்கே காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரேமாதிரியான பொருள்படக்கூடிய வகையில், இந்த அரசு பெரும்பான்மை பலத்தை இழந்துவிட்டது ஆகவே, ராஜினாமா செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முறைபடுத்தி வைத்துச் சொல்லும்போது, அதை திராவிட முன்னேற்றக் கழகம் முதலிலே சொல்லி, காங்கிரஸ் கட்சி அதைப் பின்பற்றி இருக்க வேண்டும். ஆனால். இங்கேயும் அவர்கள் வெற்றி பெற்றார்கள். இல்லை, அது ஒரு புதிய நிலைமை என்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். ஏற்கனவே இருந்த நிலைமை, திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சி. ஆனால், இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தபிறகு, உங்களுடைய உதவியோடு நாங்கள் வெற்றிபெற்ற பிறகு, தாங்கள் தான் தலைமை வகிப்போம் என்று சொல்கிறார்கள். அதனால் தான் பேராசிரியர் அவர்கள் சொல்கிறார்கள், அணி என்றுதானே நாங்கள் குறிப்பிட்டோம் என்று கூறினார்கள், அந்த அணிக்கு யார் தலைமை தாங்குவது என்பதுதான் பிரச்னை. நாங்கள் தெளிவாகச் சொன்னோம். தமிழ்நாட்டில் உருவான இந்த அணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உருவான அணி என்று சொல்லவில்லை. அகில இந்திய அண்ணா தி.மு.க. தலைமையில் உருவான அணி என்று சொன்னோம். அதேபோல் கேரளா, மேற்கு வங்காளத்திலே உருவான அணியை தேவராஜ் அர்ஸ் தலைமையிலான அணி என்று சொல்லவில்லை....

[1980 பிப்ரவரி 7

திரு. மு. கருணாநிதி : நாடாளுமன்றத் தேர்தலிலே உருவான இந்த அணி இப்போது நீடிக்கின்றதா? இப்போது ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் தாங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறார்களா?

திரு. என். சங்கரய்யா : அதைப்பற்றியும் நான் பேசத்தான் போகிறேன். மேற்கு வங்காளம், கேரளாவில் ஏற்பட்ட அணி தேவரார்ஜ் அர்ஸ் அணியல்ல. மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமையில் ஏற்பட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணி. அதைப் போலத் தான் நாங்கள் எதிர்ப்பார்த்தோம். அந்த எதிர்பார்ப்பு திராவிட முன்னேற்றக் கழக த்லைமையிலுள்ள காங்கிரஸ் என்று வந்திருந்தால், அது பொருத்தமாக இருக்கும் என்றுதான் எதிர்பார்த்தோம். ஆனால், அவர்கள் தீர்மானத்திலும் பொருள் பதிந்திருக்கிறது. ஒருவேளை, கட்சி வற்புறுத்தியதோ என்னவோ தெரியவில்லை. முழு முன்முயற்சி யாருடையதாக இருக்கிறது என்பதுதான் முக்கியம். ஆகவே யாருடைய தலைமையில் வர வேண்டும் என்பதுதான் முக்கியம். அவர்கள் தலைமையிலே போகக் கூடாது என்பதற்காக அவர்கள் வற்புறுத்தினார்கள் என்பதாலே, அதில் அடங்கியிருக்கக்கூடிய பொருள் என்ன என்பதை மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். இத்தோடு அதை விட்டுவிட முடியவில்லை. காரணம்......

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரைமீது நடைபெற்ற வெளிநடப்பு ஒன்றையே மிகப் பிரதானமாக வைத்து, அதிலே யார் முதலிலே படித்தார்கள் என்பதை திரு. சங்கரைய்யா அவர்கள் அதையே, தலைமை தாங்கியதையே அடையாளமாக எடுத்துக் கூறுகிறார்கள், அப்படி வாதாட வேண்டிய ஒரு நிலைமை அவருக்கு ஏற்பட்டிருப்பது குறித்து நான் வருத்தப்படவில்லை. எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் எல்லோரும் படித்துவிட்டு, எல்லோரும் ஒன்றாக வெளியேற வேண்டுமென்று நாங்கள் எண்ணிய காரணத்தினால், பார்வேர்ட் பிளாக் கட்சித் தலைவர் முஸ்லீம்லீக் கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சித் தலைவர், எல்லோரும் படித்ததற்குப் பின்னால் படிக்க வேண்டும் என்று கருதினோம். அப்படிக் கருதிய படி, முதலில் முஸ்லீம் லீக் தலைவர் லத்தீப் அவர்கள் இல்லாத காரணத்தினால், மாரிமுத்து அவர்கள் உடனடியாக படிக்க நேரிட்டது. அதிலே எந்தவிதமான வேறுபாடும் இல்லை. ஆனால், படிக்கின்ற வாசகங்கள் வேறுவேறாக இருந்தன என்பதையும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் அவர்கள் கட்சி சார்பாக, தாம் கருதுகிற கருத்துக்களை படித்துவிட்டு,



1980 பிப்ரவரி 7] [திரு. க. அன்பழகன்]

ஒன்றாக வெளியேற வேண்டும் என்பதற்காக, தனித்தனியாக ஆளுநர் அவர்கள் முன்னால் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக வெளியேறுவது நல்லதல்ல என்ற காரணத்தினால், நாங்கள் அவ்வாறு நடந்தோம்.

திரு. என். சங்கரய்யா : பேராசிரியர் அவர்கள் குறுக்கிட்டதற்காக நான் வருத்தப்படவில்லை, நாங்கள் மிகவும் நட்புறவுடன்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சித் தலைமையைப் பார்க்கிறோம் என்பதை நான் எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், அவர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். மேற்கொண்டு நான் சொல்லுவதிலே இருந்து அது தெரியும். திரு. வெங்கடசுப்பையா என்ற யூனியன் அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவர் காங்கிரஸ் கட்சி ஊழியர்கள் கூட்டத்திலே பேசினார். அந்த ஊழியர்கள் கூட்டத்திலே பத்திரிகைக்காரர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது அவருக்குத் தெரியாது. ஆகவே, அவர் இதை இந்திரா காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டம் என்றுகருதிக் கொண்டு, அவர் என்ன பேசினார் என்றால்,

"The Union Minister of State for Home and Parlimentary Affairs, Shri, P. Venkatasubbiah hinted at a party workers meeting that the Congress-I would not depend on the DMK for ever, and that it might go it alone at the opportune time.''

காங்கிரஸ் (ஐ) என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தையே என்றைக்கும் சார்ந்திருக்காது. ஒரு சரியான சந்தர்ப்பத்தைப் பார்த்து, தனியாகவே தன் சொந்த பலத்தைப் பெற காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்துகொள்ளும் என்று அவர் பேசினார்.

[முற்பகல் 10-50]

உடனே—

"A Congress-I leader nearby got up abruptly, nudged the Minister and hissed in his car that the press was covering the metting.''

உடனே, காங்கிரஸ் (ஐ) தலைவர் ஒருவர் 'பத்திரிகைக்காரர்கள் வந்திருக்கிறார்கள்' என்று காதோடு காதாகச் சொன்னார்- உடனே அவர்—

An apparently shocked Minister who had perhaps thought it was an in-camera meeting quickly recovered to say, "I hope our understanding and alliance with the D.M.K. would continue to hold good.''

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர்..

திரு. என். சங்கரய்யா : முன்னணியில் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் குறுக்கிட்டார்கள் பல தடவை. இப்படி மற்ற உறுப்பினர்களும் குறுக்கிடுவார்களானால் அந்த முறையைப் பின்பற்றுவதிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் வல்லமை பொருந்தியது என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்ப உரிமையுண்டு.

திரு. என். சங்கரய்யா : அவர் என்ன சொன்னார் என்றால்.

திரு. துரைமுருகன் : I am raising a point of order.

தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் பேசுகிற போது அப்படி ஏதோ அந்தக் கட்சியின் அமைச்சர் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். நான் வெளிப்படையாகக் கேட்கிறேன். ஒரு கட்சியின் ஊழியர்கள் என்றைக்கும் இன்னொரு கட்சிக்கு அடங்கித்தான் இருக்கவேண்டுமென்று யாராவது சொல்வார்களா? ஆகவே, கொழுகொம்பில் தானாகவே கொடி படருவது போல் தங்கள் கட்சியும் படரவேண்டுமென்று சொல்லுவதில் குற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. டி. எம். கே. டிப்பென்ட் பண்ணித்தான் இருக்க வேண்டுமென்று இருந்தால் நல்ல கட்சியாக வளர முடியாது. ஆகவே, அப்படிப் பேசியதில் குற்றம் ஒன்றும் இல்லை.

திரு. ரா. உமாநாத் : இது அவருடைய கருத்து. மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கிறார். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பெயரில் எங்கள் கட்சித் தலைவர் பேசும்போது குறுக்கிடுவது சரியல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், துணைத்தலைவர் அவர்களும் குறுக்கிட்டார்கள்—

"We yielded. We will yield. If we also do like that, nobody can speak in this House."

இது மாதிரி அடிக்கடி குறுக்கிடுவது சரியல்ல—

Then nobody can speak in this house. It is not good. அது வேண்டாம். அந்த முறையைக் கைவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி.எச். பாண்டியன்) உறுப்பினர் பேசிக் முடிக்கும் வரை யாரும் குறுக்கிட வேண்டாம். மாறுபட்ட கருத்தை உடனுக்குடன் தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். சங்கரய்யா : அப்போது அமைச்சர் வெங்கடசுப்பையா அவர்கள் கூறியிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டவுடன்—

"I hope our understanding and alliance would continue to hold good."

என்று கூறியிருக்கிறார், எங்களுடைய அண்டர்ஸ்டாண்டிங் தொடர்ந்து நீடிக்கும் என்று நம்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார். நண்பர் துரைமுருகன் அவர்கள் என்றைக்கும் ஒரு கட்சிக்கு அடங்கி இருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். என்னுடைய நிலையைப் பொறுத்தவரை இந்திரா காங்கிரஸ் கட்சி தி.மு.க. உறவைத துண்டித்துக் கொள்ளும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் குறிப்பிட்டேனே தவிர வேறல்ல அதில் அடங்கியிருக்கும் அர்த்தத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை புரிந்து கொள்ளும் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இன்று ஆளும் கட்சி அண்ணா தி.மு.க. பற்றி உங்கள் நிலை என்ன என்று கேட்டார்கள். நான் இன்றைக்குச் சொல்லுகிறேன். திராவிட இயக்கத்தின் இரண்டு கிளைகளாகப் பிரிந்திருக்கக்கூடிய கட்சிகள் தங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அரசியல் போராட்டத்தின் காரணமாக இந்தப் பெருமுதலாளிகளின் கட்சி தமிழகத்தில் நுழைய இடம் தரக் கூடாது என்பது தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் திட்டவட்டமான கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதை விட்டு விட்டு இன்றைக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியோடு சேருவது யார் என்ற போட்டா போட்டியில் திராவிட இயக்கத்தின் இரண்டு கிளைகளும் இறங்குமானால் இந்த இரண்டு பிரிவுகளுமே பாதிக்கப்படுவதோடு தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படும். ஜனநாயக இயக்கத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : இந்த அருமையான அறிவுரையை நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் தோல்வியடைந்த பிறகு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும் திரு. சங்கரய்யா போன்றவர்களும் அது போன்ற கருத்துக்களைச் சொல்கிற வேறு அரசியல் கட்சிக்காரர்களும் சொல்லவில்லையே. அதற்கு என்ன காரணம் என்றுதான் புரியாமல் தவிக்கிறேன்.

திரு. என் சங்கரய்யா: அதையும் நாங்கள் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறோம். இன்றைக்குத் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் போட்டி சக்திகள் என்றால் அதிலே யார் வெற்றிபெறுவது என்பது சாதாரண விஷயம். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை வரும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 1977 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலிலே ஜனதா கட்சியோடு சேர்ந்து இந்திரா காந்தியை எதிர்த்து எதேச்சாதிகார சக்தியை எதிர்த்துப் போராடினோம். சட்ட மன்றத் தேர்தல் வரும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியடைந்து விட்ட காரணத்தால் அதோடு உறவு வைத்துக் கொள்ளவில்லை என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை அல்ல, தோல்வி அடைந்துவிட்ட காரணத்தால் தேர்தல் உடன்பாடுகளை கைவிடக் கூடிய நிலையிலே மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சியின் நிலை இல்லை. மாநில ஆட்சியைப் பொறுத்தவரை, அதற்கு முன்பு நடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் ஏற்படுவதைத் தமிழ்நாட்டு மக்கள் விரும்பவில்லை என்ற எங்கள் அரசியல் மதிப்பீட்டின் அடிப்படையிலே சட்டமன்றத்திலே உடன்பாட்டுக்கு நாங்கள் முயற்சியே செய்யவில்லை என்பதை எத்தனையோ தடவைகள் பேரவையிலே நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம். பாராளுமனறத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றதற்கும் சட்டமன்றத் தேர்தலிலே நாங்கள் வைத்திருக்கிற உறவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : 1977-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் சழகம் தோற்றுவிட்ட காரணத்தால் மாநில மக்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை விரும்பவில்லை என்ற முடிவுக்கு வந்ததாகவும், அதை இந்த அவையிலே பலமுறைகள் எடுத்துக் கூறியதாகவும் திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் நாடாளுமன்றத் தேர்தலிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்று இருக்கிற இந்தக் காலகட்டத்திலே



இந்த மாநில மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை விரும்பவில்லை என்று ஏன் கருதக் கூடாது?

திரு. என். சங்கரய்யா : அது உண்மையல்ல, காரணம் பாராளுமன்ற தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்று விட்ட காரணத்தால் அதோடு உறவு நீடிக்கவில்லை என்று நீங்கள் சொல்வது உண்மையில்லை. ஏனென்றால் 1973 ஆம் ஆண்டு திண்டுக்கல் தேர்தல் நடைபெறும்பொழுது நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கவில்லை, எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தோம், ஏன், அப்போது உங்களது ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆட்சியின் கொள்கைகள் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் விரோதமாக இருந்தது. எனவே நாங்கள் உங்களை எதிர்க்க வேண்டிய நிலைமை இருந்தது. ஆகவே அப்படி எதிர்த்தாலும் பொது விரோதியை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக இந்த உள் பிரச்னைகள் இருந்தாலும் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலே சேர்ந்து போராடினோம். ஆனால் அடுத்தபடியாகத் தமிழ் நாட்டை யார் நடத்துவது என்று வருகிறபோது எங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த காலத்திலே பின்பற்றிய கொள்கைகளின் காரணமாக அவர்கள் கையிலே ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்படுத்தினால் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பாதகமான நிலைமை ஏற்படும் என்ற காரணத்தால் நாங்கள் உடன்பாட்டைச் செய்யவில்லையே தவிர, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை எத்தனையோ தடவைகள் தெரிவித்துக் இருக்கிறோம், இன்றைக்கும் தெரிவிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அடிக்கடி குறுக்கிடுவதை தாங்களோ அல்லது மாண்புமிகு திரு சங்கரய்யா அவர்களோ தவறாகக் கருதக் கூடாது. அவர்கள் ஆளுநர் உரையை விட்டுவிட்டு அவர்களுடைய உரையிலே பெரும்பகுதியை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே செலவிடுகிற காரணத்தால், அந்தக் கட்சியினுடைய தலைவன் என்ற முறையிலே எதிர்க்கட்சியிலே வீற்றிருக்கிற நான் அடிக்கடி குறுக்கிட வேண்டியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி பேசாமல் இருந்தால் நான் குறுக்கிடவே மாட்டேன், திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிப் பேசியகாரணத்தால் நான் குறுக்கிட விரும்புகிறேன். அப்படித் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடந்த கால அரசினுடைய

கொள்கைகள் ஒத்துவராத காரணத்தால் அவர்களோடு கூட்டுச் சேரவில்லை என்று குறிப்பிட்டார்கள். இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசினுடைய கடந்த கால கொள்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்துக் கொண்டிருக்கிறதா?

திரு. என். சங்கரய்யா : நான் மீண்டும் கூறுகிறேன். நாடாளுமன்றத் தேர்தலினுடைய தோல்விக்கும் தி.மு.க.வின்பால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொறுப்பிலே எடுத்த கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை. உதாரணம் ஒன்று சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபோது சென்னை நகரத்திலே உள்ள எங்களுடைய கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர் வி. பி. சிந்தன், தோழர் ஹரிபட், தோழர் பரமேஸ்வரன், தோழர் குசேலர் ஆகியவர்களை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்தது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. குற்றங்களுக்கு நீதிமன்றத்திலே நிறுத்தினால் கூட நாங்கள் கவலைப்படமாட்டோம். ஆனால் சென்னை நகரத்திலே பெருமுதலாளிகள் நிர்பந்தித்தார்கள் என்ற காரணத்திற்காக அந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் வெளியே இருந்தால் அவர்களுடைய நலன்களுக்கு ஆபத்து என்று அந்த நான்கு தலைவர்களையும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யவில்லையா? அப்படி கைது செய்து அடக்குமுறை ஆட்சியைப் பின்பற்றிய ஒரு கட்சியை நாங்கள் மறுபடியும் இந்த ஆட்சியிலே அமர்த்துவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ தமிழ்நாட்டிலே உள்ள தொழிலாளர்களோ ஏற்றுக்கொள்வார்களா என்பதுதான் பிரச்னையே ஒழிய பாராளுமன்றத் தேர்தலுக்கும். அந்த முடிவுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் மீண்டும் கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00.)

அடுத்து இன்றைக்கு மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கேட்டார்கள். இங்கே ஆளுநர் உரைமீது பேசுவதற்கு பதிலாக, அவர்கள் இதை பேசிக் கொண்டிருக்கிறார்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று உண்மை. ஏன் அதை பேசுகிறேன் என்றால் கவர்னர் உரை நிகழ்த்துவதற்கு உரிமை இல்லை, அரசாங்கமே இருப்பதற்கு உரிமை இல்லை என்று நீங்கள் ஆட்சேபணை பண்ணியிருக்கிற நேரத்தில் அதற்குப் பதில் அளிக்காமல் எப்படிப் பேசுவது? (கைதட்டல்). இந்த ஆட்சி இருக்க வேண்டுமா இருக்க



வேண்டாமா என்ற கருத்துக்களை பல கட்சி உறுப்பினர்களும் கூறி ஒரு பிரச்னை உருவாக்கப்பட்டிருப்பதால், அந்தப் பிரச்னைக்கு பதில் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : நீங்கள் எப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசலாம் என்று நான் உரிமை குரல் எழுப்பவில்லை. அவர்களுடைய கடமையை அவர்கள் ஆற்றுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அதிகமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் நான் குறுக்கிட விரும்புகிறேன் என்று என்னுடைய குறுக்கீடுகளுக்குக் காரணம் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல. ஏனென்றால் ஒரு கட்சியினுடைய தலைவர் பேசுகையில் அடிக்கடி குறுக்கிடுவது முறையல்ல. அப்படி முறை தவறி குறுக்கிடுகிறேன் என்று தவறாக கருதுவார்களோ என்ற காரணத்தினால்தான் அந்த கருத்தைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

திரு. என். சங்கரய்யா : நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் குறுக்கிடுவதுபற்றி எந்த வித்மான மனவருத்தமும் அடையவில்லை. நட்புறவோடு தான் நானும் அதை ஏற்றுக் கொண்டு விளக்கமும் அளிக்கிறேன். ஏனென்றால் நான் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த இந்த இரண்டு கட்சிகளுமே கொள்கை அடிப்படையில் எங்களோடு என்றாவது ஒரு நாள் வரவேண்டிய இயக்கம் என்றுதான் கருதுகிறேன். இந்திய பெரு முதலாளிகளுடைய அந்த இயக்கத்தை எதிர்த்து அவர்கள் எங்களோடு வருவார்கள் என்றுதான் கருதுகிறேன்.

ஆகவேதான் அவ்வப்போது அந்த இயக்கங்கள் மத்தியில் இருக்கக்கூடிய கொள்கைகள், பெரு முதலாளிகளின் கட்சியின்பால் என்ன நிலைமை என்பதை பொறுத்தும், அவர்கள் பின்பற்றக் கூடிய கொள்கைகளைப் பொறுத்தும் எங்களுடைய ஆதரவை தெரிவிக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி அதிகமாக பேச வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. லேசாகத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியைப் பற்றித்தான் அதிகமாக பேச வேண்டும் என்று என்னுடைய விருப்பம். காங்கிரஸ் கட்சியை தமிழகத்திலே தனிமைப்படுத்த வேண்டும். அவர்கள் புதிய நேச சக்திகளை திருப்பிக் கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வராமல் அவர்களை தனிமைப்படுத்த வேண்டும், அந்த விதமான ஜனநாயக ஆட்சி தமிழகத்திலே நடக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கையே தவிர வேறு அல்ல.

[திரு. என். சங்கரய்யா] [1980 பிப்ரவரி 7

இந்திரா காங்கிரஸ் கட்சியை தனிமைப்படுத்த வேண்டும் என்று சொல்கிறீர்களே என்று சிலர் கேட்கலாம். இதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா என்று கேட்கலாம் உண்மை. பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் நின்று தேசிய விடுதலைக்கு பெரும் பங்காற்றியவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர். அது வேறு பிரச்னை. ஆனால் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு கிளம்பிய வர்க்க போராட்டங்கள், காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற கொடுமையான அடக்கு முறைகள் ஆகியவைகளுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். அந்த அடிப்படையிலே தான் காங்கிரஸ் கட்சியினுடைய அரசியல் கொள்கையை எதிர்க்க வேண்டிய நிலைமைக்கு நாங்கள் ஆளாக்கப் பட்டிருக்கிறோம்.

1975-ம் ஆண்டிலே அவசரகால நிலைமையைக் கொண்டு வந்த குழுவினால் மீண்டும் மத்திய சர்க்காரிலே ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால், அந்த குழுவில் கடந்த காலத்திலே என்னென்ன செய்தார்கள் என்பதை இந்திய மக்கள் அறிந்திருப்பதால் அந்த குழுவினால் இந்திய ஜனநாயகத்துக்கு பெரும் அபாயம் ஏற்படக் கூடும் என்று நாங்கள் அஞ்சுவதால் தான், இந்திய ஜனநாயகத்திற்கு பாதுகாப்பு வேண்டும் என்று அரசியல் நிலைமையில் எதிர்க்கிறோமே தவிர, திருமதி இந்திரா காந்தி அம்மையாரையோ அல்லது அவர்களுடைய கட்சி உறுப்பினர்களையோ எதிர்க்கவில்லை. தனிப்பட்ட முறையில் எங்களுக்கு எந்தவிதமான விரோதமும் கிடையாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்பது மாநில முதலமைச்சர்கள் மாநில சட்டமன்றங்களை கலைக்கக் கூடாது என்று மாநாடு கூட்டியபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னுடைய அபிப்பிராயமும் அதுதான் என்ற அவர்கள் அந்த மாநாட்டுக்குச் செல்ல முடியாவிட்டாலும், பத்திரிக்கை நிருபர்களுக்கு வெளியிட்ட செய்தியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாங்கள் குறித்துக் கொண்டோம். இன்றைக்கு ஐக்கிய மாகாணத்திலே ஜனதா கட்சியிலே பிளவு ஏற்பட்டு, அதன்பிறகு இப்போது, லோக்தளமும், ஜனதா கட்சியும் சேர்ந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை லக்னோவில் நடத்தினார்கள். காங்கிரஸ் அல்லாத சட்டமன்றங்களை கலைப்பதை எதிர்த்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், லோக்தளமும், ஜனதா கட்சியும், தேவராஜ் அர்ஸ் காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து டெல்லியிலே ஒரு மாபெரும் பேரணியை நடத்தியிருக்கிறார்கள். ஏன் அதை கூறுகிறேன் என்றால், நம்முடைய நண்பர் மாரிமுத்து



1980 பிப்ரவரி 7] [திரு. என். சங்கரய்யா]

அவர்கள் கேட்டார்கள். ஜனதா கட்சி என்பதெல்லாம் இடது சாரி சக்திகளா என்று கேட்டார்கள். இடது சாரி சக்திகள் என்ற அந்த அடிப்படையிலே அதை நாங்கள் பார்க்கவில்லை. எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பதற்கு முன் வரக்கூடிய அத்தனை கட்சிகளும் சேர்ந்து இந்த குறிப்பிட்டக் பிரச்னையில் ஒன்று பட வேண்டும். பிறகு பிரச்னைகள் வரும்போது அவரவர்கள் கட்சிகளுக்கேற்ப கொள்கைகளை வைத்துக் கொள்வார்கள்.

அதைப்போல நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஐக்கிய மாகாணத்திலே உத்தரப்பிரதேச சட்டமன்றத்திலே இந்த மாநில சட்டமன்றங்களை மத்திய சர்க்கார் கலைப்பதை எதிர்த்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதுமாதிரியான ஒரு தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றத்திலும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். அதற்கு, மாநில சுய ஆட்சி பாதுகாப்பிற்காக ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகத்தை உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய அபிப்பிராயத்திலே இன்று திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இருமொழிக் கொள்கைகளைக் பின் பற்றுகின்றன. ஆனால் இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மும்மொழி கொள்கையை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அப்படி பார்த்தால் மாநில சுயஆட்சி என்பதை பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கொள்கையை கொண்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில், மாநில சுய ஆட்சியைப் பொறுத்த வரையில், சமீபத்தில் திருமதி சுசீலா கோபாலன் நாடாளு மன்றத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து திரு. சஞ்சய் காந்தி அவர்கள் பேசியிருப்பதை நமது உறுப்பினர் ரமணி அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மாநிலத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமே தவிர கூடுதலாக்கப்படக் கூடாது, மாநிலங்களின் காரியங்களிலே மத்திய அரசாங்கம் குறுக்கிடுவதற்கு எந்த விதமானதடையும் கிடையாது என்று திரு. சஞ்சய்காந்தி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில் இன்றைக்கு மாநில சுயாட்சியைப் பாதுகாக்க வேண்டுமென்றால், ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றால், யதேச்சாதிகார சக்திகளை எதிர்த்து ஒன்றுபட்டுக் குரல் எழுப்புவதைத் தவிர வேறு வழி ஜனநாயக சக்திகளுக்கு இல்லை. ஆகவேதான் நாங்கள்

கூறுகிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களுக்கு ஒரு விளக்கம் கேட்க வேண்டியிருக்கிறது. பத்திரிக்கைகளிலே சில செய்திகள் அடிபடுகின்றன. இந்திரா காங்கிரஸ் கட்சியோடு சில பேச்சு வார்த்தைகள் நடத்த முயற்சி நடக்கிறது என்ற செய்திகள் வருகின்றன. இப்படிப்பட்ட அந்தச் செய்திகளுக்கு என்ன ஆதாரம் என்று தெரியாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தான் எங்களுக்குத் தங்கள் கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு எங்களுடைய பணிவான அபிப்ராயத்தில் எத்தனை வித்தியாசங்கள் இருந்தாலும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இன்றைக்கு யதேச்சாதிகார சக்திகள் தமிழகத்திலே ஆதிக்கத்திற்கு வராமல் தடுப்பதுதான் நம் அனைவருடைய முயற்சியாக இருக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

ஆகவே, இன்றைக்கு மத்திய அரசாங்கத்தோடு ஒரு மாநில அரசாங்கம் என்ற முறையில் சிறந்த உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்தான், அதைத்தான் திரிபுராவில் ஏற்பட்ட எங்கள் அரசும், மேற்கு வங்கத்திலே ஏற்பட்ட எங்கள் அரசும், அண்மையிலே கேரளாவிலே அமைக்கப்பட்ட எங்கள் அரசும் மத்திய அரசாங்கம் என்ற முறையில் சிறந்த உறவுகளை வைத்துக் கொள்ளத்தான் விரும்புகிறது. ஆனால், கட்சி என்ற முறையில் நான் கேட்க விரும்புவது, இந்திரா காங்கிரஸ் கட்சியோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கைகளை மேற்கொணடு எப்படி வரையறுக்கப் போகிறது என்றுதான் நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

இப்பொழுது நடந்து முடிந்த தேர்தலில் நீங்கள் ஒரு நிலையை எடுத்தீர்கள். திருமதி இந்திரா காந்தியின் ஆட்சி ஏற்பட்டால் 25 ஆண்டுக் காலத்திற்கு நாட்டிலே ஜனநாயகம் ஏற்படாது என்றுகூட மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல பொதுக் கூட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். அப்படி யென்றால் அந்த யதேச்சாதிகார சக்தியை எதிர்த்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடிய அரசியல் நிலையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக நிற்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இன்றைக்குப் பல வதந்திகள் வருகின்றன. நேற்றுகூட ஒரு வதந்தி வந்தது. அந்த வதந்தியைக் கிளப்பியவர்களே அந்த வதந்தியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய



ரிசர்வ் போலீஸ் படைகள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சி இன்றோ நாளையோ கவிழ்க்கப்படும் என்றெல்லாம் பேசுகிறார்கள். மத்திய ரிசர்வ் போலீஸ் படை என்பது மாநிலத்தினுடைய சட்டம், ஒழுங்கு அதிகாரத்திலே குறுக்கிடுவதாகும். இதை இந்த மாகாணத்திலே உள்ள ஜனநாயக சக்திகள் ஏற்றுக் கொண்டிருக்கிறதா? மத்திய ரிசர்வ் போலீஸ் படை வருவது என்பதும், மாநில ஆட்சி மெஜாரிட்டியை தன்னுடைய சட்டமன்றத்திலே வைத்திருக்கும்பொழுது ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று கேட்பதும், இன்னும் ஒருபடி மேலே சென்று, மத்திய அரசு கலைக்க வேண்டுமென்று கேட்பதும் ஜனநாயகத்திற்கு அடிப்படையிலேயே உலை வைக்கக் கூடிய காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அவர்கள் எடுத்திருக்கும் இந்திரா காங்கிரசின் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயக சக்திகளோடு ஒன்றியிருப்பதில் உறுதியாக இருக்க சில முன் முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திரா காங்கிரஸ் கூட்டிலிருந்து வெளியேறி, தமிழ்நாட்டிலேயும், இந்தியாவிலேயும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியலில் அந்தக் கொள்கையை, அந்தக் கோரிக்கையை வேண்டுகோளாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தவரையில், அவர்கள் பின்பற்றும் கொள்கை சம்பந்தமாக ஒருசில விஷயங்களை மட்டும் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சில பல நடவடிக்கைகளைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாக விமர்சித்தது, பகிரங்கமாக விமர்சனம் செய்தது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அதன் அடிப்படையிலே சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

• போலீஸ்காரர்கள் சங்கத்திற்காக இயக்கம் நடத்தியபொழுது சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் மீது உள்ள வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும். அவர்களைக் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றியதை ரத்து செய்ய வேண்டும்.

அவர்கள் எழுப்பியிருக்கின்ற பிரச்னைகளை ஜனநாயக கண்ணோட்டத்தோடு அரசாங்கம்அணுக வேண்டும்என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பலமாக வற்புறுத்துகிறது. அரசாங்கம் ஊழியர்களானாலும் சரி, மாணவர்கள் ஆனாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, ஒரு நட்புறவான அணுகு முறையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த காலத்தில் பின்பற்றியது இல்லை. அதன்காரணமாகத் தான் தமிழகத்திலே பல பகுதிகளில் மக்களின் ஆதரவை இழக்க வேண்டி நேர்ந்தது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களே ஏற்று இருக்கிறார்கள்.

அதைப்போல எங்கள் உறுப்பினர்கள் பேசும்பொழுது தொழிலாளர்களது பலபிரச்னைகளிலே அரசாங்கம் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சேஷசாயி காகித ஆலைத் தொழிலாளர்களைப்பற்றி இந்தத் தேர்தலுக்கு முன்பு பலமுறை வற்புறுத்தப்பட்டு, அந்தப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்று பல சங்கங்கள் சேர்ந்து நடத்திய போராட்டம், பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போனஸ் பிரச்னையைத் தீர்த்துவைப்பார் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தப் பிரச்னையை ஏற்றுக்கொண்டு அந்தப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதோடு, தொழிற்சங்கத்திற்காகப் பாடுபட்டபொழுது வேலை நீக்கம் செய்யப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் இருக்கிறார்கள், அவர்கள் மீது உள்ள நடவடிக்கைகளை நிர்வாகம் ரத்து செய்ய வேண்டுமென்றும் நாங்கள் கேட்கிறோம்.

(முற்பகல் 11-10)

110 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று கேட்கிறோம். அதே போல் தான் காவேரி ஸ்ட்ரக்சுரல்ஸ் என்ற தொழிற்சாலையிலே கடந்த பல மாதங்களாக நடைபெற்றுக் கொண்டு வரக்கூடிய தகராறைத் தீர்த்து, இந்த மாநில அரசாங்கம் அங்கு எந்தத் தொழிலாளியும் வேலையை விட்டு நீக்கப்பட மாட்டார்கள் என்ற உத்திரவாதத்தின் அடிப்படையிலே தீர்க்க வேண்டும் என்று கேட்கிறோம். அதேபோல குசேலர் தலைமையில் உள்ள என்ஜின் வால்வ்ஸ் என்ற தொழிற்சாலையிலே நடைபெற்ற பிரச்சினைகளையும், பாடியிலே டி.வி.எஸ். முதலாளிகளின் பழிவாங்கும் போக்கிலே பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இன்டஸ்டிரியல் டிரிப்யூனலுக்கு விடவேண்டும் என்ற கோரிக்கையைக்கூட தொழிலாளர் இலாக்கா ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு





அந்தத் தொழிலாளர் இலாக்கா பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களின் பிரச்சினையை இன்டஸ்டிரியல் டிரிப்யூனலுக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோலத்தான் போக்குவரத்துத் துறை. வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தொழிலாளர்களுக்குப் போனஸ் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் சரியான கொள்கை அல்ல. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தொழிலாளர்களுடைய உரிமை. ஆகவே இப்படித் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடாதவர்களுக்குப் பாதுகாப்பு என்று சொன்னால் இந்த மாநிலத்தில் இருக்கிற தொழிலாளர் இயக்கமும், ஜனநாயக இயக்கமும் வளராது. தொழிலாளர் துறையில் ஒரு அடிப்படையான மாற்றத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். தொழிலாளிகளையும், மத்தியதர மக்களையும் அவர்களுடைய குறைகளை இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு இருந்து அவர்களுடைய குறைகளை அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து பேசி புதிய அணுகு முறையை ஏற்படுத்த வேண்டும். இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள், மாநில அரசாங்கம கொடுத்த வாக்குறுதிகளை அமல்படுத்தவில்லை, என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதனுடைய உண்மை நிலை என்ன என்று ஆராய்ந்து அவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளை இந்த மாநில அரசாங்கம் எந்த அளவுக்குத் தீர்க்க முடியுமோ அந்த அளவிற்குத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்த மதுவிலக்குக் கொள்கை. இதிலே எங்களுடைய நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்ட விரும்புகிறோம். இந்த மதுவிலக்குக் கொள்கை தோற்றுவிட்டது, என்று கூறுகிறோம். அதைக் கடந்த காலத்திலே, மதுவிலக்குக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்த போது நாங்கள் எதிர்த்தோம். இன்றைக்கு அனுதாபத்தின் அடிப்படையிலே இது சாதாரண மக்களைப் பாதிக்கிறது என்று சொல்லி அதைத் தளர்த்துவதாக அரசாங்கம் முடிவு செய்வதாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டும் போதாது. எதற்காக 30 வயது வந்தவர்களுக்கு மட்டும் இந்த உரிமையை, லைசன்சு எடுப்பதை, வற்புறுத்த வேண்டும். இதன் மூலம் பல லஞ்ச லாவண்யம் வளர ஊக்கம்

கொடுக்கும். இன்றைக்கு ரமணி அவர்கள் பேசும்போதும் குறிப்பிட்டார்கள். நான் கூடப் பார்க்கிறேன் இந்திரா காங்கிரஸ் நிதி அமைச்சர் ஆர். வெங்கட்டராமன் பேசும்போது பாராளு மன்றத்திலே குறிப்பிட்டார். மதுவிலக்கை அமல் படுத்த வேண்டுமா, வேண்டாமா என்று மாநிலங்கள்தான் தீர்மானிக்க வேண்டும், மத்திய அரசு ஒரு விதமான உதவியும் செய்வதற் கில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் ஒரு முடிவெடுத்துவிட்ட பிறகு பலவீனமான மக்களை நாம் பாது காக்க வேண்டியதில்லை. மதுவிலக்கு என்ற பிரச்சாரத்தைச் செய்வோம். அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் பாடுபடுவோம். சட்டரீதியான தண்டனைக் கொடுத்து இந்த சீர்திருத்தத்தை நிறைவேற்ற முடியாது.

எனவே மதுவிலக்குக் கொள்கைகளை ரத்து செய்து, அதிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டு ஏழை மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஏற்றுக் கொள்ளப் போகிறதா இல்லையா என்பது அவர்களுடைய பிரச்சினை. ஆனால் என்னுடைய கருத்தைக் கேட்டால், இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளையோ, இந்த மதுவிலக்குக் கொள்கை வெற்றி அடையாது. அதைப் பூரணமாகக் கைவிட்டு அதன் மூலம் கிடைக்கக் கூடிய வருமானத்தை நல்ல முறையில் பயன்படுத்தி தமிழகத்திலே உள்ள ஏழை மக்களுடைய வளர்ச்சிக்கு உதவி செய்தால் பெரிய அளவுக்கு உதவியாக இருக்கும்.

இறுதியாக விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினையில் கூலித் தொழிலாளர் சட்டம், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் போன்ற பல சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த நடவடிக்கைகளை, முயற்சிகளை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா வரக்கூடிய நேரத்தில் உழைக்கின்ற விவசாயிகளுக்குச் சாதகமாக எப்படி அமைய வேண்டும் என்பதை எங்களுடைய கருத்துக்களை நான் அப்போது கூறுகிறேன். ஆனால் ஒன்று. இதிலே இந்த ஒரு குத்தகைதாரர்க்கு இருக்கக் கூடிய நிலத்தை 5 ஸ்டாண்டர்டு ஏக்கரில் இருந்து 3 ஸ்டான்டர்டு ஏக்கராக குறைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. 5 ஏக்கர் வைத்திருக்க கூடிய குத்தகை விவசாயிகள் இன்றைக்கு வாழ்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலே நிலத்திலே பாடு படாத ஒருவர் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம்



என்று சட்டம் இருக்கும்போது, பாடுபடக்கூடிய ஒரு குத்தகை விவசாயி 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்துக் கொள்வது முற்றிலும் பொருத்தமாகும். ஆகவே இது ஒரு குறுக்கு யோசனையாக நிலப் பிரபுக்களிடம் இருந்து நில உடமை வரம்புக்கு அப்பாற்பட்டு வைத்திருக்கக்கூடிய பினாமி நிலங்களை நாம் கைப்பற்றி அதற்குப் பதிலாக குத்தகை விவசாயிகளிடம் இருந்து இந்த உபரி நிலங்களை எடுக்கின்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

மற்ற கடன் நிவாரண விவசாயப் பாதுகாப்புச் சட்டம் இவைகளை யெல்லாம், இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான திட்டங்களை யெல்லாம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. இந்த அரசாங்கம் அறிமுகப்படுத்தும் இத்தகைய ஆக்கபூர்வமான சட்டங்களுக்கு எங்களுடைய யோசனைகளை சொல்லி அவைகளை நடைமுறைப்படுத்த முயலுவோம். ஒன்று சொல்ல விரும்புகிறேன். மக்களுக்குச் சாதகமான கொள்கைகளை இந்த அரசாங்கம் பின்பற்றுமேயானால், தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு சாதகமான கொள்கைகளை மேலும் பலப் படுத்துமேயானால் நிச்சயமாக மக்களின் நல்ல எண்ணத்தோடு மற்ற எதேச்சாதிகார சக்திகளை இந்த அரசாங்கம் சமாளிக்கும். அந்த தைரியத்திலே இந்த அரசாங்கம் செயல்படவேண்டும். அதற்குப் பதிலாக இந்திரா காங்கிரஸ் கட்சியிடத்திலே நாமும் கூட்டுப் பேசுவோம் என்ற அந்த உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய முயற்சிக்கற பாதை சரியானது அல்ல என்பதை எடுத்துக்கூறி, இந்த கவர்னர் உரையிலே நான் வைத்திருக்கக்கூடிய இந்தப் பிரச்னைகளை தமிழ்நாடு அரசாங்கம் பரிசீலித்து ஒரு புதிய அணுகுமுறையைத் தொழிலாளர்கள் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் மக்கள் பால் நம்பிக்கையை வைத்து, சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். மேற்கு வங்கத்திலே, கேரளத்திலே, திரிபுராவிலே இருக்கக்கூடிய அரசுகள் மக்களுக்கு நன்மைகளைச் செய்து இந்திரா காங்கிரஸினுடைய சவாலை ஏற்று, சமாளித்துக் கொண்டிருக்கிறது. இந்த மூன்று மாநிலங்களிலே செயல்படும் அரசாங்கங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைக் கொண்டது அல்ல. என்ன காரணம்? இந்திரா காங்கிரஸ் அரசியலைக் காட்டிலும் திறமையான அரசாங்கம் சிறப்பான கொள்கைகள் கொண்ட திட்டங்களை அமல் நடத்து வதால் அந்த மக்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியை நிராகரித்தார் கள். அதேபோல தமிழக மக்கள் மீது நம்பிக்கை கொண்டு, அவர்களுடைய நன்மைக்காகச் செயல்பட்டு, அவர்களோடு நேச சக்திகளாக இருந்து, அந்த தைரியத்திலே எதேச்சாதிகார சக்திகளை முறியடிக்கிற அந்தப் பாதையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியின் பற்ற வேண்டும், இந்த அரசாங்கம் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1980 பிப்ரவரி 7

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

* திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, திரு பாண்டியன் அவர்கள் கொடுத்துள்ள கவர்னர் உரைக்கு நன்றி உரை அளிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகிற வாய்ப்பு பெற்றதைக் கருதி நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் அவர்கள் அந்த உரையிலே எடுத்த எடுப்பிலேயே பல சிறப்பான கருத்துக்களை இந்த மாமன்றத்தின் மூலமாக நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். புதிதாக மத்தியில் அமைந்துள்ள ஆட்சிக்கு அவர்கள் வரவேற்புக் கூறியிருக்கிறார்கள்.

மத்தியிலே இந்த ஆட்சி, புதிதாக மலர்ந்த நேரத்தில் குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஒரு உரை ஆற்றியதை இந்த மன்றத்தில் இருக்கிற நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர் பேசும்போது, மத்திய மாநில உறவுகளைப் பற்றி குறிப்பிட்டிருப்பதை, இந்திய அரசாங்கத்திலே என்னென்ன காரியங்களை மேற்கொள்ளவிருக்கிறோம் என்பதைப்பற்றிய குறிப்புகளை, குறிப்பாக 20 அம்ச திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் அவர் தமது உரையில் குறிப்பிட்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர் அரசியலைப் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் மத்திய மாநில உறவுகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் பேசும்போது மத்திய மாநில உறவுகளை சுமூக தன்மையிலே பராமரிக்க மத்திய அரசு முயலும், சர்வதேச விவகாரங்களில் கோஷ்டி சேரா கொள்கையை அரசு பின்பற்றும். மேலை நாடுகளுடன் நட்புறவை வலுப்படுத்தும். சிறிய நடுத்தர விவசாயிகளுக்கும், விவசாயிகள், தொழிலாளர்களுக்கும் உதவக் கூடிய வகையில் விவசாய கிராம வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்த அரசு முதலிடம் கொடுக்கும். விவசாய உற்பத்தியை பெருக்க உரங்கள் கடன் வசதி, நீர், மின்சாரம், டீசல், மண்ணெண்ணெய் போன்றவை விவசாயிகளுக்கு கிடைக்க மாநில அரசுகளின் ஒத்துழைப்பை மத்திய அரசு கோரும். விவசாயிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய விலையில் அரசு கவனம் செலுத்தும் என்று தமது உரையிலே அவர் கூறியிருக்கிறார்கள். இந்த உரையின் மீது நம்முடைய தமிழக அரசாங்கம் தங்களுடைய அரசினுடைய கொள்கையாக நல்ல பல திட்டங்களை விவரங்களை இந்த மாமன்றத்திற்கு ஆளுநர் உரையின் மூலமாக அளித்திருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக சபைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980 பிப்ரவரி 7] [திரு. க. இராசாராம்]

[முற்பகல் 11-20]

இப்போது மத்தியில் புதிதாக அமைந்துள்ள ஆட்சிக்கு தமிழ் நாட்டு மக்களின் சார்பில் கவர்னர் அவர்கள் வரவேற்புக் கூறி தன்னுடைய உரையைத் தொடங்கியிருக்கிறார்கள். ஜனநாயகத்தில் மத்திய அரசு, மாநில அரசு என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை இந்திய வரலாற்றை நன்கு உணர்ந்தவர்கள் அறிவார்கள். அந்த வகையில் இந்தியாவிலே இன்றைக்கு மட்டுமல்ல, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒற்றுமை இருப்பதும், கருத்து வேறுபாடுகள் இருப்பதும் தவிர்க்க முடியாதது ஆகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பேரறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவப் படம் இருக்கிறது. ராஜாஜியின் திருவுருவப் படம் இருக்கிறது. எங்களையெல்லாம் ஆளாக்கிய பெரியாரை நினைத்துக் கொள்கிறேன். அவர்களை எல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். இந்த மாநிலத்தில் 9 ஆண்டு காலம் ஆண்ட பெரும் தலைவர் காமராஜ் அவர்களை எண்ணிப் பார்க்கிறேன். அவர்களை எண்ணித்தான் இந்த உரையின் மீது நான் இந்த அவையில் பேசிக்கொண்டு இருக்கிறேன். அண்ணா அவர்களானாலும் சரி, பெரியார் அவர்களானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, அவர்கள் அத்தனை பேரும் மத்திய அரசு மாநில அரசுகளிடையே இணக்கமான உறவு இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். கருத்து வேறுபாடுகள் வந்த நேரத்தில் அதை நல்ல முறையில் எதிர்த்தும் சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் பி. சி. ராய் அவர்களை அனைவரும் நன்றாக அறிவார்கள். மேற்கு வங்கத்தின் ஒப்பற்ற காங்கிரஸ் தலைவராக வளர்ந்து, பண்டித நேருவுக்கு தனிப்பட்ட மருத்துவராக இருந்தவர். அவர் மத்திய அரசுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, தன்னுடைய கட்சியைச் சேர்ந்த மத்திய அரசாகவே இருந்தபோதிலும், அந்த மத்திய அரசை எதிர்த்து வழக்குப் போடக்கூடிய காலகட்டத்திற்கு ஆளானார்கள் என்ற சரித்திர வரலாற்று உண்மையை யாரும் மறந்து விட முடியாது. அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து இருக்கிறது. ராஜாஜிக்கும் மத்தியப் பேரரசுக்கும் சில கருத்து வேறுபாடுகள் இருந்து இருக்கின்றன, பெரும் தலைவர் காமராஜர் அவர்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து இருக்கிறது. அப்படி இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக்கும் மத்திய அரசோடு கருத்து வேறுபாடு உண்டாகிற வகையில் நிலைமை போய் இருக்கிறது. அப்படி

கருத்து வேறுபாடுகள் வருவது நாட்டுக்காக வருவதே தவிர, சுய நலத்திற்காக அல்ல. அப்படி இருந்த கருத்து வேறுபாடுகள் பலவற்றை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். அப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் வராத தன்மையில், ஒரு பெரும் தன்மையில் ஆட்சி நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது என்பதை ஆளுநர் உரையில் நமக்கு எடுத்துக்காட்டப்பட்டு இருக்கிறது.

20-அம்ச திட்டத்தைப் பற்றி மாண்புமிகு திரு. சஞ்சீவ ரெட்டி ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். திரு. சஞ்சீவரெட்டி ஆதரித்துப் பேசியதை ஒட்டி, ஆளுநர் அவர்களும் அதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். அந்த 20 அம்சத் திட்டத்தைப் பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது ஆளும் கட்சியாக இருக்கும்போது மட்டும் ஆதரிக்க முன் வரவில்லை, ஆட்சியில் இல்லாதபோதும் அந்த 20 அம்சத் திட்டத்தை நாங்கள் ஆதரித்து இருக்கிறோம். இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத காரணத்தால் மறந்து விட்டார்கள் இப்போது மீண்டும் மத்தியில் ஆட்சிக்கு இந்திரா காங்கிரஸ் கட்சி வந்து இருப்பதால் ஆதரிக்கிறோம் என்று ஒரு வாதத்தை நான் பார்த்தேன். அப்படிப்பட்ட வாதத்திற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த 20 அம்சத் திட்டத்தைப் பற்றி பலர் பேசியிருக்கிறார்கள் இந்த 20 அம்சத் திட்டங்கள் என்றால் என்ன என்று பலருக்கு புரியாமல் இருக்கிறது. இருந்தாலும், இந்த மாமன்றத்தில் இருப்பவர்கள் 20 அம்சத் திட்டத்தை நன்றாக அறிந்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில் பார்க்கிறபோது 20 அம்சத் திட்டத்தைப் பற்றி நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விலைவாசி கட்டுப்பாடு முதல் கொள்கை. இந்த விலைவாசிக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் பல நல்ல கொள்கைகளை வகுத்து மாநில அரசுக்கு இருக்கிற வலுவில், மாநில அரசுக்கு இருக்கிற சட்ட வரைவில், அந்த அடிப்படையில் எந்த அளவிற்கு விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். கிராமத்தில் உள்ள மக்களுக்கு வேண்டிய பொருள்களைத் தரவேண்டும், என்கிற அடிப்படையில் நியாய விலைக் கடைகளை கிராமங்களில் திறந்தாகவேண்டும் என்கிற வகையில் ஏறத்தாழ 16000 கூட்டுறவு நாணய சங்கங்களை



கிராமங்களில் ஏற்படுத்தி அந்தச் சங்கங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பணியாற்றுவது என்கிற முறையில் இருப்பதை நடந்து முடிந்த தேர்தலில் நான் கிராமம் கிராமமாக சென்று பார்த்தபோது பல இடங்களில் இருந்ததைப் பார்த்தேன். அங்கே எல்லாம் உணவுத் தட்டுப்பாடு இல்லாமல், அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் ஒழுங்காக வியாபாரம் நடைபெற்று வருவதைப் பார்த்தேன்.

உங்களுக்குச் சொல்ல வேண்டுமானால், தேர்தல் நேரத்திலே மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை; சர்க்கரை கிடைக்கவில்லை; தட்டுப்பாடு இருந்தது. மற்றவைகள் எப்படி இருந்தன என்பது சரியாகத் தெரியாது. காரணம் நான் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டு தொகுதியில் இருந்தேன். என்னுடைய தொகுதியிலே மண்ணெண்ணெய் தாராளமாகக் கிடைத்தது; சில இடங்களிலே அதை வாங்க கூட ஆள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையிலே இந்த ஆட்சியானது தொடர்ச்சியாக காரியங்களை ஆற்றி வருகிறது.

நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்பதுதான் இரண்டாவது அம்சமாகும். அதை முந்தைய அரசு நிர்ணயித்ததைவிட குறைவாக்கி, மேலும் இந்த அரசு குறைத்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அடுத்து, ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவது 20 அம்சத் திட்டத்திலே ஒரு அம்சமாகும். ஏழைகளுக்கு வீட்டுமனைகளை ஒழுங்காக வழங்கிவருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைகளை தந்து, பட்டாக்கள் தந்து வருகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது கொத்தடிமை ஒழிப்பு. அது செய்யப்பட்டிருக்கிறது. கடன் நிவாரணச் சட்டத்தின் மூலம் கிராமப்புறங்களிலே கடன் தொல்லையால் அவதிப்பட்ட மக்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய கடன் சுமை ஒழிக்கப்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு இதுவரை தமிழ் நாட்டிலே எந்த ஆட்சியிலும் செய்யாத காரியங்களை இந்த அரசு செய்வதற்கு முன் வந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல. அசல், வட்டி எல்லாவற்றையும் தள்ளுபடி செய்திருக்கிறது. 500 ரூபாய்க்கு மேல் 5,000 ரூபாய் வரையில் கடன் பெற்றவர்களுக்கு இப்படி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. விவசாயக் கடன். நிலம் மேம்பாட்டுக் கடன்

போன்ற கடன்கள் வாங்கியிருந்தால், வாங்கிய கடனுக்குச் சமமாக வட்டி கட்டியிருந்தால் மேலும்கட்ட வேண்டிய கடனைத் தீர்த்துவிட்டதாக உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு வட்டி சலுகை அளித்து, அபராத வட்டியை தள்ளுபடி செய்திருக்கிறது. வட்டி சுமை இல்லாமல் வாங்கிய கடனை கட்டினால் போதும். இதை அனைவரும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். 3 வருஷ கடனை 6 வருஷமாக நீட்டிக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 31 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். ஏறத்தாழ 40 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி வகையிலும் மற்ற வகையிலும் தள்ளுபடி செய்திருக்கிற இந்த அரசு, அதுவும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் இத்தகைய காரியங்களைச் செய்திருக்கிறது.

விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம். இது ஏற்கெனவே நடைமுறையில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

புதிதாக பாசன வசதி, நிலத்தடி நீரை பயன்படுத்துவது. கடந்த ஆட்சியிலே இந்த காரியங்களைச் செய்து வந்தார்கள். இந்த ஆட்சியிலும் இந்த காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏறத்தாழ 32,500 ஏக்கர் நிலத்திற்கு நிலத்தடி தண்ணீரைப் பயன்படுத்தி இப்போது பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. 42 கோடி ரூபாய் செலவில் பெரியாறு, வைகைத் திட்டங்களை நவீனப்படுத்துவதற்காக திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. 5000-க்கு மேற்பட்ட குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தீவிரமாக மின்சார உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் நேரத்தில் பல்வேறு திட்டங்களில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, 156 கோடி யூனிட் மின்சக்தி கூடுதல் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பது 9-வது திட்டம். கைத்தறி நெசவாளர்களின் நலன்களைக் கருதி, அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் அளித்து, குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்து, அவர்களுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக தீவிர கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்கி, இந்த ஆண்டு ஏறத்தாழ 12 கோடி ரூபாய்க்கு விற்பனையை எட்டியிருக்கிறது.





கூட்டுறவுத் துறையின்கீழ் வருகின்ற நூற்பாலைகளில் இருந்த 2 இலட்சம் கதிர்களை 3 இலட்சம் கதிர்களாக உயர்த்தியிருக்கிறது இந்த அரசு.

1977-ல் நூற்பாலைகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 114 இலட்சம். ஆனால் இந்த ஆண்டு 200 இலட்சம் ரூபாய் லாபம் பெற்றிருக்கின்றன.

மலிவு விலையில் துணி வழங்கும் திட்டம் தொடர்ந்து இருந்துவருகிறது. நகர்ப்புற சொத்துக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது.

வருமான வரி ஏய்ப்புத் தடுப்பு, பொருளாதாரக் குற்றங்களுக்கு தண்டனை போன்ற காரியங்கள் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாகும். கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டுமானால், அது மத்திய அரசினால்தான் செய்யப்பட வேண்டும். இறக்குமதி லைசன்ஸை

[முற்பகல் 11.30]

தவறாக பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை; இதுவும் மத்திய அரசினால் செய்யப்படவேண்டியவை. தொழிற்சாலைகளில் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு, இது மாநில அரசு தங்கள் மாநில அளவிலே செய்துகொண்டிருக்கும் திட்டமாகும். 16வதாக அகில இந்திய ரீதியிலே லாரிகளுக்கு பெர்மிட் வழங்குவது. அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இனிமேலும் வழங்கப்பட்டுகொண்டுவரும். வருமானம் ரூ 8,000க்கு மேல் உள்ளவர்களுக்கு வருமான வரி வசூல். இதுவும் மத்திய அரசினுடைய வேலை. கல்லூரி மாணவர்களின் விடுதிகளுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களை நியாய விலையில் வழங்குவதற்கு வகை செய்துள்ளது. நியாய விலையில் பாடப் புத்தககங்கள் வழங்கப்படுகின்றன. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க புதிய பயிற்சித் திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த பயிற்சி திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் கொண்டுவந்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நமது முன்னாள் ஜனதா கட்சி கல்வி துறை அமைச்சர் சந்தர் அவர்கள் கல்வித் துறையில் ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்தார்கள். 10+2 என்கிற அந்த முறையை கிராமங்களிலே பரப்பவேண்டும் என்ற முறை கொண்டு வந்தபோது, மற்ற மாநிலங்களைவிட, நமது தமிழகத்திலே இருக்கிற ஆட்சி கிராம மக்களுக்கு அப்படிப்பட்ட கல்லூரி படிப்பு வசதி கிடைக்க வேண்டும் என்கிற ஆசையிலே, கிராம மக்களுக்கு நன்மை செய்ய

வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே 10+2 என்ற அந்த கல்வி முறையினை ஏறக்குறைய ஆயிரம் பள்ளிகளில், ஆயிரம் கிராமங்களில் செய்திருக்கிறது. அவைகள் எல்லாம் சாதாரணமான காரியங்கள் அல்ல. அவை பூராவும் 20 அம்ச திட்டத்திற்குள்ளேதான் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, 20 அம்ச திட்டத்தை இடையிலே விட்டு விட்டு பிறகு தான் இப்பொழுது அதை தொடங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிற குற்றச்சாட்டு தவறானது என்று எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவில் ஒரு புரட்சியை தமிழக அரசுதான் பரப்பியது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு கிராமப் புறங்களில் உள்ள மக்கள் நலன்கள் பெற்றிருக்கிறார்கள். மத்திய மாநில உறவுகளைப் பொறுத்த வரையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். "திராவிட நாடு பிரிவினை கோரிக்கையைத்தான் விட்டு விட்டேனே தவிர அதன் காரண காரியங்களை நான் விட்டு விடவில்லை" என்று உறுதியாக சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களிலே சுய ஆட்சி மத்தியிலே கூட்டாட்சி வேண்டும் என்று இன்றைக்கு பல மாநிலங்களில் கோரிக்கைகள் எழுகின்றன என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.

பல்வேறு காரியங்களை திட்ட குழுவினிடத்திலே அறிஞர் அண்ணா ஆட்சியில் இருந்தபோது இருந்த அரசாங்கமும் சொல்லியிருக்கிறது. முந்தைய ஆட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும் திட்ட குழுவினிடத்திலே சந்தித்து பேசியிருக்கிறார்கள். இன்றைய அரசாங்கமும் திட்ட குழுவினிடத்திலே சந்தித்து பேசியிருக்கிறார்கள். ஆகவே மூல காரணங்களை திட்ட குழுவினிடத்திலே பேசி, தமிழகத்திற்கு அதிகமான சலுகைகளை பெற வேண்டும். அந்த சலுகைகளின் மூலமாக தமிழக மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும். அந்த வேலை வாய்ப்பின் மூலமாகத்தான் தமிழகத்தின் பொருளாதாரத்தை பெருக்க வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் மிக செம்மையாக காரியங்களை அரசு நிரைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் நிதி அமைசசர் ஆக இருக்கிறார். அதையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொளளவேண்டும், என்பது என்னுடைய ஆசை. சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த சுமூகமான சூழ்நிலையில் இந்த ஆட்சியின் மூலமாக தமிழகத்திற்கு வரவேண்டிய காரியங்கள் வரவேண்டும் என்பது என்னுடைய அவாவாகும். என்னை தமிழகத்தின் சிறப்பு பிரதிநிதியாக நியமித்திருந்தார்கள். நான் இங்கே உள்ளே வரும்போதுகூட எதிர்க்கட்சித்



நண்பர்கள் ஏதோ அதைப் பற்றி கேட்டார்கள். அந்தப் பதவியிலே இருந்தால் மட்டும்தான் எனக்கு டெல்லியிலே இருப்பவர்களைத் தெரியும் என்று யாரும் தவறாக நினைத்து விடக் கூடாது. என்னை இந்தப் பதவியில் நியமித்த பிறகு 2,000 ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள். கார் வீடு எல்லாம்தான் கொடுத்தார்கள். ஆனால் நான் எனக்கு பங்களா வேண்டாம், நான் ஒண்டிக் கட்டை என்று சொல்லி தனியாக அறை எடுத்துக் கொண்டுதான் டெல்லியில் தங்கியிருந்தேன். அதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அங்கே வந்தபோதுகூட பார்த்திருக்கிறார்கள். நான் ஏதோ பதவி ஆசையில் இங்கு வந்தது போல பேசினார்கள். பதவி ஆசையில் இந்த இயக்கத்திற்கு வந்தவன் அல்ல என்பதை முதலில் இந்த சபைக்கு தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். நான் ஆரம்பத்தில் இருந்தே இந்த இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். இந்த இயக்கத்தில் நடைபெறுகின்ற காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். 1914ம் ஆண்டு முதல் என்னுடைய தந்தையார் பெரியாருக்கு நண்பர். பெரியார்தான் என்னை அரசியலுக்கு அழைத்துக் கொண்டு வந்தார், அரசியலுக்கு அப்படி வந்தவனே தவிர, ஆதாயம் தேடி வந்தவன் அல்ல நான்.

சமுதாயச் சீர்திருத்தம், ஏதோ ஜாதியை ஒழிக்க வேண்டும் என்ற அந்தக் கருத்தின் அடிப்படையில், பிற்பட்டோரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நடைபோட்டவர்களே தவிர வேறு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ கால கட்டங்களை எடுத்துச் சொல்லலாம். 1957 ஆம் ஆண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் நிற்க வேண்டுமா வேண்டாமா என்ற எண்ணத்திற்கு ஒரு வடிவம் தந்தார்கள். அப்படிப்பட்ட வடிவம் தந்த நிலையில் அன்று என்னையும் மறைந்த திரு. சம்பத் அவர்களையும் அழைத்துக்கொண்டு பிரிட்டிஷ் நூலகத்திற்குப் போய், அமெரிக்கா நூலகத்திற்குப்போய் அங்கிருந்த நூல்களை எல்லாம் திரட்டி எடுத்துக்கொண்டு வந்து தேர்தலில் பங்கு கொண்டால் அதில் எப்படி ஜனநாயக ரீதியில் பங்கு கொள்வது, எப்படி மக்களுக்கு கருத்துகளை எடுத்துச் சொல்வது, எந்த வகையில் கருத்துகளை எடுத்துச் சொன்னால் மக்களை ஈர்க்க முடியும் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, தமிழகத்தில்தான் இந்தியாவிலேயே வேறு எந்த முறையிலும் இல்லாத வகையில் போஸ்டர்களை அச்சடிக்க ஆரம்பித்தார்கள். அதற்கான வார்த்தைகளை எழுதினார்கள், அச்சடித்தார்கள். அப்படி அச்சடித்துத்தான் அந்த இயக்கத்தை வளர்த்தார்கள். 15 பேர்களாக இருந்து 1957ல் இருந்து 1962 வரை எப்படி

இந்த மன்றத்தில் நடந்து கொண்டார்கள் என்பதை நான் இங்கே மேலே உட்கார்ந்துகொண்டு பலமுறை பார்த்திருக்கிறேன். அண்ணா அவர்களுக்கு நண்பராக இருந்திருக்கிறேன். காரோட்டியாக வந்திருக்கிறேன். அவர்களுக்கு தோழனாக இருந்திருக்கிறேன். எவ்வளவோ வகையில் தோழனாக இருந்திருக்கிறேன். அந்த ஐந்தாண்டுக் காலத்தில் பார்த்திருக்கிறேன். எதிர்கட்சிக்காரர்கள் எல்லாம் எப்படி நடைபோடவேண்டும் என்பதற்கு அவர்கள் மிகப் பெரிய உதாரணமாக இந்த மாமன்றத்தில் நடந்துகொண்ட காட்சியை, பேச்சுக்களை எண்ணிப் பார்க்கிறேன். 1957ம் ஆண்டுதான் பாமரர்களும் பாராளுகின்ற காலம் வந்தே திரும் என்று கவிஞர் இக்பால் சொன்ன வார்த்தைக் கிணங்க இந்த இயக்கத்தை அவர்கள் தேர்தலில் ஈடுபடுத்தினார்கள். அப்போது நாங்கள் தேர்தலில் நிற்போமா என்று தெரியாது. சட்டமன்ற உறுப்பினர்களாவோம் என்று தெரியாது. அமைச்சர்களாவோம், என்று தெரியாது. இப்படிப்பட்ட ஆசைகளை எல்லாம் வளர்த்துக் கொண்டு நாங்கள் அந்த இயக்கத்தில் ஈடுபடவில்லை; சாதாரணமாக ஒரு காலை வைத்துத்தான் அந்த இயக்கம் நடந்துகொண்டிருந்தது. அதற்குப் பிறகு அந்த இயக்கம் 1967ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தது. அப்படி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் அண்ணா அவர்கள் உடல் நோய்ப் பட்டார்கள். பெரியாரானாலும் சரி, அறிஞர் அண்ணாவானாலும் சரி அவர்கள் கடைசிக் காலம்வரை அவர்களுக்கு தொண்டு செய்து கொண்டுதானிருந்தேன். இன்னும் அண்ணா அவர்களோடு அமெரிக்கா வரை போய் தொண்டு செய்கிற வாய்ப்பு எனக்குதான் கிடைத்தது. அதை எல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். அப்படி எண்ணிப் பார்க்கிற காலத்தில் என்னென்ன கருத்துக்களை எல்லாம் அவர்கள் சொன்னார்கள் தமிழ் நாட்டில் எப்படி எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். இரவெல்லாம் படித்தார்கள், இரவெல்லாம் எழுதினார்கள். அவர்கள் இரவெல்லாம் எழுதி விட்டு பகலில் தூங்குகிற காட்சி நினைவிற்கு வருகிறது. அப்படித்தான் அண்ணா அவர்கள் இயக்கத்தை வளர்த்தார்கள். எழுதி எழுதி வளர்த்தார்கள். பேசிப் பேசி வளர்த்தார்கள். நாடு பூராவும் சுற்றிச்சுற்றி வளர்த்தார்கள். அப்படி வளர்த்த இந்த இயக்கம் 1967ல் ஆட்சிக்கு வந்தது. 1976ல் ஒரு கால கட்டம் வந்தது. 31ம் தேதி அப்போதிருந்த ஆட்சி கலைக்கப்பட்டது. ஆட்சி கலைக்கப் பட்ட நேரத்தில் நான் தான் டெல்லியில் இருந்தேன், அனுப்பப் பட்டு டெல்லியில் இருந்தேன். திரு. ஓம் மேத்தா அவர்களைச் சந்தித்து அன்று பேசியிருக்கிறேன். ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு எதிர்கட்சி நண்பர்கள் பலர் சிறைச்சாலைகளில் தள்ளப் பட்டார்கள், நாங்கள் ஒரு நாலைந்து பேர்கள்தான் அப்போது





வெளியே இருந்தோம். எமர்ஜென்ஸி காலம் அது. அந்த நெருக்கடி காலத்தில் நாங்கள் எல்லாம் ஓடிப்போய் விட்டோம் என்று இந்த மன்றத்தில் சொன்னதாகக் கேள்விப்பட்டேன்.

சிறைச்சாலைகளில் இருந்ததால் உங்களுக்குத் தெரியாததைச் சொல்கிறேன். நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் ஓடிப்போகவில்லை. நெருக்கடி இருந்தபோதும் நான் கறுப்பு சிகப்பு துண்டைப் போட்டுக் கொண்டுதான் சைனாபஜாரில் தனியாக கார் ஓட்டிக்கொண்டு இருந்த ஒரே ஆள் நான்தான். இந்தத் துண்டை அன்றைக்கும் நான் விட்டுவிடவில்லை, இது அண்ணா போட்ட துண்டு. வேறு யாரோ போட்ட துண்டு என்று யாரும் தவறாக கருதி விடவேண்டாம். அப்போது மூன்று முறை நான் டெல்லிக்குப் போனேன், டெல்லிக்குப் போய் வாதாடினேன் கைதானவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று. இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்து வாதாடினேன். அதுமட்டுமல்ல. இங்கு எவ்வளவோ சம்பவங்கள் நடந்தன. கூட்டம் போடக் கூடாது என்று தடுத்தார்கள். இன்றைக்கு அவையெல்லாம் கொடுமை அல்ல என்ற விதத்தில் பேசினார்கள். அது வேறு விவகாரம். அன்று கூட்டங்கள் போட அனுமதி கொடுக்கவில்லை. ஆகவே தந்திரமாக ஒரு காரியத்தைச் செய்வோம். என். வி. என், நினைவு நாள் அன்றுதான் ஞாபகத்திற்கு வந்தது. அதை வைத்துக்கொண்டு காவல்துறையினரிடம் நான் போய் கேட்டேன். யோகலட்சுமி கல்யாண மண்டபத்தில் கூட்டம் நடத்த அனுமதி வாங்கி வந்தேன். அந்தக் கூட்டத்தில் நடந்த தவறுகளை சுட்டிக்காட்டிப் பேசினேன். அப்படி நான் சுட்டிக் காட்டி பேசியபோது ஒருவர் கூட சொன்னார்கள், நீ இப்படிப் பேசி ஜெயிலுக்குப் போய் விட்டால் வெளியே வேலை செய்ய யார் இருக்கிறார்கள் என்று கேட்டது என் நினைவிற்கு வருகிறது. மூன்று மண்டபங்களில் நடந்த கூட்டங்களில் பேசினேன். அன்று நான் கட்சியை விட்டு ஓடிப்போய்விடவில்லை.

முற்பகல் [11.40]

யாருமே ஓடிப் போய்விடவில்லை. சிறையிலே இருந்தவர்களின் குடும்பங்களை போய் பார்த்திருக்கிறேன். சந்தித்து ஆறுதல் கூறியிருக்கிறேன். அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் சிறையிலிந்து விடுதலையாக வேண்டும் என்று விரும்பினேன். இந்திரா காந்தியிடத்திலே போய் விவாதித்தேன். அவர்கள் என்னென்னவோ சொன்னார்கள். நீங்கள் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இந்திரா காந்தி அம்மையார் தேர்தல் வைக்க வேண்டும் என்று முடிவு எடுத்தபோது, டெல்லிக்குப்

[திரு. க. இராசாராம்] [1980 பிப்ரவரி 7

போய் டெல்லியிலே இருக்கிற தலைவர்களிடமெல்லாம் கலந்து பேசுகிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடந்தது. ஜனதா கட்சி வந்தது. ஜனதா கட்சி வந்தபிறகும் டெல்லிக்குப் போனேன். அவர்கள் சில கொள்கைகளை சொன்னார்கள். அந்த கொள்கைகளை எடுத்துச் சொன்னேன். அது ஒன்றுதான் நான் செய்த மாபெரும் தவறு. அவ்வாறு எடுத்துச் சொன்னதற்காக நான் வெளியேற்றப் பட்டேன். அதற்கு பிறகுதான் அண்ணாவோடு அரசியல் போய்விட்டது என்று வெளியிலே வந்தேன். அப்படித்தான் நான் வெளியிலே வந்தேனே தவிர பதவி ஆசைக்காகவோ, வேறு எந்தக் காரணங்களுக்காகவோ அல்ல. சிறைச்சாலைக்கு பயந்தும் வெளிவரவில்லை, சிறைச்சாலைக்கு பயந்து தலைமறைவாகவில்லை. எமர்ஜென்சி நேரத்திலே பேனாவை எடுத்து எழுதியவன் நான் ஒருவன் தான். பேனாவை எடுப்பதற்கே பலர் பயந்துக்கொண்டிருந்த நேரம் அது. அந்த நேரத்தில் பேனாவை எடுத்து எழுதியவன் நான் ஒருவன்தான். அவர்கள் சிறையிலிருந்து வெளியே வரவேண்டும் என்றுதான் எழுதினேன். அவர்கள் இப்போது என்னையே எதிர்த்து போராடுகிறார்கள். யாருக்காக அந்த நேரங்களில் உழைத்தேனோ அவர்கள் என்மீது வழக்குப்போட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்த ஆட்சியிலே என்ன குறை காண்கிறீர்கள்! அதை நான் அறிந்தாக வேண்டும். இன்று தமிழகத்தினுடைய வரலாற்றில் பெரியாருடைய நூற்றாண்டு விழாவை ஒரு ஆண்டு பூராவும் கொண்டாடி இருக்கிறது தமிழக அரசு. பெரியாருக்கு ஒரு மாவட்டம் வைக்க வேண்டும் என்று ஆசை யாருக்கு உதித்தது! இந்த புரட்சித் தலைவருக்குத்தானே தோன்றியது. பிரகாசத்துக்கு ஒரு மாவட்டம் வைத்தபோது, அந்த நேரத்தில் ஒரு மாவட்டத்தை பெரியார் பெயரிலும் வைத்திருக்க முடியாதா? ஏன் முடியவில்லை? இவருக்கு தானே அந்த ஆசை வந்தது? அதை வரவேற்க வேண்டாமா? அண்ணாவின் பெயரால் நடைபெறுகிற காரியங்களை பாராட்ட வேண்டாமா? தேசிய பிரச்னை என்று அடிக்கடி சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தேசிய பிரச்னைக்கு தலைமை தாங்கிய வ. உ. சிக்கு பிறந்தநாளைக் கொண்டாடினார்கள். அது மறக்கக்கூடிய காரியமா? அவரை அனைவருமே மறந்துவிட்டார்கள். இந்த ஆட்சிதான் மறக்காமல் இருக்கிறது. பெரியாருக்கு மட்டும்தான் பிறந்தநாளைக் கொண்டாடினார்களா? கலைவாணரை விட்டு விட்டார்களா? தேசிய தலைவர் காமராஜை விட்டுவிட்டார்களா? புரட்சி கவிஞர் பாரதிதாசனை மறந்து விட்டார்களா? அப்படிப்பட்ட நல்ல காரியங்களை புரிந்திருக்கிறது என்றால் அவைகளை பாராட்ட வேண்டாமா? இவைகள் எல்லாம் பாராட்டக்கூடிய காரியங்கள்



1980 பிப்ரவரி 7] [திரு. க. இராசாராம்]

அல்லவா? இவைகளை எண்ணிப்பார்க்க வேண்டாமா? இன்னும் கேட்டால் நம்முடைய தமிழக அரசு யாருக்கு கெடுதல் செய்திருக்கிறது? யாருக்குமே இல்லை. பிற்பட்டோர் சலுகைகளுக்கு 9,000 தரப்படுவதை 50 சதவீதம் என்று உயர்த்தியிருக்கிறது. 50 சதவீதம் என்றால் சாதாரணமான காரியமா? எவ்வளவு பேர்களுடைய எதிர்ப்பு ஏற்பட்டிருக்கும் தெரியுமா? நல்ல காரியங்கள் செய்தால் பாராட்டக் கூடாதா? இதிலே எந்தக் கட்சி கலையும் கலையும் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாநிலங்களிலே இருக்கிற ஆட்சிகள் கலையும் கலையும் என்று பேசியபோது, இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் பேசினார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியினிடம் நம்முடைய உறவு முறிந்து விட்டதினால் தான் இந்த நிலை வந்தது என்று. அரசியலிலே நேரத்திற்கு ஏற்ப உறவுகள் மாறும். முன்பு காங்கிரஸ் கட்சியினிடம் அ.தி.மு.க. கூட்டு சேர்ந்திருந்தது. போன முறை தி.மு.க கூட்டு சேர்ந்திருந்தது. அடுத்த முறை யார் யாரை ஆதரிக்கிறார்களோ. அது யாருக்குத் தெரியும். ஆனால் இவைகள் எல்லாம் முடிந்து போய்விடும் என்று கருத முடியாது. இன்று சூழ்நிலையை கவனியுங்கள், ஆப்கானிஸ்தானில் ரஷ்யர்கள் புகுந்திருக்கிறார்கள். பாகிஸ்தானில் அமெரிக்கா புகுந்திருக்கிறது. இப்படி எந்த அளவுக்கு பாதுகாப்பு இருக்கிறது?

இந்தியாவிலே பெரிய போர் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. வெளிநாட்டிலே தங்கள் படைகளை வைத்துக் கொண்டு போர் ஏற்படக்கூடிய அபாய சூழ்நிலை இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் அல்லவா? வெளிநாட்டைச் சுற்றி சுற்றி போர் ஏற்படக்கூடிய மிகப் பெரிய அபாயமான சூழ்நிலையில், இந்த ஆட்சியை கலையுங்கள், உடனே தேர்தலை கொண்டு வாருங்கள் என்று சொல்வது சரியா? வாரத்திற்கு ஒரு தேர்தலா? தேர்தலுக்கு 55 கோடி ரூபாய் செலவாயிற்று. யாருக்கு புண்ணியம்? கிராமங்களில் போக்குவரத்து சாலைகள் சரிவர இல்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம், சுடுகாட்டிற்கு பாதை இல்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கிராமங்களுக்கு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு இல்லை என்று வருத்தப்படுகிறோம். மின்சார விளக்குகள் போதவில்லை என்று எண்ணுகிறோம். இவைகளை எல்லாம் விட்டு விட்டு, இன்றைக்கு ஆட்சியைக் கலையுங்கள், கலையுங்கள் என்று சொல்வதில் என்ன ஆசை? ஆட்சிக்கு அங்கே இருப்பவர்கள் இங்கே வருவதும், இங்கே இருப்பவர்கள் அங்கே போவதில் என்ன லாபம்? இதை யாரும் அறிந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, ஆட்சியைக் கலைப்பதில் யாருக்கு என்ன புண்ணியம்? மக்கள் ஓட்டுப் போட்டார்கள். ஐந்தாண்டு காலம் இருக்கப்போகிறார்கள், நிலையாக ஒரு ஆட்சி இருக்கப் போகிறது, நல்ல காரியங்களை தமிழகத்திற்கு செய்வார்கள்

என்று நம்பித்தான் ஓட்டுப் போட்டார்கள். டெல்லியிலே $2\frac{1}{2}$ ஆண்டு காலத்தில் அந்த ஆட்சி போய்விட்டது. உடனே அந்த வியாதி தமிழ்நாட்டில் கன்னியாகுமரி வரை வர வேண்டுமா? எல்லோருக்கும் அந்த வியாதி பரவவேண்டுமா?

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலே அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது சொன்னார்கள், நான் 6 மாத காலத்திற்கு எதிர்க்க மாட்டேன். ஐந்தாண்டு காலம் இருக்க வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். இடையில் தேர்தல் வர விரும்பமாட்டேன் என்று சொல்லவில்லையா? அப்பேர்ப்பட்டவரை என்னைப் போன்றவர்கள் சந்தித்த நேரத்தில், ஒழுங்காக ஆளுங்கள் என்று சொல்லி, தமிழகத்திற்கு ஒரு அரசியல் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டினார்கள். ராஜாஜி அவர்கள் நமக்கு வழிகாட்டவில்லையா? அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டவில்லையா? பெரியார் அவர்கள் நல்ல பல கருத்துக்களை நமக்கு எடுத்துச் சொல்லி வழிகாட்டவில்லையா? அதையெல்லாம் மறந்துவிடலாமா?

இங்கே நாம் அங்கத்தினர்களாகக் கூடுகிறோம். இந்த அவையிலே கூடுகிறோம் என்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசவேண்டுமென்றால் என்ன புண்ணியம்? அதைத்தான் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

'இந்த ஆட்சி கலைக்கப்படும், கலைக்கப்படும்' என்று தினசரி பத்திரிகைகள் போடுகின்றன. இந்திரா காந்தி அம்மையார் பத்திரிகை சுதந்திரம் கொடுத்ததற்கான ஆபத்தை இப்போதுதான் என்னால் பார்க்க முடிகிறது. முன்னாலே, பத்திரிகை சுதந்திரம் இல்லாதபோது, எப்படி ஒழுங்காக பத்திரிகைகள் வந்துகொண்டிருந்தன என்பதையும் பார்த்தோம். இந்தப் பக்கத்திலே இருந்து அந்தப் பக்கம் 20 பேர்கள் போவதும் அந்தப் பக்கத்திலே இருந்து இந்தப் பக்கம் 20 பேர்கள் வருவதும் என்றால் அதிலே என்ன புண்ணியம்? அதனால் தேர்தல் வைக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படி தேர்தல் தான் வைக்கட்டுமே? இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் ஓடுகின்ற பாம்பை மிதிக்கக் கூடிய வயது, தேர்தல் வந்தால், அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாதா? அதிலே என்ன கஷ்டம்? மற்றவர்களாவது வயதானவர்கள்; கொஞ்சம் கஷ்டம். நானும் ஜெம்ஸ் அவர்களும் தினம் 10 மைல்கள் நடப்போம். அதிலே என்ன கஷ்டம்? தேர்தலுக்காகவா பயப்படப் போகிறோம்? தேர்தலில் பணம் வரும்; உப தேர்தலில்



பணம் வராது; ஆனால், பொதுத் தேர்தல் வந்தால், இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் தோளில் துண்டைப் போட்டுக்கொண்டு, எந்த குதிரை வேகமாக ஓடுகின்றதோ அந்தக் குதிரை ஜெயிக்கும்.

மக்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, மக்களுக்கு செய்யவேண்டிய காரியங்களை எடுத்துச் சொல்லுங்கள், இந்த மன்றத்தின் மூலம். நாட்டு மக்கள் அதைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு நிரம்ப, நல்ல காரியங்கள் செய்யவேண்டுமென்ற காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். கவர்னர் அவர்கள் உரையிலே செய்யவேண்டிய காரியங்கள் நிரம்ப எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் மனதிலே தாங்கிக்கொண்டு, நல்ல காரியங்கள் செய்ய முன்வரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான எண்ணம்.

இந்த இயக்கம் வளர்ந்த இயக்கம். தமிழகத்தில் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்த இயக்கம். இந்த இயக்கம் காலப்போக்கில் மேலோங்கி வளர்ந்து நிற்கின்றது. பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்களைத் தொடர்ந்து நடைபெறுகின்ற இயக்கமாக இருக்கவேண்டும். அந்த வகையிலே உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவசரமாக ஆத்திரத்தோடு காரியங்களைச் செய்யாதீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதையிலே நீங்கள் எல்லோரும் நடைபோட வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படிப்பட்ட முறையிலே தான் நீங்கள் நடைபோட வேண்டும், அப்போதுதான் தமிழகத்திற்கு நல்ல பலன்பெற முடியும். தமிழகத்திற்கு டெல்லியில் நல்ல அமைச்சர்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையாரிடம் இன்னும் நாம் பெறவேண்டிய சலுகைகளைப் பெறமுடியும். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை சென்ற ஆட்சி காலத்திலே பெற முடிந்தது, இன்னும் அப்படிப்பட்ட சலுகைகளை நாம் கேட்டுப் பெறமுடியும். அப்படிப்பட்ட முயற்சிகள் செய்தால் இன்னும் நல்ல காரியங்கள் செய்யலாம். மொரார்ஜி தேசாய் நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஆகவே, வடக்கோடு பிணைப்பு ஏற்படுத்திக்கொண்டு, பல்வேறு நல்ல காரியங்களை, பொதுப்படையான காரியங்களை இந்த ஆட்சியிலே செய்துகொள்ள வேண்டும். ஏழைஎளிய மக்கள், விவசாயிகள், குடிசைவாழ் மக்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு செய்யவேண்டிய நல்ல காரியங்களில் நாம் அக்கறை செலுத்தி, அதன்மூலம் தமிழகத்தை ஒரு நல்ல தமிழகமாக ஆக்க முடியும், அதைச் செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை துணைச் சபாநாயகர் மூலமாக வைத்து, அமைகிறேன். வணக்கம்.

[1980 பிப்ரவரி 7

[முற்பகல் 11-50]

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஜனதா கட்சி பெரும் தோல்வியை அடைந்தது. மக்கள் ஜனதா கட்சிக்கு எதிராக வாக்களித்தார்கள் என்பதை நாங்கள் உண்மையிலே ஏற்றுக் கொள்கிறோம். மக்கள் தீர்ப்பை நாங்கள் மதிக்கிறோம். ஆனால் ஜனதா கட்சி இந்த நாட்டை ஆண்ட காலத்தில் எந்த அளவுக்கு இந்த நாட்டுக்காக பல அரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஒருவேளை மக்கள் மறந்திருக்கலாமோ என்று நான் எண்ணுகிறேன். The memory of man is very short என்று சொல்வார்கள். பல்வேறு காரணங்கள் குறுக்கிட்ட காரணத்தால் ஜனதா கட்சி இந்த நாட்டுக்குச் செய்த நன்மைகளை மறந்து வாக்களித்ததன் காரணமாக இன்றைய தினம் ஜனதா கட்சி தோல்வியடைந்தது. இரண்டாண்டு காலத்திற்கு முன்னதாக இந்த நாட்டில் இருந்த நிலையைப் பற்றி எல்லாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜனநாயகம் இந்த நாட்டில் இனிமேல் தலைதூக்க வாய்ப்பு வருமா என்ற ஐயப்பாடு இருந்த சூழ்நிலையில் ஜனதா கட்சி அதிகாரத்தைப் பெற்றதன் காரணமாக இன்றையதினம் ஜனநாயகம் இந்த நாட்டில் இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஜனதா ஆட்சி நடந்த காலத்தில் இந்த நாட்டில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி எந்த அளவுக்கு குறைக்கப்பட்டது, பொதுவாக ஏழை எளியவர்கள் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு பல காரியங்களைச் செய்தார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பட்டியல் போட்டுக்காட்டத் தேவையில்லை.

எனக்கு முன்னால் உரையாற்றிய அருமை முன்னாள் அமைச்சர், இந்நாள் அங்கத்தினர் ராஜாராம் அவர்கள் கூறினார்கள். பத்திரிகை சுதந்திரத்தைக் கொடுத்ததன் காரணமாகத்தான் தாக்குதல்களைத் தந்து கொண்டேயிருக்கிறார்களோ என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு எழுதினாலும் பரவாயில்லை, பத்திரிகை சுதந்திரம் வேண்டுமென்று வாங்கிட்டு அந்த பத்திரிகை சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தது ஜனதா அரசு என்பதை இந்த நாடு நன்றாக அறிந்திருக்கிறது. இந்த நாட்டில் எந்த அளவுக்கு முன்பு பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது என்பதை நிச்சயமாக நாட்டு மக்கள் அறிவார்கள். நீதிமன்றங்கள்கூட முன்னாலே சுதந்திரம் இன்றி இயங்கின, ஜனதா ஆட்சி



1980 பிப்ரவரி 7] [திரு ஜே. ஜேம்ஸ்]

வந்த பிறகுதான் நீதிமன்றங்களும் சுதந்திரமாக செயல்பட வாய்ப்புக்களை ஏற்படுத்திற்று. இந்த நாட்டில் இத்தனை நன்மைகளைச் செய்த பிறகும் கூட மக்கள் ஜனதா கட்சிக்கு எதிராக வாக்களித்தார்கள் என்று சொன்னால் அந்தச் சூழ்நிலையை இந்த மாமன்றம் நன்றாக உணரும்.

தலைமையில் ஏற்பட்ட சில சிக்கல்களின் காரணமாக, ஜனதா கட்சியைப் பிளக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்த சில சதிகளினால் சிலருக்கு ஏற்பட்ட அதிகார மோகத்தினால் கட்சி பிளவுபட்டது என்பதை நன்றாக உணருகிறோம். ஆகவேதான் இந்த நாட்டில் நிலையான அரசு ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் காங்கிரஸ் கட்சியை இந்த நாட்டு மக்கள் ஆதரித்தார்கள். நிலையான அரசை ஜனதா அளிக்க முடியாது, காங்கிரஸ் கட்சிதான் அளிக்க முடியும் என்று அவர்கள் சொன்னதை மக்கள் நம்பி வாக்களித்தார்கள். ஆனால் வாக்கை பெற்று 351 அங்கத்தினர்களை பாராளுமன்றத்தில் வைத்திருக்கும் அரசானது நிலையான ஆட்சியை இந்த நாட்டுக்குக் கொடுக்க முடியுமா என்று பார்க்கும்போது கடந்த கால சரித்திரத்தைப் பார்த்தால் நிச்சயமாக சந்தேகம் ஏற்படுகிறது. நிலையான அரசு வேண்டுமென்று மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். நிலையான அரசை அமைத்திருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் அரசானது இன்றைய தினம் மாநிலத்தில் மட்டும் நிலையான அரசு இருக்க வேண்டாமென்று எண்ணும் எண்ணம் ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநில அரசைப் பொறுத்தமட்டில், இந்த மாநில அரசு உடனடியாக ராஜிநாமா செய்யவேண்டுமென்று கோரிக்கையை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இந்த மாநில அரசு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 ஆண்டுக் காலத்திற்கு அமைக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 126 உறுப்பினர்கள் கொண்ட ஆளுங்கட்சி இருக்கிறது. அதற்கு உறுதுணையாக மேலும் 4, 5 கட்சிகள் இருக்கின்றன. ஆக மொத்தம் 156 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றிருக்கிற அரசு உடனடியாக ராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னது, இந்த தமிழ் நாட்டிலே நிலையான அரசை அவர்கள் விரும்பவில்லை என்றுதானே பொருள் ஆகிறது. மத்தியில் நிலையான அரசை விரும்பி ஒருவேளை மக்கள் வாக்களித்திருந்தாலும்கூட அவர்களுடைய இன்றைய நிலையைப் பார்க்கிறபோது நிலையான அரசில் நம்பிக்கையில்லை, மீண்டும் சர்வாதிகாரத்தை கொண்டு வந்துவிடுவார்கள் என்றுதான் தெரிகிறது. இந்த அரசு உடனடியாக ராஜிநாமா செய்யவேண்டும், இல்லாவிட்டால் சட்ட

மன்றத்தைக் கலைத்துவிடுவோம் என்று சொல்கிறார்கள். இதிலே வேடிக்கைக் கூத்து என்னவென்றால் சட்டமன்றத்தைக் கலைக்கவேண்டுமென்றால் அரசியல் சட்டம் இருக்கிறது. அதற்கேற்றவாறு சட்டம் அமைதி கெட்டிருக்கிறதா ? கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ் இருக்கிறதா? திரு. லத்தீப் பேசுகிறபோது சொன்னாாகள். கான்ஸ்டிடியூஷனல் கிரைசிஸ் ஏற்பட்டிருக்கிறது, சட்டமன்றத்தைக் கலைக்கவேண்டும், இந்த அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று சொன்னார்கள், ஆனால், உண்மையிலேயே அந்தமாதிரியாக ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலே 1967 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்தது. அப்போது 6 மாத காலத்திற்கு இந்த அரசைப் பற்றி நான் விமர்சனம் செய்யாமல் இருக்கப்போகிறேன். அவர்கள் 5 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே 5 ஆண்டு காலத்திற்கு ஆள வேண்டுமென்று விரும்பினார்கள். 1972 ஆம் ஆண்டு தி. மு. க. விலே ஏற்பட்ட பிளவின் காரணமாக அப்போது எதிர்க்கட்சியாக இருந்தவர்கள் ஆளுங்கட்சி ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அன்றைய தினம் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தி. மு. க. 5 ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கட்சியில், பிளவு ஏற்பட்டாலும்கூட அவர்கள் அந்தக் காலம் வரையிலும் நிம்மதியாக ஆளவேண்டுமென்ற குரலை எழுப்பினார்கள் என்பதை இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் அறிவார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்றோ அல்லது செம்மையாக நேர்மையாக நடந்து கொண்டிருக்கின்ற அரசை கவிழ்க்கவேண்டுமென்றோ மத்திய அரசு விரும்பினால் அல்லது மத்திய அரசின் பிரதிநிதிகள் விரும்பினால் அது நியாயமில்லை, நீதியில்லை, கான்ஸ்டிடியூஷனுக்கு உகந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ராஜ்ய சபாவில் நிறைவேற்றப்பட்ட குடியரசுத் தலைவர் அறிக்கைக்குக் கொடுக்கப்பட்ட நன்றியுரைக்கும் தீர்மானத்திற்கான திருத்தம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு காங்கிரஸ் அல்லாத மாநில அரசைக் கவிழ்க்கக் கூடாது, கட்சி மாறலுக்கு ஊக்கம் கொடுக்கக் கூடாது என்று கொடுக்கப்பட்ட திருத்தம் அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தீர்மானம் இந்த அவையில் இல்லை என்றாலும்





அந்தத் தீர்மானத்தின் ஸ்பிரிட்டை, கருத்தை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம், நான் மத்திய அரசுக்குக் கூற விரும்புகிறேன். ஒருவேளை சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டால், ஆட்சியைக் கலைத்துவிட்டால், எம்.ஜி.ஆர். அரசை டிஸ்மிஸ் செய்தால் இந்த மாநிலத்தை யார் ஆள்வது என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்க விரும்புகிறேன். இன்றைய அரசியல் சூழ்நிலையில் உங்களுக்கு இருக்கிற சக்தி 46 உறுப்பினர்கள். தேர்தலுக்கு முன்பு இருந்த நிலைமை இப்போது உங்களுக்கு இருக்கிறதா என்பதைப்பற்றி பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. ஏற்பட்ட உடன்பாடு தேர்தலோடு

[நண்பகல் 12-00]

முடிவடைந்துவிட்டது. காங்கிரசிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குமாக இப்பொழுது நிச்சயமாகக் கூட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்திரா காங்கிரசுக்கும் கூட்டு இருப்பதாகத் தெரியவில்லை என்று ஒரு உண்மைக்கு மாறான தகவலை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொல்கிறார்கள், அந்த உறவு இருக்கிறது; நிச்சயமாக இருக்கிறது ; அது நீடிக்கும். ஆனால், ஜேம்ஸ் அவர்களைத்தான் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து ஆளுங்கட்சியிலிருக்கின்றவர்கள் யாரையாவது பார்த்து உங்களுடைய கூட்டு இருக்கிறதா என்கின்ற அந்தச் சந்தேகத்தை தயவு செய்து போக்கிக் கொள்ளுங்கள். நான் பதில் சொன்னதைப்போல அங்கேயிருந்து யாராவது பதில் சொல்கிறார்களா என்று நான் பார்க்கிறேன். அந்தக் கேள்வியை ஆளுங்கட்சியைப் பார்த்து ஜேம்ஸ் கேட்கட்டும். அந்தக் கூட்டு இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி ஆளுங்கட்சியிலிருந்து சொல்லட்டும் ; அதை நாங்கள் இங்கே காதாரக் கேட்கிறோம். திரு. ஜேம்ஸ் அவர்களே, தாங்கள் அந்த வினாவை எழுப்புவீர்களா?

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நன்றி. நான் இங்கே எழுப்பியுள்ள பிரச்னை, என்னைப் பொறுத்த மட்டில் ஜனதாக் கட்சிக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குமாகத் தேர்தலுக்கு முன்பாக இருந்த கூட்டு மீண்டும் தொடர்ந்து இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால்....

திரு. மு. கருணாநிதி : நீங்கள் மாத்திரம் அல்ல, உங்கள் தலைவர் பா. ரா. அவர்கள் கூட அறிவித்திருக்கிறார்கள். உடன்பாடு தொடர்கிறது என்று; ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களிடமிருந்து அப்படிப்பட்ட எந்த சமிக்ஞையும் இதுவரையிலே இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தேர்தலுக்கு முன்னதாகக் கூட, தேர்தல் உடன்பாட்டு வேளையில்கூட, நாங்கள் கூறியிருக்கின்றோம். எங்களுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்தான் கூட்டு; ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானது வேறு எந்தெந்தக் கட்சிகளோடு கூட்டு சேர்ந்துகொள்கிறார்கள் என்பதைப்பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை என்று அன்றையதினமே நாங்கள் கூறியிருக்கிறோம. ஆனால் இன்றையதினம் நான் கூறுவதற்குக் காரணம், இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கே வந்த மத்திய அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள் : "The Congress must stand on its own legs" அது மட்டுமல்லாமல் "The Congress should not depend upon DMK hereafter" என்று தெளிவாக அன்றையதினம் சொன்னதை நண்பர் சங்கரய்யா அவர்கள் இங்கு விரிவாக எடுத்துக் கூறியதன் காரணமாக அதனை நான் மீண்டும் வலியுறுத்த. . . .

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, காங்கிரஸ் மாத்திரம் அல்ல, காங்கிரஸ் எப்படித் தன்னுடைய சொந்தக் காலில் நிற்க விரும்புகிறதோ அதைப்போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் சொந்தக் காலில் நிற்க விரும்புகிறது. நானும் இளையபெருமாளும் ஆளுக்கு ஒரு காலை வெட்டிவிட்டு, இரண்டு காலில் நிற்போம் என்று இரண்டு காலைக் காட்டிக் கூட நிற்க முடியாது. எப்பொழுதும் ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய சொந்தக் காலில் நின்றால்தான் பலமுள்ள கட்சிகளாக இருக்க முடியும் அந்தப் பலமுள்ள கட்சிகள் இணையும் பொழுதுதான் அதற்குப் புதுப் பலன் ஏற்பட முடியும், ஆகவே, இரண்டு கால் தேவையில்லை, நீ ஒரு காலை வெட்டிவிடு, நான் ஒரு காலை வெட்டிவிடுகிறேன் என்று சொந்தக் காலை இழந்து விட எந்தக் கட்சியும் தயாராக இருக்காது. ஆகவே, சொந்தக் காலில் நின்று கொண்டுதான் மற்றக் கட்சிகளோடு உடன்பாடு கொள்ள முடியும்.

நான் நண்பர் ஜேம்ஸ் அவர்களைக் கேட்பதெல்லாம், நீங்கள் அ. தி. மு. க. வோடு உறவு நீடிக்கும் என்று சொல்கிறீர்கள்; ஆனால் அ. தி. மு. க. அதை ஒத்துக் கொண்டதா? உறவு நீடிப்பதாக அ. தி. மு. க. சொல்கிறதா?



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே. அவர்கள் அதை மறுத்துக் கூறாத வரையிலும், மௌனம் சம்மதம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே, அவர்கள் மறுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவேதான் அந்தக் கூட்டு தொடர்ந்துதான் இருக்கிறது என்பதைத் தங்களுக்கு நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தாங்கள் பேசும்பொழுது எதிர்க் கட்சித் தலைவரைக் கேட்கிறேன், பதில் சொல்வாரா என்று கேட்டீர்கள். நான் பதில் சொல்லிவிட்டேன். அதைப்போல ஆளுங்கட்சித் தரப்பிலே உள்ளவர்களைப் பார்த்துக் கேட்கிறேன் பதில் சொல்வார்களா என்று சொல்கின்ற தைரியம் தங்களுக்கு இப்பொழுது இருக்கிறதா?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நான மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்ட கேள்வி, இன்றைய தினம் இந்த சட்டமன்றம். இந்த அரசு கலைக்கப்பட்டால் யார் அந்த மாற்று அரசு அமைப்பதற்கு இங்கே தயாராக இருக்கின்றீர்கள் என்று. இன்றிருக்கின்ற நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் மெஜாரிட்டி கட்சியாக இருக்கிறது. அதற்கு 46 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். நீங்கள் இங்கே மாற்று அரசு அமைப்பதற்குத் தகுதியாக அல்லது தைரியமாக இருக்கின்றீர்களா என்பதைத் தான் கேட்கிறேன். உங்களுக்குத் தைரியம் இல்லை என்பதற்காகத்தான் நான் சுட்டிக் காட்டினேன். உங்களுடைய தொடர்பு, உங்களுடைய கூட்டு காங்கிரசோடு உள்ளது முறிந்து விட்டது என்று அந்தக் கட்சியின் சார்பாகக் கூறப்பட்டது. ஆகவே இந்த அரசைக் கவிழ்த்தால் இந்த நாட்டில் ஏற்படுகிற சூழ்நிலைகளை நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும். நிலையான அரசு வேண்டுமென்று மத்திய அரசுக்கு . .

திரு. து. இராமசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே ஜனதாக் கட்சியினுடைய தலைவர் பேசுகின்ற நேரத்திலே இந்த ஆட்சியைக் கலைப்பது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல, கான்ஸ்டிடியூஷன் இடம் கொடுக்கவில்லை என்றெல்லாம் நீண்ட நேரம் பேசினார்கள். ஆனால் ஜனதாக் கட்சி மத்திய அரசினுடைய பொறுப்பையேற்ற ஒருசில தினங்களிலே ஒன்பது மாநிலங்களில் இருந்த காங்கிரஸ் ஆட்சியைக் கலைத்தது என்றால் அன்று ஜனநாயகம் சாகவில்லையா? அன்று கான்ஸ்ட்டிடியூஷன் இடம் கொடுத்ததா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், காங்கிரசுக்கும் உடன்பாடு முறிந்து விட்டது என்கின்ற முறையிலே அவர்கள் கூறினார்கள். ஒன்றை மட்டும் தெளிவாக நான் கூற விரும்புகிறேன். அது ஜனதாக் கட்சியினுடைய ஆவலாக இருக்கலாம், அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆசையாக இருக்கலாம்; அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அம்மாதிரி ஒன்று நடந்தால் மிக்க மகிழ்ச்சியடையக் கூடியவர்களாக இருக்கலாம்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரசுக்கும் இருக்கின்ற உடன்பாடு அவ்வளவு சுலபமாக முறியக்கூடிய உடன்பாடு அல்ல. வருகின்ற காலத்திலே இந்த ஆட்சிக் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது என்றால் இந்த உறவு நீடித்து இரண்டு கட்சிகளும் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று அரசு அமைக்கும் என்பதை திட்டவட்டமாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : அப்படி ஆட்சி அமைத்தால் யார் முதலமைச்சராக வருவார்கள்?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலில் கல்யாணம் நடக்கட்டும். குழந்தை ஆணா, பெண்ணா எப்படி இருக்கும் என்பதைப பிறந்த பிறகு பார்க்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரசுக்கும் உறவு நீடிக்குமா, இருக்குமா என்று அவர் கேட்டார். நான் சொன்ன பதிலில் நீடிக்கும் என்று சொன்னேன். அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் சொன்ன அதே கருத்தை நம்முடைய இந்திரா காங்கிரஸ் தலைவரும் நீடிக்கும் என்று சொல்லிவிட்டார். என்னைப் பார்த்து ஜேம்ஸ் கேட்ட அதே கேள்வியை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துக் கேட்டு அவர்களிடம் இருந்து இந்த உறவு நீடிக்குமா அல்லது அற்ப ஆயிசிலே முடிந்து விடுமா என்ற பதிலைப் பெறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பதிலை இந்த அவையிலேயே பெறலாம். ஏனென்றால் நானும் இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சொன்னேன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் துரை ராமசாமி



அவர்களும் பதிலை அளித்திருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களும் பதில் அளிப்பார்கள். ஜேம்ஸ் அவர்கள் அந்தப் பதிலை அவர்களிடத்தில் கேட்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்யாணம் நடக்கட்டும் என்று எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இப்போது விவகாரமே யார் மாப்பிள்ளை என்பதுதான்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இரண்டு கட்சிகளுக்கும் கூட்டு என்பது உறுதி. தேர்தல் வந்தால் உறுதியாகப் போட்டி போடுவோம். போட்டி போட்டு வந்த பிறகு யார் தலைவர் என்ற முடிவை செய்து கொள்வோம். அதைப்பற்றி உங்களுக்கு ஏன் அக்கறை? அந்தக் கவலை ஏன் இப்போது ?

திரு. ர. ஜெபமணி : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் போது கல்யாணம் நடக்கட்டும், குழந்தை ஆணா பெண்ணா என்று பார்ப்போம் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள்தான், என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் இளைய பெருமாள் கூறிவிட்டார். அதற்கு அவர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜேம்ஸ் அவர்கள் தொடர்ந்து பேசவும். யார் முதலமைச்சர் என்பதையும், யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பதையும் வெளியே உள்ள மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். வேறு ஏதாவது பேசுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் வேண்டும் என்றே விவகாரத்தை கிளப்ப இங்கே விரும்பவில்லை. காரணம் இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கே வந்த மத்திய அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறி இருக்கிறார்கள்.

"Congress (I) should not depend on D.M.K. for ever. It should stand on its own legs"

என்று கூறுவதன் காரணமாகத்தான் எனக்கு இந்த சந்தேகம் ஏற்பட்டதே தவிர வேறு அல்ல. உங்கள் கூட்டும் நீண்டு இருக்கவேண்டும். நீங்கள் நல்முறையில் கூட்டாக இருந்தால் எனக்கு நிச்சயமாகக் கவலையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[1980 பிப்ரவரி 7

திரு. மு. கருணாநிதி : என்னைக் கேட்டுப் பதிலைப் பெற்றுவிட்டார். நான் அவரைக் கேட்பது, ஆளும் கட்சியைக் கேட்டு உரிய பதிலைப் பெறுங்கள். ஏன் அதில் தயங்குகிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு எப்படியாவது எங்களிடமிருந்து பதிலைப் பெற வேண்டும் என்பதில் ஏன் இவ்வளவு அக்கறை என்று எனக்குத் தெரியவில்லை. நான் பதில் சொல்கிறேன். எங்கள் கூட்டு முறிந்துவிட்டது என்று இதுவரையில் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததிலிருந்து கூட்டு இதுவரையில் இருக்கிறது என்றுதான் அர்த்தம், இந்த மிக சாதாரண அடிப்படை விஷயத்தைத் திரும்பச் சொல்லி சட்டமன்றத்திலே சொல்லி அதன் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. ஒன்று நான் சொல்கிறேன். , அவர்கள் கேட்டார்கள் நான் பதில் சொல்லவில்லை என்று. சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்களும் பதில் சொல்லாமல் இருக்கிறார்கள். இளையபெருமாள் சொல்லியிருக்கிறார் நாங்கள்தான் முதலமைச்சர் என்று. அதை இதுவரையிலும் நீங்கள் மறுக்கவில்லை. இதற்குத்தான் எதிர் கட்சித் தலைவர் அவர்களுடைய பதில் தேவை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மாரிமுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் எதிர் கட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு அவர்களுடைய விளக்கம் உங்களுக்குப் போதவில்லை என்றால் நீங்கள் மீண்டும் கேட்கலாம்.

[பிற்பகல் 12–10]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஜனதா கட்சிக்கும், மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அ.தி.மு.க-வுக்கும் இடையே உள்ள கூட்டு இதுவரையில் முறியவில்லை என்று நம்முடைய அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் மிகுந்த சாதுர்யமாகப் பதில் அளித்து இருக்கிறார்கள். இதுவரையில் முறியவில்லை என்றால் டெல்லிப்பயணம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்து விடுமானால் நாளைக்கு இதுவரையில் முறியவில்லை என்று தானே சொன்னேன் என்று கூறுவதற்கு இயலும். இதுவரையில் முறியவில்லை என்று சொல்கிறீர்கள் தொடர்ந்து அ.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டு தொடரும் என்று சொல்கிறீர்களா?



980 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு பதில் வரவில்லை. வெளியே சொல்கிறார்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர் நாங்கள் தான் இங்கே ஆட்சியை அமைப்போம், முதலமைச்சராக வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இதுவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். உங்களிடமிருந்து தான் அதற்கு பதில் எதிர்பார்க்கிறேனே தவிர உங்களுக்குப் பின்னாலே இருக்கிற உறுப்பினர்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

திரு. மு. கருணாநிதி : நான் பேசும்போது இரண்டு பகுதியாகப் பேசினேன். ஒரு பகுதிக்கு உங்களிடமிருந்து பதில் எதிர் பார்த்தேன். அதற்கு நான் பதில் சொல்லாமல் ஓடிவிட மாட்டேன். உங்களிடத்தில் எதிர்பார்க்கிற பதில்—ஜனதா, அதிமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறவு இதுவரையில் முறியவில்லை என்றீர்கள். அப்படியானால் நாளைக்கு முறியலாம் என்பதா அல்லது மாலையில் முறியலாம் என்பதா, அல்லது நண்பர் மனோகரன் திரும்பி வந்த பிறகு முறியலாம் என்பதா—விளக்கம் தேவை. தொடர்ந்து நீடிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த முதலமைச்சர் யார் என்பதைப்பற்றி ஒரு பிரச்னை வந்தது. பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றிப் பேசப்பட்டது. அது குறித்து திரு. இளையபெருமாளோடு நான் பேசினேன். தான் டெல்லி சென்று திரும்பி வந்த பிறகு அதற்கான மறுப்பை பத்திரிகைகளில் வெளியிடுவதாக அவர் என்னிடத்தில் சொன்னார் அவர் சொன்னது பத்திரிகையில் தவறாக வந்ததாகவும், என்னிடத்தில் திரு. இளையபெருமாள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இது அரசியல் பிரச்னை, நாட்டுப் பிரச்னை. திரு. இளையபெருமாள் பேசி இருப்பது நாட்டு மக்களுக்கு எப்படித் தெரியும். டெல்லி போய் திரும்பி வரும் வரைக்கும் அந்தச் செய்தி நாட்டிலே அப்படியே இருக்குமா? டெல்லி போய் வந்த பிறகு என்கிற போது பதில் டெல்லியில் இருந்து வரவேண்டியிருக்கிறது டெல்லிக்குப் போய்விட்டு வரவேண்டியிருக்கிறது என்று நினைக்கிற போது, வேதனையாகத்தான் இருக்கிறது.

அது மட்டுமல்ல என்னைப் பொறுத்தவரைக்கும் அந்தச் செய்தி இப்போதுகூட இருந்து கொண்டு தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அடுத்து இந்த அரசு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறது என்பதை ஆளுநர் உரையில் நாம் பார்க்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் கேட்டதற்கு பதில் நான் சொல்லிவிட்டேன். அவர் நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை. அதற்கு அவர் மறுப்புச் சொல்வதற்கு முன்வரவில்லை என்றால் பாதகம் இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர் இங்கே ஒழுங்காகப் பதில் சொல்லவில்லை, வழவழா என்று பதில் சொல்லி இருக்கிறார்கள். நான் சொல்கிறேன், நிச்சயமாக இந்திரா காங்கிரஸ், திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டு நீடிக்கும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். அதேபோல் நாங்கள் ஜனதா கட்சியோடு உடன்பாடு கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் நீங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு உடன்பாடு கொள்ளக் கூடாது என்பதற்கு இப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சங்கரய்யா அவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறினார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியோடு கூட்டு சேரக் கூடாது, அந்த முயற்சியில் ஈடுபடக் கூடாது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு கூட்டு இல்லை, நாடாளுமன்றத் தேர்தலின் போது இருந்த கூட்டணி தான் நீடிக்கும் என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் சொல்வீர்களா என்பது தான் என்னுடைய முதல் கேள்வி.

நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், திரு. இளையபெருமாள் அவர்களே பத்திரிகையில் வந்த செய்தி தவறானது. தன்னுடைய கருத்து மாற்றி பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது என்று என்னிடத்தில் கூறியிருக்கிறார்கள். இன்றோ நாளையோ விளக்கம் அளிப்பார்கள். ஆனால் யார் முதலமைச்சர் என்று கேட்டதிலிருந்து நீங்கள் முதலமைச்சர் இல்லை என்ற எண்ணம் கொண்டு இருப்பதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் துணைத் தலைவர் அவர்கள் அது மக்கள் பார்த்து கடைசியாக அளிக்க வேண்டிய தீர்ப்பு என்று தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.



மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: நான் சொல்கிற பதிலை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். வழவழா என்றும் இருப்பதாகவும் ஏற்றுக் கொள்ளலாம். சரியாக இருப்பதாகவும் ஏற்றுக்கொள்ளலாம். அது எடுத்துக் சொல்வதைப் பொறுத்து இருக்கிறது. வழவழா என்று சொல்ல வில்லை. இன்று கூட்டு இருக்கிறது. அதில் மாற்றம் இல்லை. என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால் நான் கேட்பது, திரு. இளையபெருமாள் அறிக்கை விட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. நாட்டு மக்கள் எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் ஆனால் டெல்லி போய்விட்டு திரும்பி வரும் வரைக்கும் மக்கள் அதைப்பற்றி பேசிக் கொண்டே இருக்கிறார்கள். உங்களுடைய மறுப்பை ஏன் சொல்லக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

திரு. மு. கருணாநிதி: திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்தான் முதலமைச்சர் பொறுப்பு ஏற்கப்பட வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மெத்த ஆர்வம் கொண்டிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வின்சென்ட்: (அமைச்சரின் பேரவைச் செயலர்): துணைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டு எப்படி இருந்தாலும் அடுத்த முதலமைச்சரும் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தான்.

திரு. ர. ஜெபமணி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணை சபாநாயகர் அவர்களே, இங்கே நீங்கள் அந்த உறுதியைக் கொடுங்கள் இந்த உறுதியைக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் தஞ்சாவூரில் நடைபெற்ற இடைத்தேர்தலில், அப்போது ஒரு கூட்டத்தில் கூறினார்கள். இந்தக் கூட்டு நிலையானது, என்றென்றும் உள்ளது என்று கூறினார்கள். ஆகவே ....

திரு. சென்னை மு. அரங்கநாதன்: துணைத் தலைவரவர்களே, இது பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: அரசாங்கம் ஏற்கெனவே விதித்திருந்த 9,000 ரூபாய் கட்டுப்பாட்டை இப்போது ரத்து செய்துவிட்டது மட்டுமல்ல; பின்தங்கிய மக்களுக்கு ஏற்கெனவே இருந்த 31 சதவீதத்தை 50 சதவீதமாக உயர்த்திக் கொடுத்ததற்காக இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1980 பிப்ரவரி 7

அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு 18 சதவீதமாக இருப்பதை மேலும் கூட்டவேண்டுமென்று கேட்பதும் நியாயமானது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அது சம்பந்தமாக ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஒன்று இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

'Reservation should not exceed 50 per cent'

என்று இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அப்படி இருக்குமானால் நம்முடைய அரசு வழங்குகின்ற சலுகைகளுக்குப் பாதகம் ஏற்படாமல், அளிக்கின்ற சலுகைகளைக் காப்பாற்ற முயற்சி எடுத்து, சட்ட இலாகா மூலமாக இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு 9,000 ரூபாய் கட்டுப்பாடு விதித்த அதே கொள்கையை மேற்கொண்டு பொருளாதார ரீதியில் அடிமட்டத்தில் இருக்கிற நலிந்தவர்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு ஏற்றிருக்கிறது. ஆகவே, ஜாதி, மத வேறுபாடு இல்லாமல் பொருளாதாரத்தில் நலிந்திருக்கிற அனைவருக்கும் என்று ஒரு சதவீதத்தை ஒதுக்கி வைத்தால் நலமாக இருக்கும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இல்லை என்றால் 'ஃபார்வர்டு கம்யூனிட்டியில்' இருக்கிற பொருளாதாரத்தில் நலிந்த மக்களுக்கு—அவர்களுக்கு வேண்டுமானால் ஆண்டு வருமானம் 9,000 ரூபாய் என்று வரம்பை நிர்ணயித்துக்கொள்ளுங்கள். 10 சதவீதம் என்று ஒதுக்கி வைத்தால் இந்த நாடு வரவேற்கும்; இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் ஏற்கெனவே பிற்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிற எந்தச் சலுகையும் பாதிக்காது; தாழ்த்தப்பட்ட மக்களையும் அது பாதிக்காது; அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மதம் மாறிய அரிசன கிருஸ்தவர்களுக்கு இப்போது ஒரு பாதகமான சூழ்நிலை இருப்பது இந்த அரசுக்குத் தெரியும். காரணம் இதற்கு முன்னால் பல்வேறு சந்தர்ப்பங்களிலே நான் அதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். மதம் மாறிய காரணத்தால் மட்டும் அவர்களை ஷெட்யூல்டு வகுப்பில் சேர்க்காமல் இருப்பது வருந்தத்தக்கது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் 15 நிமிடங்கள் கொடுங்கள்.



1980 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் நிறையப் பேர்கள் பேச வேண்டியிருக்கிறது; சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மதம் மாறியவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளைக் கிடைக்காமல் செய்வது நியாயம் அல்ல; நீதி அல்ல. கேரளம், மகாராஷ்டிரம் மாநிலங்களிலே இந்த அநீதி தவிர்க்கப்பட்டிருக்கிறது. அதைப்போல இங்கேயும் செய்வதற்கு, இந்த மன்றத்திலே அதற்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசியல் சட்டத்தில் இருக்கிற கோளாறை திருத்தி, மதம் மாறிய கிருஸ்தவர்களுக்கும் அனைத்துச் சலுகைகளும் கிடைக்கச் செய்ய வேண்டும். ஷெட்யூல்டு வகுப்பினருக்கு கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் இன்றைக்கு கிருஸ்தவர்கள் 'ஃபார்வர்டு கம்யூனிட்டி'யில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள்; இந்து மதத்தில் இருந்தவர்கள்; மதம் மாறி கிருஸ்தவர்களாக இருக்கிறார்கள். கிருஸ்தவ மதம் என்றால் அது ஒரு ஜாதி அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகையால் எந்த ஜாதியிலிருந்து மதம் மாறி கிருஸ்தவர்களாக வந்தார்களோ அவர்களுக்கு அந்த ஜாதியில் உள்ளவர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அத்தனை சலுகைகளும் கிடைக்க வேண்டும், அந்தச் சலுகைகள் கிடைப்பதற்கு, அந்த ஜாதியினர் எந்தப் பட்டியலில் இருக்கிறார்களோ அந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கும் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.20]

அடுத்ததாக காவலர்கள் பிரச்சினை என்பது இந்த மாநிலத்தில் ஒரு பெரிய பிரச்சினையாகி இருக்கிறது. ஏற்கெனவே காவலர்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பல காவலர்கள், நடந்த போராட்டத்தின் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு காக்கப்பட வேண்டுமென்றால் இந்த அரசுக்குக் காவலர்களுடைய ஒத்துழைப்பு அவசியமாக இருக்கிறது. ஆகவே வேலையிலிருந்து நீக்கப்பட்ட காவலர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் பிரச்சினை. இது நீண்ட நாட்களாக இருக்கிறது. அவர்கள் கொண்ட கடன்களைத் தீர்ப்பதற்கு வழியில்லாமல் தவிக்கிறார்கள். அந்த பிரச்சினையை உடனடியாகத் தீர்க்கவேண்டும். நம்மிடத்திலே நிதி வசதி

போதிய அளவு இல்லை என்றாலும் புதிதாக அமைந்திருக்கின்ற மத்திய அரசாங்கத்திலே இருந்து மானியமாகப் பெற்று இந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தொழிலைப் பொறுத்தமட்டில் கடந்த சில ஆண்டுகளாக இந்த மாநிலத்திலே தொழில் துறை நலிந்துபோய் இருப்பதாக ஆளுநர் அவர்களின் உரையிலே காணப்படுகிறது. இதற்காக தேவையான போராட்டத்தை மத்திய அரசோடு தொடர்ந்து நடத்தி நிச்சயமாக இந்த மாநிலத்திற்கு அதிகமாக பெரிய தொழில்களை அமைப்பதற்கு நிதிவசதியினை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நமது மாநில அரசு வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனதாக் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்த போது 50 கோடி ரூபாய் செலவில் தமிழ் நாட்டில் ஒரு ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலை அமைப்பதாக ஒரு திட்டம் இருந்தது. அந்த தொழிற் சாலையை இங்கே அமைப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தத் தொழிற்சாலையை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமது மாநிலத்தில் தொழில்களுக்கு வேண்டிய ரா மெட்டீரியல்ஸ் அதிகமாகக் கிடைக்கின்றன. குறிப்பாக ரப்பர் ஏராளமாகக் கிடைக்கின்றது. ஆகவே தமிழ்நாட்டில் ரப்பர் ஃபேக்டரிகளை ஆரம்பிப்பதற்கு மத்தியில் அமைந்திருக் கின்ற அரசை வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகத் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர் கள் ஒரு கோரிக்கையை வைத்தால் நீண்ட நாள் போராட்டத் திற்குப் பிறகுதான், குறிப்பாக ரப்பர் தோட்டத் தொழிலாளர் களைப் பொறுத்தவரையில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்துகிட்டத்தட்ட 60 நாட்கள் போராட்டம் நடத்திய பிறகு தான் செட்டில்மென்ட் ஏற்பட்டது. ஆகவே இந்த மாதிரி நீண்ட நாட்கள் வேலை நிறுத்தம் செய்யப்படுமானால் அரசாங்கத்திற்கும் நஷ்டம் ஏற்படுகிறது. தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இவற்றை எல்லாம் உணர்ந்து வேலைநிறுத்தத்தை உடனடியாக நிறுத்தி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து தொழிலாளரிடமிருந்து பிடிக்கப்பட்ட கட்டாய சேமிப்பு இன்னும் பல இடங்களில் திருப்பிக்கொடுக்கப்பட வில்லை. பலநூற்பாலைகளில் குறிப்பாக நாகர்கோவில் நாகம்மாள் மில் தொழிலாளர்களுக்கு கட்டிய சேமிப்புப் பணம் இன்னும் திருப்பிக்கொடுக்கப்படவில்லை.

அதுமட்டுமல்ல அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற பல ஆசிரியர்களுக்கும் இந்த கட்டாய சேமிப்பு இன்னும் கொடுக்கப் படவில்லை. கட்டாய சேமிப்பு கொண்டு வந்த அரசு போய் அடுத்த அரசு வந்து, பிறகு அந்த அரசு போய் அடுத்த அரசு வந்துவிட்ட பிறகும் இன்னும் இந்த கட்டாய சேமிப்பு பணத்தைத் தொழிலாளர்களுக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் அது நிச்சயமாக வருந்தக்கூடிய ஒன்று. ஆகவே உடனடியாக அதைக்கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்றவர்களுக்கு கடன் உதவி செய்வதற்கு சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஆனால் அந்த உதவி அவர்களுக்கு நேரடியாகக் கொடுக்கப்படவில்லை. வங்கியிலிருந்து அவர்களுக்கு பண உதவி கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் ஊனமுற்றவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே வங்கிகளுக்கு இந்த அரசு தாக்கீது அனுப்பி உடஊனமுற்றவர் களுக்குக் கொடுக்கப்படவேண்டிய உதவிகளை உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமீபத்தில் தமிழ்நாட்டில் ஸ்பெஷல் போலீஸுக்கு ரெக்ரூட்மென்ட் செய்யப்பட்டு இருக்கிறது. அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே உண்மையிலேயே அவ்வாறு புறக்கணிக்கப்பட்டிருந்தால் அதற்குரிய அதிகாரி மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

அதுமட்டும் அல்லாமல், 1978 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பலர் இன்னும் எந்தவித நன்மையும் பெறாமல், அரசு எந்தவித சலுகையும் அவர்களுக்குக் கொடுக்காமல் பெரும் கஷ்டத்திற் குள்ளாகியிருக்கிறார்கள். லட்சக்கணக்கான வாழைக் குலைகள் சேதம் அடைந்தன. முதலமைச்சர் அவர்கள் கூட அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுவரையில் எதுவும்

செய்யப்படவில்லை. உடனடியாக இதனைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் கடைசியாக ஒன்றிரண்டை எடுத்துக் காட்டிவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 3, 4 நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன எல்லா ஆற்றிலும் நிறைய தண்ணீர் இருந்தும்கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்ன்றன. தண்ணீர் கிடைக்காமல் பயிர் கழிந்து போய் இருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால் அங்கே செயல்படுகிற ஒரு எக்சிகியூடிவ் என்ஜினியர், நிர்வாக திறமையற்ற அதிகாரி. அப்படிப்பட்ட ஒரு அதிகாரி அங்கே இருப்பதினால் ஆயிரக் கணக்கான பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டும் அல்லாமல், அங்கே இருக்கிற சப்—டிவ்ஷன் ஒன்றில் குளித்தலையில் சிற்றார்—பட்டணத்தில் இருக்கிற சப்—டிவிஷனில், அந்த சப்—டிவிஷன் ஆபீசர் வெளிநாடு செல்லத் தயாராக இருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார். ஆகவே, அங்கே இருக்கிற விவசாயிகள் கவனிப்பாரற்று அனாதைகளாகக் காட்சியளிக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ப் பகுதிகளைத் தாயகத்தோடு சேர்ப்பதற்குப் போராடி உயிர் நீத்த தியாகிகளுக்கு இந்த அரசு ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு வழங்கிய பென்ஷன் போன்ற சலுகைகளைக் கொடுப்பதற்கான வழிவகைகளை செய்திருக்கிறது. அதற்காகப் பாராட்டுவதுடன் கடைசியாக கட்டபொம்மன் கார்ப்பொரேஷனை இரண்டாக பிரிக்கப்போவதாகத் தகவல் வந்திருக்கிறது. அப்படி இரண்டு கார்ப்பொரேஷன்களாகப் பிரிப்பது என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கவிருக்கிற கார்ப்பொரேஷனுக்கு, கன்னியாகுமரி மாவட்டம் அமைவதற்காக அயராது உழைத்து தன் இன்னுயிரையும் அர்ப்பணித்த பெருந்தலைவர் மாசில் நேசமணி அவர்களின் பெயரால் 'நேசமணி கார்ப்பொரேஷன்' என்று பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.



<u>திரு. க. சுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூறவிரும்புகிறேன். கட்சியினுடைய கருத்துக்கள் என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதற்கு பிறகு கடைசியில் எங்களுடைய தலைவர் அவர்கள் பேசவிருக்கிறார்கள். இடையிலே எனக்குப்பட்ட ஒன்றிரண்டு வார்த்தைகளைத் தெரிவிக்க அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த தோழமைக் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் ஒரு சமாதானமான பேச்சைப் பேசினார்கள். தோல்வியுற்றிருக்கிற ஒரு கட்சிக்கு ஆறுதல் கொடுக்க வேண்டும் என்ற அளவில் அவர்கள் அப்படி உரையாற்றி இருப்பது உண்மையிலேயே உடுக்கை இழந்திருக்கிற உங்களுக்கு கொடுக்கப்பட்ட உதவி என்று நான் ஏற்றுக் கொள்கிறேன். அது அவர்களுடைய பண்பு. தோல்வியுற்றிருக்கிற நேரத்திலே புண்படுத்துவது அழகல்ல என்றுதான் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அப்படித்தான் உங்களைப் புண்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் இன்றைக்கு இருக்ககூடிய சூழ்நிலையில் அரசியல் நிலைமைகள் மாறுகிறபோது எப்படி உறவுகள் மாறுகின்றன என்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இங்கே இருக்கிற ஆளுநராக இருந்தாலும் பாராளுமன்றத்திலே உரையாற்றிய குடியரசுத் தலைவராக இருந்தாலும், இரண்டு பேர்களுடைய உரை அல்ல அது. இவரும் ஜனதா கட்சி, அவரும் ஜனதா கட்சி. ஜனதா கட்சி ஆட்களின் வாயிலிருந்து காங்கிரஸ்காரர் பேசியிருக்கிறார். இங்கே நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக் காரர்களும் பேசியிருக்கிறார்கள். இரண்டு பேர்களின் பெயரைச் சொல்வது பினாமி மாதிரி. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இராஜாராம் அவர்கள் கூட ஒரு ஆளுநரைப்போல பேசியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் சொல்ல முடியாது. எமர்ஜன்சி காலத்திலே கூட அவர்கள் இங்கேதான் இருந்தார்கள்- நாங்கள் பட்ட கஷ்டங்களைப்பற்றி அவர்கள் சொன்னார்கள். அந்த கஷ்டங்களுக்கெல்லாம் அந்த நேரத்திலே உறுதுணையாக இருப்பதற்குப் பதிலாக, அந்தக் கஷ்டங்கள் நியாயம் தான் என்று சொல்வது போல இன்றைக்கு அவர் பேசியிருக்கிறார்கள். அது அவருடைய உரை அல்ல. அது ஒரு ஆளுநர் உரை மாதிரிதான் இருக்கிறது.

இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையிலே நண்பர்கள் பல்வேறு பிரச்னைகளை எழுப்புவார்கள். முதலமைச்சர் நீங்களா இளையபெருமாளா என்றெல்லாம்

கேட்டார்கள். நன்றாகச் சொன்னார் நமது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள். அதை மக்கள் முடிவு செய்ய வேண்டும். நாமே முடிவு செய்வது அல்ல. நாமே முடிவு செய்யக் கூடிய விஷயம் அல்ல இது என்று கூறினார். அதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும். மக்களை மதிக்க வேண்டும்.....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, முதலமைச்சர் யார் என்கிற பிரச்னை அல்ல. அது தெளிவாக இருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் பேசுகிறபோது, தமிழகத்தைப் பொருத்தவரையிலும், அதேபோல் பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையிலும் கூட்டாட்சி என்று சொன்னார்கள். நாங்கள் தெளிவாகப் அறிக்கை விட்டுப் பேசினோம் கூட்டாட்சி அல்ல, வந்தால் நாங்கள் தான் வருவோம், நாங்கள் தான் முதலமைச்சராக இருப்போம் இல்லாவிட்டால் இல்லை என்று, தெளிவாகப் பேசியிருக்கிறேன். இன்றைக்கு நான் சொல்கிறேன், எங்களோடு சேர்ந்திருக்கிற கட்சிகளெல்லாம் எங்களை ஏற்றுக்கொள்கிற கட்சிகள். நாங்கள் தான் முதலமைச்சராக வருவோம், மெஜாரிட்டியாக வருவோம் என்று ஏற்றுக்கொள்கிற கட்சிகளோடுதான் நாங்கள் சேர்ந்திருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி உம்முடைய கட்சித் தலைவர் சொல்ல முடிந்தால் சொல்லட்டும்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் முன்னாலேயும் பேசியிருக்கிறார்; இப்பொழுதும் பேசப்போகிறார். அந்த விஷயத்தை அதிகமாக்க வேண்டாம் என்று கருதுகிறேன். மக்கள் தேர்ந்தெடுக்கிற ஆட்சிதான் கட்சிதான் பிரதமராக வரமுடியும். பிரதமர் யார் என்று முடிவு செய்வது யார்? யாரை மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்களோ, எந்தக் கட்சி மெஜாரிட்டியாக வருகிறதோ அந்த கட்சிதான் முடிவு பண்ணவேண்டும். இங்கே இருக்கிற அ.தி.மு.க. தலைவர் ஜெகஜீவன்ராம்தான் பிரதமர் என்கிறார். அவர் கட்சி என்ன அவ்வளவு தொகுதிகளுக்கா போட்டி போடுகிறது. 540 இடங்களிலேயுமா போட்டிபோட்டார்கள். இதுமாதிரி அர்த்தமற்ற வார்த்தைகளைச் சொல்வதற்கு நாங்கள் விரும்பவில்லை. அது இர்ரெலவண்ட். அதுமாதிரி இர்ரெலவண்டான ஆர்கியூமெண்ட்டில் நேரத்தை வீணாக்குவது அநாவசியம். மக்கள் பார்த்து வாக்களித்து தேர்ந்தெடுக்கிற கட்சி எது மெஜாரிட்டியாக வருகிறதோ அதைப் பொருத்து தீர்மானிக்க வேண்டிய



விஷயம் இது. இன்றைக்கு நீங்கள் விலக வேண்டும் என்று சொன்னால், மக்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறோமே தவிர எங்களுக்காக அல்ல.

(பிற்பகல் 12. 30)

நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குச் சொன்னார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக வந்து விட்டால், அவர்கள் ஆட்சிக்கு ந்துவிட்டால் கலைஞரைத்தான் முதல் அமைச்சராக வைப்பார் என்று. இது என்ன நியமன போஸ்டா? உங்களை ாத்திரி நியமிக்க முடியுமா? கவுன்ஸிலுக்கு வந்து மந்திரியாக ஆகிவிட முடியும். அது வேறு விஷயம். நியமிக்கப்படுகிற பாஸ்ட் அல்ல முதல் அமைச்சர் பதவி. முதல் அமைச்சர் ன்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற சட்டமன்ற றுப்பினர்களால் நியமிக்கப்படுகின்ற ஒன்று.

அதைப் போய் இவர்தான் பிரதமர் என்று சொன்னால்—இந்திய வரலாற்றிலேயே இதுவரையில் இல்லாத ஒன்றை ங்கள் செய்திருக்கிறீர்கள். பிரதமராக ஜகஜீவன்ராம் அவர்களை ஆக்குவோம் என்று சொன்னீர்கள். நீங்கள் யாரை ஆக்குவோம் என்று சொன்னீர்களோ அவர்களைப் போக்குவோம் ன்பதுதான் அர்த்தம். பெரிய மனிதரை அலட்சியப்படுத்தி ிட்டீர்கள். பரவாயில்லை. ஆனால் ஒன்று கூறிக்கொள்ள ிரும்புகிறேன். ஜனதாவாக இருந்தாலும்சரி, அண்ணா ிராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும்சரி மக்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் இன்று முதல் அமைச்சராக ற்றிருக்கிறீர்கள். உங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? ாங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் மக்கள் ஏற்றுக்கொள்ள ில்லையா? நாட்டுமக்கள் ஓட்டுபோட்டதால்தான் நீங்கள் முதல் அமைச்சராக இருக்கிறீர்கள். சீப்செகரட்டரியாக இருக்கட்டும், . ஸி. எஸ். அதிகாரிகளாக இருக்கட்டும், ஐ. ஏ, எஸ். அதிகாரிகளாக இருக்கட்டும், ஐ. பி. எஸ். அதிகாரிகளாக இருக்கட்டும், முதல் அமைச்சர் வந்தால் ஸல்யூட் போடுகிறார்கள் இல்லையா? ஏன் ஸல்யூட் போடுகிறார்கள்? முதல் அமைச்சர் அவர்கள் அவர்களைவிட அறிவாளி என்று அர்த்தமா. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விட ரொம்பத் தெரிந்தவர் என்று அர்த்தமா. இல்லை. மக்கள் கொடுக்கிற மதிப்புதான் காரணம்.

மக்கள் மதிப்பு என்றால் அதற்கு அளவுகோல் என்ன? மான்டேட்' என்றால் என்ன? அது, மக்களின் உத்தரவு, மக்களின் சக்தி. மக்கள் வோட்டுகள் மூலம் கொடுக்கக்கூடிய

சக்தி. மக்கள் இன்றைக்கு உங்களை மதிக்கவில்லை. பிறகு ஏன் நீங்கள் இங்கே இருக்கவேண்டும். மக்கள் உங்களுக்கு இன்று ஓட்டு போடவில்லை. உங்களுக்கு யார் அதிகாரத்தைத் தந்தார்களோ அவர்கள் இன்று உங்களை மதிக்கவில்லை என்பது தெரிகிறது. நீங்கள் யாருக்காக ஆட்சி நடத்துகிறீர்கள், உங்களுக்காக ஆட்சி நடத்துகிறீர்களா? நேற்று சொன்னார்கள். மக்கள் எங்கள் பக்கம் என்று. ரைட். இப்போது மக்கள் உங்கள் பக்கம் இல்லை என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். அதில் என்ன வெட்கம். காங்கிரசுக்கு அதிகமாக இடங்கள்வந்து விட்டது 23 இடங்கள் வந்துவிட்டன என்றால் இளையபெருமாளை முதல் அமைச்சராக ஆக்குங்கள்; நாங்கள் ஏன் எதிர்க்கப் போகிறோம். எம். ஜி. ஆர்.யையே தாங்கிக் கொண்டிருக்கிற நாங்கள் இளையபெருமாளை தாங்கிக்கொள்ள மாட்டோமா. அந்த அளவிற்கு மோசமாகப் போய்விட்டோமா. மக்கள் யாருக்கு ஓட்டு போடுகிறார்களோ அவர்கள் ஆட்சிபீடத்திற்கு வருகிறார்கள். அவர்கள்தான் ஆட்சிக்கு வரவேண்டும். அதுதான் நியாயம். இதை ஒரு 'காண்ட்ரவர்சி ஆக ஆக்க வேண்டியதில்லை.

நியாயமான திட்டங்களை உங்களால் வகுக்கமுடியவில்லை. இருபது அம்சத்திட்டத்தைப்பற்றி பேசுகிறீர்கள். ஆனால் வெளியே என்ன பேசுகிறார்கள். இந்த ஆட்சி எவ்வளவு நாட்கள் வரை இருக்கும், எப்போது 'ரிஸைன்' செய்வார்கள், எப்போது டிஸால்வ் ஆகும் என்று வெளியே பேசுவதை நாம் காதில் வாங்கவில்லையா. இதை எங்கள் ஆசைக்காக பேசுகிறோமா. இல்லை, எங்களுக்கு அந்த ஆசை இல்லை. மாநில சுயாட்சிக்காகப் பாடுபடுகிற திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கச் சொல்லலாமா என்று கேட்கிறார்கள். நாங்கள் கலைக்கச் சொல்லவில்லை- மாநில சுயாட்சிக்காகப் பாடுபடுவது யார்? நொண்டியை தளபதியாக ஆக்கமுடியுமா? நீங்கள் நொண்டியாகப் போய்விட்டீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் எப்படி மாநில சுயாட்சிபற்றிப் பேச முடியும். நேற்றுவரை கூறிவந்த கருத்துக்களை இன்று மாற்றிக்கொள்ளக்கூடியவர்கள் எப்படி உறுதியாக இருக்க முடியும். இருபது அம்சத்திட்டத்திற்கு நல்வரவேற்பு கூறியிருக்கிறார்கள். யார் இவர். நேற்று என்ன பேசினார்கள். இந்திராகாந்தி அம்மையார் வெற்றி பெற்றால் பதினைந்தாண்டுகள் சர்வாதிகாரம் இருக்குமென்று சொன்னார்கள். தேர்தல்கள் வராது என்று சொன்னார்கள். தேர்தல் வந்தால் என்ன தப்பு. தேர்தல் வந்தால் உங்களுக்கு அல்லவா நல்லது. மாற்றுத் திட்டம் கொண்டுவரலாமே. இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கு வந்தால் பதினைந்து ஆண்டுகள் தேர்தலே வராது என்று கூறியவர்கள் இருபது அம்சத் திட்டத்தை வரவேற்பதாகக் கூறுகிறார்கள். நீங்கள் வாழ்த்தினால் அர்த்தம் இருக்கிறது. தோற்றுப்போனவர்கள்



கூட 'கன்க்ராஜுலேஷன்ஸ்' சொல்லலாம். எதற்காக வரவேற்பு அடுத்தவீட்டுப் பிள்ளையை எடுத்து ஏன் கொஞ்சுகிறீர்கள். பிள்ளை இல்லாதவன் செய்கிற வேலையா இது. போகட்டும், அதைப்பற்றி கவலை இல்லை. அதற்கு வரவேற்பு கூற உங்களுக்கு என்ன நியாயம் இருக்கிறது.

திரு. ராசாராம் அவர்கள் நன்றாகப் பேசினார்கள். தன்னிலை விளக்கம் என்று சொல்லிப் பேசியிருக்கலாம். ஆளுநர் உரையில் பேசவேண்டியதில்லை. பனைமரத்துப்பட்டியில் இருக்கிற நிலை பற்றியெல்லாம் சொன்னார்கள். மண்ணெண்ணை கிடைக்கிறது, சர்க்கரை கிடைக்கிறது, எல்லாம் கிடைக்கிறது, வாங்கத்தான் ஆள் கிடையாது என்று சொன்னார்கள். அந்தத் தொகுதியில் அவர்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது தெரிகிறது. பனைமரத்துப் பட்டிக்கு எல்லாவற்றையும் அள்ளிச் சென்றிருக்கிறார்கள். மற்ற இடங்களில் அப்படி கிடைக்கவில்லை. ஆகவே இப்படித் தேர்தலில் தில்லுமுல்லு செய்தவர்கள் மேல் கேஸ் போடாமல் என்ன செய்வார்கள். இந்த அளவிற்கு நிலைமை மோசமாகப்போய் இருக்கிறது. திரு. ராசாராம் அவர்கள் ஸ்பெஷல் ரெப்ரசென்டேடிவாக இருந்தவர். அவர் ஸ்பெஷல் ரெப்ரஸென்டேடிவ்வாக இருந்தால் என்ன இல்லாமல் போனால் என்ன. அமைச்சராக இருந்தார். இதற்கு மேல் என்ன மரியாதை கொடுக்கப்போகிறார் எம். ஜி. ஆர். இந்திரா காந்தியை தெரியும் என்றார்கள். நாட்டிலுள்ள அறுபது கோடி மக்களுக்கும் அவர்களைத் தெரியும். சின்னப் பிள்ளைகளுக்குக்கூட தெரியும். நிறைய குழந்தைகளை அவர்கள் கொஞ்சியிருக்கிறார்கள். அந்த வாய்ப்பு மற்றவர்களுக்கு கிடையாது. இப்போது பிரச்னை என்னவென்றால் சீப் மினிஸ்டர் யார்? உண்மையைச் சொல்லப் போனால் அவர் யார், எங்கள் சகோதரக் கட்சியைச் சார்ந்தவர் காங்கிரஸ் கட்சி நட்புக் கட்சி.

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருக்கு துணைத் தலைவர் பதவி கொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி எதிர்கட்சி இல்லையா. எதிர்கட்சியை சார்ந்தவர் ஒருவருக்கு அப்பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஏன் எதிர்க்கிறீர்கள். அதைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றும் சொல்லவில்லை. அவர்களில் ஒருவர் கூட அங்கு இல்லை, இந்த மாநிலத்திலிருந்து. வேறு மாநிலங்களில் இருந்து வந்தவர்கள் இருக்கிறார்கள். மக்கள்

தீர்ப்பு அளித்துவிட்டார்கள். வேறு மாநிலங்களில் இந்திரா அலையை தடுத்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இங்கே இந்திரா அலை அடித்தது, வங்காளத்தில் கேரளாவில் அந்த அலைக்குத் தடுப்புச் சுவர் போட்டார்கள் என்றால் அங்கு நல்ல திட்டங்களைக் கொண்டுவந்துள்ளார்கள்.

இருந்தாலும் ஒரு எதிர்க்கட்சி இருக்கட்டும் என்று அனுப்பு கிறார்கள். அந்த தைரியம் எப்படி வருகிறது? அந்தக் கட்சியின் மீது நம்பிக்கை இருக்கிறது. நடைமுறைமீது நம்பிக்கை இருக்கிறது. தெளிவாகவும், திட்டவட்டமாகவும், உறுதியாகவும் அந்தக் கட்சிகள் இருக்கின்றன. ஆனால், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? இன்றைக்குக் காலையில் ஒன்றைச் சொல்லு கிறீர்கள்; உடனே மத்தியானம் மாற்றிக் கொள்ளுகிறீர்கள். ராத்திரிக்கு இன்னொன்றைக் கொண்டு வருகிறீர்கள். உறுதி யற்ற தன்மை. தப்பு அது.

''அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடி''

என்பதாக உச்சத்திற்கொண்டு ஊரில் திரிகிறீர்கள். சும்மா இருக்கவேண்டியது தானே? அச்சமும், பேடிமையும் இருக்கக் கூடாது. சொன்னதை உறுதியாகச் செய்வோம் என்ற கொள்கை இருக்கவேண்டும்.

அண்ணா கொள்கை, காந்திய வழியில் அண்ணாகொள்கை என்கிறீர்கள். காந்தி வழியில் அண்ணா வழியில் நடப்போம் என்கிறீர்கள். அண்ணா என்ன சொன்னார்? அண்ணா அமெரிக் காவுக்குப் போயிருந்தபோது கேட்டார்கள், உங்களுடைய வெற்றிக்கான காரணம் என்னவென்று? அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? என்னுடைய பலஹீனத்தை நான் உணர்ந்திருக்கிறேன் என்றார்கள். உங்களுடைய பல ஹீனத்தை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? காந்திக்கும், அண்ணாவுக்கும், உங்களுக்கும் என்ன சம்பந்தம்? மாண்புமிகு ராஜாராம் அவர்கள் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ், அறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் இருந்தார்கள் என்றார்கள். எல்லோரும் இருந்தார்கள். வாஸ்தவம். கட்ட பொம்மன் இருந்த காலத்தில், எட்டப்பனும் இருந்தான். அதற்காக எல்லோரும் ஒன்றாக ஆகிவிட முடியுமா? எல்லோ ரையும் பெரிய மனுஷர்கள் என்று சொல்லக் கூடாது. அது தப்பு. அப்படி சொல்லக் கூடாது. நியாயமான வாதங்களை எடுத்து வைக்கவேண்டும்.

அண்ணா என்ன சொன்னார்கள்? என்னுடைய பல ஹீனத்தை நான் உணர்ந்திருக்கிறேன், அதுதான் என்டைய பலம் என்றார்கள். அதுபோல், உங்களுடைய பலவீனத்தை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? இல்லை. உணர்ந்திருந்தால், இப்படிப் பேசுவீர்களா?





வீட்டு வாடகைப் பிரச்னையைப் பாருங்கள். முதலமைச்சர் அவர்கள், நாட்டிற்கு தலைமை வகிக்கக் கூடியவர் எவ்வளவு நியாயமாக நடந்து, முன் உதாரணமாக இருக்கவேண்டும். வீட்டு அவலன்சு ரூ. 200; ஆனால் எம். ஜி. ஆர்., முதல் அமைச்சர் அவர்கள் வீட்டிற்கு ரூ. 1,800 என்று நிர்ணயித்திருக் கிறார்கள். அதை வாங்கிக் கொண்டிருக்கிறார். 200 ரூபாய்க்கு மேல் வீட்டு வாடகை கிடையாது. அதுதான் எலிஜிபிலிடி. ஆனால், அவர் 1,800 என்று நிர்ணயிக்கப்பட்டு, வாங்கிக்கொண்டு வருகிறார். அதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்டு மொத்தமாக 54,000 வாங்கியிருக்கிறார். 'ஊருக்குத் தான் உபதேசம், உனக்கு இல்லையடி கண்ணே' என்பார்கள், அதைப் போல் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் எந்த ஊரிலே, எந்தக் காலத்திலே கொடுத்தார்கள்? இதையெல்லாம் முன் தேதியிட்டுப் போடக்கூடாது. அதற்கு ஒரு காபினெட் கூட்டம். இதெல்லாம் தப்பு. காபினெட் கூட்டம் எதற்கு கூட்டுவது என்பது கிடை யாதா? நியாயமாக இருந்தால் கூட்டுங்கள். அவர்மீது குறை கூறுவதற்காக இதைக் கூறவில்லை. இருக்கின்ற நிலைமையை, இவருடைய தலைமையை நம்பக்கூடிய மக்களுக்கு இது எப்படி இருக்கும்? ரூ. 1,800 வீதம் 1977 முதல், மொத்தமாக. ரூபா 54,000 வாங்கியிருக்கிறார்கள். அதற்கு ஒரு உத்தரவு: அதற்கு ஒரு காபினெட் கூட்டம். இதெல்லாம் தான் காந்தி வழியா? அண்ணா வழியா? அண்ணா இப்படிப் போனார்களா? அவர் அவர்கள் சொந்த வீட்டிலே இருக்கின்றவர்கள், வாடகை வாங்கக் கூடாது என்று சொன்னார். அவர் சொன்னதற்கு நேர்மாறாக செய்துகொண்டு, அண்ணா வழி என்று சொல்வதா? சொன்னதற்கு விரோதமாக செய்துகொண்டு, அதைத்தான் அண்ணா வழி என்று சொல்வதா? அண்ணா என்ன அவ்வளவு அப்பாவியா? அவர் இல்லாத நேரத்தில் என்ன வேண்டு மானாலும் பேசுவதா? இது என்ன அர்த்தம்?

காந்தி என்ன சொன்னார்? வரி பாக்கி இருக்கலாம். யாருக்கு வேண்டுமானாலும், வருமானம் வருகின்றவர்களுக்கு வரி பாக்கி இருக்கலாம். முதல் அமைச்சருக்கு இருந்தது; பரவாயி ல்லை. 16 இலட்சம் ரூபாய் இருந்தது; பெரிய மனுஷர்; அதனால் இருந்தது; பரவாயில்லை. ஆனால். 3 இலட்சம் ரூபாய் கட்சிப் பணத்திலிருந்து கட்டினார் என்று வருகிறது. யார் சொல்கிறார் உங்கள் கட்சியின் அமைச்சர், பொருளாளராக இருந்த திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் சொல்கிறார். ஸ்டேட் மெண்ட் தந்திருக்கிறார். 3 இலட்சம் ரூபாய் கட்சிப் பணத்திலே இருந்து, வருமான வரி கட்டியதாக. எல்லோருக்கும் இப்படி

கொடுப்பார்களா? கட்சிப் பணம் என்றால், அது யார் பணம்? மக்கள் பணம். மக்கள் கொடுத்த பணம். எதற்காகக் கொடுத்தார்கள்? உங்கள் வருமான வரி பாக்கியை கட்ட வேண்டும்என்தற்காகவா பொது மக்களிடம் கட்சிக்கு நன்கொடை வேண்டுமென்று கேட்டீர்கள். அதுவும், லதா டான்ஸ் ஆடி, கஷ்டப்பட்டு நடனம் ஆடி, நாடகம் எல்லாம் போட்டு வசூல் செய்தீர்கள், அதிலே வருமான வரி பாக்கியைக் கட்டுவதற்காகவா? நான் இதைச் சொல்வது, அவரைக் கேவலப்படுத்துவதற்காக அல்ல. இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்வதற்காகத் தான். அவரைப்போய் தலைமைத் தாங்கச் சொல்வதென்றால், எப்படி தலைமை தாங்குவார்? பாவம் தான்.

அண்ணா தி. மு. க. வாக இருந்தாலும், தி. மு. க. வாக இருந்தாலும் சரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ரொம்ப தோழமை உணர்வோடு இருக்கின்றது என்று சொன்னார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களோடு எங்களுக்கு உறவு இருக்கிறது, அதனால்தான் நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னார்கள். நாங்களும் அப்படித்தான் இருக்கிறோம். மக்கள் பிரச்சினையாக இருந்தால் அந்தக் கொள்கைக்காக நா கள் போராடி இருக்கிறோம். மக்கள் பிரச்சினை வரும்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு நாங்கள் இருந்திருக்கிறோம். அண்ணா தி. மு. கழகம் எப்போது இருந்தது என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். பரவாயில்லை. ஒன்றும் கெட்டுவிடாது. அதுவும் ஒரு கட்சிதான். நீங்களும் போராட்டத்தில் இருந்திருக்கிறீர்கள். இன்றைக்கு அவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கின்ற கவலை எல்லாம் என்ன? வேறு ஒன்றும் கிடையாது. ஒருவேளை கலைஞர் முதலமைச்சராக வந்துவிட்டால் என்ன என்பது. என்ன குடிமுழுகியா போகும்? அப்படியே வந்தால்தான் உங்களுக்கு என்ன? எதற்காக அடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இளையபெருமாளுக்கும், எங்களுக்கும் முடிச்சு போடுகிறார்கள். அது முடியுமா? அந்த முடிச்சில் நாம் இருக்க முடியுமா? என்பதற்கு. இங்கிலிசில் வந்ததை நீங்கள் எடுத்துக்காட்டி, போகாத ஊருக்கு வழி காட்டுகிற மாதிரி,

Congress I shall not depend on D. M. K. for ever,

என்று சொன்னாராம். அதிலே என்ன தப்பு? யாரையும் சார்ந்து இருக்கக்கூடாது என்றுதானே சொல்லவேண்டும்? நாடே தற்சார்பாக இருக்கின்றபோது, கட்சி மட்டும் தற்சார்பு இல்லாமல் போகுமா? செல்ப்-ரிலையன்ஸ் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற காலத்தில், ஒரு கட்சி தானே வளரவேண்டும்



என்று சொல்வதில் என்ன தப்பு? நம்முடைய உறுப்பினர் லத்தீப் அவர்கள் நான் என்றைக்கும் தி. மு. க. வைச் சார்ந்திருக்கிறேன் என்று சொல்ல முடியுமா?

Can Mr. Latheef depend on D. M. K. for ever?

அதேபோல், மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள் எப்போதும் எம். ஜி. ஆர். அவர்களைச் சார்ந்திருக்க முடியுமா?

Can Mr. Margabandhu depend on ADMK or MGR for ever? No. அப்படியென்றால், கட்சிகளே வேண்டியதில்லை. கலைத்துவிட்டு வந்து விடலாமே? அவரவர்களுடைய கொள்கை இருக்கிறது; நடைமுறை இருக்கிறது, இன்றைக்கு இருக்கின்ற சவுகரியத்திற்காக ஒரு உடன்படிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். எப்போதுமே உங்களைச் சார்ந்திருக்கிறோம் என்று யாராவது சொல்வார்களா? சொன்னால் அது உண்மையா? அது தப்பு. நீங்களே உங்களை ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

மதிப்பிற்குரிய சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள், இதற்கு காங்கிரஸ் கூட்டணி என்று பெயர் வைக்க வேண்டுமா என்று. என்ன பண்ணுவது? நீங்கள் எங்களை என்னென்னமோ பண்ணி சின்ன கட்சியாக ஆக்கிவிட்டீர்கள். ஒரு ஆள் ஜெயித்து வந்தபிறகு, ஒரே ஒரு தொகுதியை வைத்துக்கொண்டு இருக்கக் கூடிய நாங்கள் காங்கிரஸ் கட்சியைவிட பெரிய கட்சியா? பெரிய கட்சி என்று எங்களைச் சொல்ல முடியுமா? 10. 15, 23 என்றெல்லாம் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். இதற்கெல்லாம் காரணம் யார் என்பதை மனதில் கைவைத்துப் பார்க்க வேண்டாமா? ஒரு சீட் ஜெயித்த எங்களுக்கு, 16 சீட் கொடுக்கும்போது, அதை வந்து நாங்கள் தோல்வி என்று ஒத்துக்கொள்வதா? நாங்கள் இன்றைக்கு ஒரு உடன்பாட்டை வைத்துக்கொண்டு, அந்த பலத்தை வைத்துக்கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே ஜெயித்து வந்திருக்கிறோம். இதேபோல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இருக்கிறது. அண்ணா தி. மு. க. கூட்டணிக்கு நீங்கள் தலைமை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி ஏற்றுகொள்ள முடியுமா? அப்படி ஏற்றுக் கொள்வதாக இருந்தால், உங்கள் கட்சியைக் கலைத்துவிட்டு, அண்ணா தி. மு. க, கட்சியிலே சேர்ந்து விடலாமே?

[பிற்பகல் 12-40]

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் சொல்லும்போது அண்ணா தி. மு. க. தலைமையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்று

கேட்டார்கள். நான் பேசும்போதே தெளிவாகச் சொன்னேன். ஏற்பட்டது தேர்தல் உடன்பாடு. அதேபோல் நீங்கள் ஏற்படுத்திக் கொண்டதும் தேர்தல் உடன்பாடு. இந்தத் தேர்தல் உடன்பாட்டில் பெரிய கட்சியாக இருப்பது அண்ணா தி. மு. க. அதே போல் உங்கள் அணியில் இந்திரா காங்கிரஸ் பெரிய கட்சியா அல்லது தி. மு. க. பெரிய கட்சியா, யார் தலைமை தாங்குவது என்பதுதான் கேள்வி.

<u>டாக்டர் கே. சமசரம்:</u> நண்பர் சுப்பு அவர்கள் அ.தி.மு.க. கட்சிப் பணத்தை முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> நீங்கள் விளக்க வேண்டாம், உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> நான் பெரிய கட்சி, சின்னக் கட்சி என்று சொல்லவில்லை. பஞ்சாயத்திலே ஒரு கட்சி சின்ன கட்சி, முனிசி பாலிடியிலே பெரிய கட்சி. தமிழ்நாட்டிலே பெரிய கட்சி அண்ணா தி. மு. க. இந்தியாவிலே பெரியகட்சி காங்கிரஸ் கட்சி. எல்லா மாநிலத்திலும் நிலைமைக்கேற்ப எந்த கட்சி பெரிய கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்தியாவிலும் பெரிய கட்சி. அதோடு சர்வ தேசக் கட்சி. சர்வ தேசக் கட்சித் தலைமையைக் கொண்ட அந்தக் கட்சி இங்கே கூட்டணியில் ஒரு கட்சியின் தலைமையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்றால் அது ஒரு ஸ்ட்ராட்டஜி.

<u>திரு. என். சங்கரய்யா:</u> திரு. சுப்பு அவர்கள் சாதுரியமாகப் பேசிப் பயன் இல்லை. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி உலகம் தழுவிய இயக்கம். இந்த நாட்டில் அண்ணா தி. மு. க. கூட்டணியில் சேர்ந்திருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரை இது அவருக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் வேண்டு மென்றே இதைத் திரித்துக் கூறுவதால் என்ன பயன்? அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதே தவிர வேறல்ல.

<u>திரு. க. சுப்பு:</u> மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இந்தியக் கட்சி. உலகம் தழுவிய இயக்கம். தமிழகத்தைப் பொறுத்த வரை உடன்பாட்டுக்கு இங்கிருக்கிற பலத்தை வைத்து முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த முடிவை நான் ஏற்றுக் கொள்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நாங்கள் இருக்கும் நிலை 16 இடங்கள். 540 இடங்கள் உள்ள இடத்தில் நாங்கள் தலைமை தாங்க முடியுமா? ஏனென்றால் நாங்கள் எம். ஜி. ஆர். அல்லவே. அவர் பெரியவர், எப்படி வேண்டு மானாலும் சொல்லலாம். அவர் அகில இந்தியக் கட்சி. நாங்கள் என்ன அகில இந்தியக் கட்சியா? வெறும் மாநிலக் கட்சிதான். முதலிலே நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது எங்களோடு தி. மு. க. வோடு சேர்ந்தார்கள். வெற்றி பெற முடியவில்லை. பிறகு அசெம்பிளி தேர்தலின்போது அண்ணா தி. மு. க. வோடு சேர்ந்தாகள். இப்போது இருக்கும் நிலைமையில்......

<u>திரு. என். சங்கரய்யா:</u> மறுபடியும் சொல்லுகிறேன். சில சீட்டுகளுக்காகக் கூட்டுச் சேருபவர்கள் அல்ல நாங்கள். அல்ல. கொள்கைகளைக் கைவிட்டுவிட்டுப் போகக்கூடியவர்களும் யார் என்பது அவர்களுக்கே தெரியும். 1977 தேர்தலில் தோல்வி அடைந்ததைப் பற்றியோ இப்போது தோல்வி அடைந்ததைப் பற்றியோக வலைப்படவில்லை. சீட்டுகளின் அடிப்படையில் பார்க்க வேண்டாம். சீட்டுகளுக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்காது. நாங்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம். இந்திரா காங்கிரஸ் கட்சியை, எதேச்சாதி காரத்தை யார் யார் எதிர்க்கிறார்களோ அவர்களோடு தொடர்பு, யார் யார் ஆதரிக்கிறார்களோ அவர்களுக்கு எதிர்ப்பு என்ற இந்த மத்திய நிலையை உங்களால் முடிந்தால் தாக்கிப் பாருங்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> அவர் சொன்னதை நான் ஏற்றுக் கொள் கிறேன். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி நிலை தடுமாறாமல் பேசுகிறார்கள். காங்கிரஸ் கட்சி எதேச்சாதிகாரக் கட்சி—அதைத் தான் சொல்வார்கள். ஆட்சியில் இல்லாதபோதும் இதைத்தான் சொல்வார்கள். அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது செய்த தப்பை எதிர்த்தோம். அவர்கள் ஆட்சியில் இல்லாதபோது, மீண்டும் ஜனநாயக முறையை இந்தியாவில் நிலை நாட்ட வேண்டும். மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் முடிவு செய்து....

<u>திரு. என். சங்கரய்யா:</u> திரு. சுப்பு அவர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சி எதேச்சாதிகாரத்தைக் கைவிட்டு விட்டு முழுமையான ஜனநாயகக் கட்சியாக ஆகிவிட்டது என்று ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> இந்திராகாந்தி அவர்களே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நம்புவதும் நம்பாததும் உங்களைப் பொறுத்தது. நீங்கள் நம்பவில்லை என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. இந்திய கம்யூனிஸ்டு கட்சி நேற்று எடுத்திருக்கும்

நிலையை மாற்றியிருக்கிறது. சர்வதேசப் பிரச்சினையில் இந்திரா காந்தி கையாள்கிற முறையைத் தெரிந்து கொண்ட பிறகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் நிலையில் மாற்றம் வருகிறது. கேரளாவில் அச்சுத மேனன் கூட்டணி தேர்தலில் தோற்றவுடன் ராஜினாமா செய்யவேண்டும். இங்கே பண்ணக் கூடாது. அது நம்முடைய சவுகரியத்திற்காக. அரசியல் உறவில் மாற்றம் ஏற்படுகிறது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் அண்ணா தி. மு. க, எதேச்சாதிகாரம் என்று சொல்லக் கூடாதா? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; இன்றைக்கு உங்களைப் பற்றி எனக்கு என்ன கவலை? எதேச்சாதிகாரக் கட்சி என்று சொல்கிறீர்கள். அவர்கள் சொல்கிறார்களா? இல்லை. நாங்கள் இன்றைக்கும் உங்களுக்குச் சொல்கிறோம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை மக்களுடைய பிரச்சினைகளில் எதேச்சாதிகாரம் எந்த ரூபத்திலே வந்தாலும் அதை எதிர்ப்பதற்கு தங்களுடைய கடைசி சொட்டு ரத்தம் வரையில் போராடத் தயாராக இருக்கிற இயக்கம், இது ஒரு அரசியல் இயக்கம். அதற்காக நாங்கள் எல்லாவற்றையும் அடமானம் வைத்துவிட்டு வரமாட்டோம்.

மினிஸ்டர் சொன்னார் என்றால் எதற்காக சொன்னார், 'கேனாட் டிபென்ட் பார் எவர்' என்றால் முதலிலே சொன்னது 'டி. எம். கே. டிபென்டபிள்' 'ஏ. டி. எம். கே. அன்டிபென்டபிள்' அவ்வளவுதான், அந்த அர்த்தத்திலே தான் அவர் சொன்னார். உங்களை அன்டிபென்டபிள் என்று சொன்னார்கள், அதனால் தான் அன்செர்மோனியஸ் ஆக அனுப்பிவிட்டார்கள். அது வேறு விஷயம். அவர்கள் சொன்னது எங்களுடைய பார்ட்டி டிபென்டபிள் என்று. இருந்தாலும் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள். அந்தக் கட்சியின் முடிவைச் சொல்கிறார்கள். ஒரு கட்சி வளரவேண்டுமென்று தான் ஆசைப்படுவார்கள், ஒவ்வொரு கட்சியும் ஆட்சிக்கு வரவேண்டுமென்று தான் ஆசைப்படும், ஆகவே அந்த வகையிலே பேசி திசை திருப்புவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மக்கள் கொடுத்திருக்கிற தீர்ப்பைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள், பாராளுமன்றத்திற்குக் கொடுத்த தீர்ப்பு அசெம்பிளிக்குப் பொருந்துமா? அப்படியானால் அசெம்பளிக்குக் கொடுத்த தீர்ப்பு பஞ்சாயத்து போர்டுக்கு பொருந்துமா? நீங்கள் 13 ஆயிரம் பஞ்சாயத்துக்களையும் ஒரே நாளிலே கலைத்தீர்களே, உங்களுக்கு யார் ரைட் கொடுத்தது? பஞ்சாயத்து போர்டு பிரஸிடென்ட்களை எல்லாம் பார்த்தால் டி.எம். கே.யும்; காங்கிரஸும் தான். ஏ. டி. எம். கே. ஒன்றிரண்டு தான் இருக்கும் பேருக்கு. ஏன் பஞ்சாயத்துக்களை ரீகான்ஸ்டிட்யூட் பண்ணவில்லை, ஏன் அந்த எலக்ஷனை போஸ்ட்போன் பண்ணினீர்கள்? இதற்கெல்லாம் நீங்கள் என்ன காரணம் சொன்னீர்கள்? அது மட்டுமல்ல.



பஞ்சாயத்துப் போர்டுகள், முனிசிபல் கவுன்சில்கள் எதுவாக இருந்தாலும் அட்வைசரி கமிட்டி போடுவது என்று ஆரம்பித்து அதிலே பூராவும் உங்கள் ஆட்களைப் போட்டுக் கொள்வதா? உங்கள் ஆட்கள் மீது எனக்கு ஆத்திரம் கிடையாது, நான் உங்களுடைய முறையைச் சொல்கிறேன். அந்த நடைமுறை என்ன நடைமுறை? அந்த நடைமுறை நியாயந்தானா? அந்த நடைமுறை ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கிறதா? கேட்டால் என்ன சொல்கிறீர்கள்? சட்டசபைக்கே நாங்கள் வந்துவிட்டோமே, பஞ்சாயத்து என்ன என்று சொன்னீர்கள், அப்படியென்றால் அசெம்பிளியும் பஞ்சாயத்து போர்டு தானே. நீங்கள் தானே வழிவகுக்கிறீர்கள். நாங்கள் சொல்கிறோம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சொல்லவில்லை, ஜனதாவைச் சொல்லவில்லை; காமராஜர் தொல்லை கொடுத்தாரா, 5 ஆண்டுக் காலம் ஆளட்டும் என்று சொன்னார்.

இன்றைக்கு சொல்லலாம், திரு. ஜேம்ஸ் முதலமைச்சராக இருந்தால நாங்கள் அந்த வாதத்தை வைக்கமாட்டோம், கீழே இறங்கு என்று சொல்லமாட்டோம். அவர்களைச் சொல்லமாட்டோம், காரணம் அவர்களுடைய கொள்கையில் அவர்கள் கரக்டாக வருகிறார்கள், அவர்களைச் சொல்ல மாட்டோம். உங்களை ஏன் சொல்கிறோம், நீங்கள் சொன்ன கொள்கையை வைத்து சொல்கிறோம். ரைட் டு ரீகால் என்று நீங்கள்தானே சொன்னீர்கள். என்ன சொன்னீர்கள்? அண்ணா தி.மு.க. ஆரம்பித்ததே அந்த அடிப்படையிலே தானே ஆரம்பித்தீர்கள். முதல் ஒரு தடவை வோட்டுப் போட்டால் 5 வருஷத்திற்கு லைசென்ஸ் கொடுத்ததாகக் கருதக்கூடாது, இடையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போகலாம், இல்லாமல் போனால் இடையிலே ஆட்சியை விட்டு இறக்கவேண்டும். அது தான் நீங்கள் சொன்னீர்கள். அன்றைக்கு திண்டுக்கல் தேர்தலிலே வெற்றிபெற்றபோது அதை நீங்கள் சொல்லவில்லையா? அந்த வாதத்தை வைத்துக்கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் வீடுகளுக்கு நீங்கள் எல்லாம் ஊர்வலமாகப் போகவில்லையா. மனுக் கொடுக்கவில்லையா? மக்களே உங்களைத் திரும்ப அழைக்கிறார்கள், வாருங்கள் வாருங்கள் என்று அழைக்கவில்லையா? அப்படிச் சொன்ன ஒரு கட்சி, அதையும் தேர்தலிலே ஒரு திட்டமாக வைத்துக்கொண்டிருக்கிற கட்சி அதை நோக்கி ஒரு அடியாவது எடுத்து வைத்திருக்கிறார்களா? 'ரைட் டு ரீகால்' என்பதை சட்டமாக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இந்தக் கட்சி இந்த ஆட்சி என்ன நடவடிக்கை எடுத்தது? அதை அமலாக்கப் போவதாகச் சட்டம் ஏதாவது கொண்டு வந்திருக்கிறீர்களா? . . . . . .

திரு. ர. ஜெபமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . . . .

திரு. க. சுப்பு : நான் அண்ணா தி.மு.க. வைப் பார்த்துப் பேசுகிறேன், இவரைப் பார்த்து பேசவில்லை, பிறகு பேசுங்கள் நீங்கள், நாட் யீல்டிங். அப்படிப்பட்ட ஒரு கட்சி, தனக்கு உரிமையில்லை என்ற நிலையில் இருக்கிற கட்சியைப் பார்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் கேட்கிறேன், நீங்கள் சொன்ன கொள்கை என்ன ஆயிற்று என்று கேட்கிறேன்......

திரு. ர. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அவர்கள் கேட்டால் கொடுக்கலாம். நாங்கள் கேட்டால் கொடுக்கக் கூடாதா? பாயிண்ட் ஆப் ஆர்டர், சபாநாயகர் அவர்களே, காமராஜ், 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைக்கக் கூடாது என்று சொல்லியதை அவர் ஏற்றுக்கொண்டதை நான் வரவேற்கிறேன். ஆனால் தி.மு.க. ஆட்சியை சர்வாதிகார ஆட்சி இடையிலே கலைத்தது தவறு என்று சொன்னதை இப்போது அவர் மாற்றிக் கொள்கிறாரா என்று கேட்கிறேன்.

திரு. க. சுப்பு : அதையெல்லாம் தலைவர் சொல்வார். அவர் பெரிய தலைவர். நாமெல்லாம் அவருக்குப் பதில் சொல்லக் கூடாது இல்லையா? அவர் வந்து ரொம்பப் பெரியவர், எங்களுக்கு ஏதோ பழைய காலத்து காங்கிரஸ்காரர்களை நினைவுபடுத்தக்கூடிய ஒரே ஒரு சின்னமாக இருப்பவர் அவர் தான். அவரையும் இழந்துவிடுவது என்று சொன்னால் அது அவ்வளவு நியாயமில்லை. உங்களுக்கு மதிப்புகொடுத்து நீங்கள் என்ன கேட்டாலும் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதற்குப் பதில் சொல்வது சரியல்ல என்று நான் விட்டு விடுகிறேன். ஏனென்றால் உப்புச் சத்தியாக்கிரகத்திற்குப் போன தலைவர்களில் அவர் ஒருவர்தான் மிச்சம். அப்படியிருக்கிற நிலைமையில் நாம் வந்து தவறாகப் பேசக்கூடாது. நான் சொல்வதெல்லாம், நீங்கள் வாதாடும்போது என்ன சொல்கிறீர்கள் என்றால் யார் வருவது என்பதற்கு எம்பசைஸ் பண்ணுகிறீர்கள். அது இல்லை. யார் இருப்பது என்பதிலே இல்லை. நீங்கள் இருக்கலாமா இல்லையா என்பதுதான், உங்களைப் போகச் சொல்ல வேண்டுமென்ற ஆத்திரத்திலோ அல்லது நாங்கள் ஆட்சியிலே அமரவேண்டும் என்ற உணர்விலோ சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கிற நிலையில் நீங்கள் நிர்வாகம் செய்யமுடியுமா? எப்படி செய்யமுடியும். மக்களுடைய ஆதரவு இருந்தால்தான் அதிகாரிகள் வேலைகளைச் செய்வார்கள். மக்களுடைய ஆதரவு உங்களுக்கு இல்லையென்றால் எப்படிச் செய்வார்கள்? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியான நீங்கள் உங்கள் நண்பர்களுக்குச் சொல்லவேண்டும். அவர்களுக்கு உதவவேண்டும் உரிய காலத்திலே உதவவேண்டும், உண்





மையைச் சொல்லவேண்டும். நீங்கள் எப்போது பார்த்தாலும் ஏதோ அட்ஜஸ்ட் பண்ணிவிட்டு எங்காவது கிணற்றிலே தள்ளிவிட கூடாது. இந்த மாதிரி ஒரு நியாயத்தை அவர்களுக்குச் சொல்லுங்கள். மக்களுடைய ஆதரவு எங்களுக்குத்தான் சட்ட சபையிலே எங்களுக்குத் தானே ஓட்டுப் போட்டார்கள் என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் அகில இந்திய கட்சியாயிற்றே நீங்கள், பாராளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு இரண்டு இடங்களை வாங்கிய பிறகும் மக்கள் எங்களை நம்புகிறார்கள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? இன்னும் மறுபடியும் தேர்தலிலே நின்று அதிகமான வாக்குகள் பெற்று ஆட்சியிலே அமர்ந்தால் உங்களுக்கு இருக்கிற மரியாதை வேறு. மக்கள் ஆதரவோடு தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள், மக்கள் உங்களுக்குப் பின்னாலே இருக்கிறார்கள் என்று அதிகாரிகள் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையில் நீங்கள் ஏதாவது செய்யமுடியுமா? நீங்கள் எத்தனை திட்டம் போடுகிறீர்கள். ஜி. ஓ. போடுகிறீர்கள், அதிலேயே நிற்கமுடிகிறதா? பேக்வர்ட் கிளாஸ் பற்றி ஒரு ஜி. ஓ. போட்டீர்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அதைப்பற்றி என்ன என்ன எல்லாம் பேசினார்.

[பிற்பகல் 12-50]

அதற்கு என்னென்ன சொன்னார்கள், சைலன்ட் மெஜாரிட்டி என்று சொன்னார்கள். சைலன்ட் மெஜாரிட்டியைப்பற்றி தான் நாங்கள் கவலைப்படுகிறோம், சும்மா, வொசிபரஸ் மைனாரிட்டி தான் இந்த இன்கம் சீலிங்கை எதிர்ப்பார்கள். இதெல்லாம் அவர் பேசியது. இன்றைக்குப் பேசவே மாட்டேன் என்கிறார். என்ன காரணம்? பேசக்கூடாது என்று மக்கள் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் தீர்ப்பைப் பார்த்துப் பேசாமல் இருக்கக் கூடாது. பேசாமல் வீட்டுக்குப் போய்விட வேண்டும். அவ்வளவு தான் விஷயமே தவிர பேசாமல் இருப்பதற்கு நீங்கள் எதற்கு?

It is a nonperforming Government. இதுவரைக்கும் non-performing. இனிமேல் செய்தால் wrong performing Government ஆகிவிடுவீர்கள். மக்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக நீங்கள் என்ன செய்தாலும் தப்பாகப் போகுமா இல்லையா? உங்களை விரும்பவில்லை என்றால் அதற்குப்பிறகு இங்கே என்ன வேலை? ரைட் என்று துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு போங்கள். துண்டு இல்லையென்றால் சும்மா போங்கள். துண்டு இல்லை என்றால் எப்படி உதறுவது என்று சொல்வீர்கள். யாராவது துண்டு இருந்தால் உதறட்டும். மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் துண்டை உதறிவிட்டும்

போகட்டும். நீங்கள் சும்மா போங்கள். அவ்வளவு தானே? இன்றைக்கிருக்கின்ற நிலைமையைப் பொறுத்தவரையில் மக்கள் உங்களை விரும்பவில்லை. அவர் அவ்வளவு பெரிய மனிதர் என்பதற்காகச் சொல்கிறேன். அவரைப்பற்றி நான் தப்பாகச் சொல்லவில்லை. அவர் சௌகரியமாகவே இருக்கிறார். கறுப்பு சிகப்பு போட்டால் மாற்ற வேண்டி வருமோ என்னவோ என்று மொத்தமாக மஞ்சள் துண்டைப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறார். இந்த விவகாரமே நமக்கு வேண்டாமென்று நம்முடைய மாண்புமிகு இராஜாராம் அவர்கள் என்ன பண்ணப் போகிறார் என்றால்.,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் போட்டிருப்பது மஞ்சள் துண்டு அல்ல. காஞ்சிபுரம் பட்டு.

திரு. க. சுப்பு : அமைச்சரான பிறகு பட்டாகப் போடுவதற்காக எனக்கு ரொம்ப சந்தோஷம். அதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மாண்புமிகு இராஜாராம் ஒரு நிலையிலே இருக்கிறார். இப்பொழுது நாளைக்கு ஒரு நிலை வந்தால் என்ன செய்வது என்று இல்லாமல் கறுப்பு சிகப்பிலே ஊடே வெள்ளையும் விடாமல் இருக்கிறார்கள். கடைசிக் கட்டத்தையும் நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பதிலே எங்களுக்கு ஒரு சந்தோஷமான நிலைதான். நமக்குள்ளே என்ன இருக்கிறது, வெள்ளையை எடுத்துவிட்டால் ஒன்றாகப் போகிறது! அதுதானே. அதற்காக நீங்கள் வெள்ளையை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நாங்களே என்ன சொன்னோம்? நேற்றுவரை பதவிக்கிறுக்கு என்றா சொன்னோம்? திரு. பிஜூ பட்நாயக் வரும்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும், இரண்டு பேர்களும் சேர்ந்து பேசும் பொழுது டெல்லியிலேயெல்லாம் இனிப்பு வழங்கி மகிழ்ந்தவர்கள் நம்முடைய நண்பர் ஜெயராமன், தேனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர். அதுமாதிரி ஆலடி அருணா. எல்லோரும் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் தெரியுமா? இரண்டு பேரும் இணையப் போகிறோம். இரண்டு கட்சியும் இணையப் போகிறது, இரண்டு கட்சிகளும் ஒன்றாகப் போகிறது. ஒரே கட்சி, அண்ணாவின் கொடி, அண்ணாவின் பெயர் என்றல்லாம் சொன்னார்கள். என்ன ஆயிற்று என்றால் நாங்கள் இதற்காக வருத்தப்படுகிறோம். அன்றைக்கு ஒன்று சேர்ந்திருந்தால் நன்றாகத்தான் இருந்திருக்கும். யார் வேண்டாமென்று சொன்னது? முதலமைச்சராக இவரே நீடிக்கட்டும் என்று கலைஞர் சொல்லவில்லையா? அமைச்சரவையில் நீங்களே இருங்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக சாதாரணமாக பின்னாலே அமர்கிறோம் என்றுதானே சொன்னோம். நீங்கள் என்ன சொல்லிவிட்டுப் போனீர்கள்? இந்தக் கொடியை மாற்ற வேண்டாம், அதையும் ஒத்துக்கொண்டார்கள். அண்ணா கொடுத்த கொடி, அண்ணா வைத்த பெயர்



அண்ணா தி.மு.க. என்று பெயர் வைத்துக்கொண்டவர்கள் அவர் சொன்னதை மதிக்க வேண்டாமா? இதை மட்டும் செய்யுங்கள், மந்திரிகளாக இருங்கள் என்றுதானே நாங்கள் சொல்லிவிட்டுப் போனோம். நான் போய் என்னுடைய தோழர்களைக் கேட்டுச் சொல்கிறேன் என்று போனார்கள். கேட்டு எங்கே சொல்வது? வேலூர் பொதுக் கூட்டத்திலேயா சொல்வது? நான் கொடியை மாற்ற மாட்டேன் தடியை மாற்ற மாட்டேன் என்று இரண்டையும் தூக்கிக்கொண்டு அலைந்தீர்கள். என்ன ஆயிற்று? கொடியையும், தடியையும் தூக்கிக்கொண்டு போய்ப் பிடுங்கி விட்டானா இல்லையா ஊர்க்காரன். இதெல்லாம் மக்கள் கொடுத்த தீர்ப்பு.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

என்ன காரணம்? நீங்கள் எடுக்கும் நிலை சரியில்லை. நேற்று ஒத்துக்கொண்ட மக்கள் இன்றைக்கு ஏன் எதிர்க்கிறார்கள்? ஜனதா கட்சி இருக்கிறது, கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது. இரண்டு பேர்களும் ரொம்ப அழகாகப் பேசினார்கள். திரு. சுவாமிதாஸ் அவர்கள் யதார்த்தமாகப் பேசினார்கள். நாங்கள் ஊருக்குள்ளே நுழைந்தால் எங்களை ஆளுங்கட்சி என்று மக்கள் நினைக்கிறார்கள், நாங்கள் ஆளுங்கட்சியோடு தோழமை வைத்திருப்பதால், ஆளுங்கட்சியோடு கூட்டு வைத்திருப்பதால் எங்களை ஆளுங்கட்சி என்று நினைத்து எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை, எங்களுக்கு ரோடு இல்லை, பஸ் இல்லை, குடிநீர் இல்லை என்று சொல்கிறார்கள், அதனாலே ஆளுங்கட்சியாக நினைத்துக்கொண்டு எங்களுக்கு ஓட்டுப்போடவில்லை என்று சொன்னால், ஆளுங்கட்சிக்கு போடுவானா? என்னாலே நீ கெட்டாய், உன்னாலே நான் கெட்டேன் என்ற நிலைமையில் அவர்கள் இரண்டு பேர்களின் நிலைமையும் இருந்தது. "செய்தக்க அல்லது செயக்கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்". நீங்கள் இரண்டு வகையிலேயும் கெட்டவர்கள்; பரவாயில்லை. இரண்டும் கெட்டவர்கள்; பரவாயில்லை. நீங்கள் கெட்டதைப்பற்றித் தப்பாகச் சொல்லவில்லை. மக்கள் எதையெல்லாம் பார்க்கிறார்கள் என்றால்—மத்திய சர்க்காரை மட்டும் பார்க்கவில்லை.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைத்துவிட்டு வருகிறார்கள். போடி தொகுதியிலே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியனிலே இருக்கின்ற பி. ரங்கநாதபுரம் என்ற ஊர், அந்தஊரிலே தண்ணீர்த் தொட்டியைத் திறந்து வைத்துவிட்டு வந்து விட்டார்கள். நாங்கள் ஊருக்குள்ளே போக முடியவில்லை. எந்த அரசியல் கட்சியும் ஊருக்குள்ளே வராதே என்கிறான். என்ன காரணம்? தண்ணீர் இல்லாமலே தொட்டியைத் திறந்து விட்டார்கள். அதிலே தண்ணீர் இல்லை. கிணற்றிலே தண்ணீர் கிடையாது. எதற்காக ரூபாய் செலவழித்தீர்கள் என்று கேட்கிறார்கள். வண்டியிலே தண்ணீர் கொண்டு வந்து அந்தத்

தொட்டியிலே ஊற்றித் திறந்து வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அந்த ஊர்க்காரான் சொல்கிறான், வரட்டும், பார்த்துக் கொள்வோம் என்று. இவர் வந்தால் தானே. எம். எல். ஏ., போய் டி. பி. யிலே படுத்துக்கொண்டு விட்டார். நாங்கள் போனால் எங்களை விட மாட்டேன் என்கிறான். இதெல்லாம் வந்து, மத்திய சர்க்காரிலே இந்திரா காந்தி இருக்கட்டும் என்பதற்காக அல்ல. நான் சொல்வது ராமதாஸ் அவர்களின் சொந்தக்காரர்கள் இருக்கும் ஊர். நாங்கள் போனோம். எல்லாவற்றையும் பார்த்தோம்; கல்வெட்டு போடப்பட்டிருக்கிறது; கலெக்டர் தலைமை தாங்கியிருக்கிறார். தண்ணீர் இல்லாத கிணற்றுக்கு எதற்கு ஐயா தொட்டி கட்டுகிறீர்கள்? அதற்கு ஒரு கல்வெட்டு. வெட்கக்கேடாக இல்லையா? இது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம். இதெல்லாம் டெல்லியிலே யார் வர வேண்டுமென்பதற்காக மட்டுமா மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள். டெல்லியிலே இவர் சொல்பவர்கள் வரக்கூடாது என்பதிலே தெளிவாக இருக்கிறார்கள். என்ன காரணம்? உங்கள் மீது அவ்வளவு அவநம்பிக்கையாக இருக்கிறார்கள். இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல்..

திரு. பி. ராமதாஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அண்ணன் சுப்பு அவர்கள் ஏதோ சொன்னார்கள். அப்படிபட்ட ஒரு நிலைமை இல்லை இப்பொழுது. தண்ணீர் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. அவர், ஓட்டுக் கேட்டு போனார், விட மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் நம்மையும் சேர்த்ச்துசொல்கிறார்போல் இருக்கிறது. இப்பொழுது நல்ல நிலைமையில்தான் இருக்கிறது.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அவர் சொல்லட்டும், சொன்னால்தான் இது பத்திரிக்கையிலே வரும். போடிப் பஞ்சாயத்து யூனியனில் இருக்கிறது. அவர் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். தண்ணீரே வராமல் தொட்டியை வைத்து விட்டுப் போய்விட்டார்கள் என்று சொல்லி, தேர்தலுக்கு முன் தண்ணீர் வந்தால்தான் நாங்கள் ஓட்டுப்போடுவோம் என்று சொல்லி, அதற்கு முன்னாலே வராது அம்மா, அவ்வளவு சாதாரணமாக வராது, அதெல்லாம் எங்கேயாவது ஆறு, குளம் உடைத்துக் கொண்டு வந்தால் தான் வரும், இப்போதைக்கு நீங்கள் கவலைப்படாதீர்கள். முதலமைச்சர் கிட்டே இம்மீடியட்டாக எதிர்பார்க்காதீர்சள், பெரிய மனுஷன், மெதுவாகத்தான் செய்வார் என்று சொல்லி நாங்கள் முடித்திருக்கிறோம்.

அதேமாதிரி மறவனூர் வழியாக பஞ்சம்பட்டிக்கு பஸ் விடப்பட்டது. முதலமைச்சர் திறந்து வைத்துவிட்டுப் போய்விட்டார். பஸ் ஏன் வரவில்லை? ஏன் என்று கேட்டால் ரோடே இல்லை, பாலமே இல்லை, அப்படியென்றால் எப்படி 'ஃபிட்னெஸ் சர்ட்டிய



கேட்' கொடுத்தார்கள்? எப்படி பஸ்ஸை விட்டார்கள்? அந்த ஊர்க்காரர்கள் பூராவும் உங்களுக்கு ஓட்டு கிடையாது என்றார்கள்.

நம்முடைய ஆட்சியிலே தவறு இருக்கிறது. தவறு செய்யாதவன் மனிதனே இல்லை. அப்படியானால் நீங்கள் மனிதர்களே இல்லையா? விட்டுவிடுங்கள் நான் சொல்லவில்லை. தவறுகள் செய்திருக்கிறீர்கள் என்று ஏன் ஒப்புக் கொள்ளவில்லை. நீங்கள் எந்தப் பகுதி மக்களுடைய ஆதரவைப்பெற்றிருக்கிறீர்கள். எல்லோரும் பேசினார்கள். உங்களை ஆதரிப்பவர்களே பேசினார்கள். காவல் துறையினர் ஆதரவு போய்விட்டது, என். ஜி. ஓ. க்கள் ஆதரவு போய்விட்டது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் ஆதரவு போய்விட்டது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் பேச்சை டேப் எடுக்கிறார்கள். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் வரும்போது முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை டேப் பண்ணலாமா. ''சீக்ரசி'' சத்தியம் பண்ணி வந்திருக்கிறீர்கள். இரகசியத்தை காப்பாற்ற வந்தவர்கள். இப்படி எல்லோரும் பரிகசிக்கத் தக்க முறையில் நடந்து கொள்கிறீர்கள். இப்படிச் செய்தால் எந்த ஐ. ஏ. எஸ். அதிகாரி உங்களோடு பேச வருவார். எந்த அதிகாரி பைல்களை அனுப்புவார். மிகவும் கஷ்டமாக இருக்கிறது. யதார்த்தம் கசப்பாகத்தான் இருக்கும். உண்மை என்பது கசப்பாகத்தான் இருக்கும் ஆனால் ஒப்புக்கொள்ள வேண்டும். யார் மீதும் உங்களுக்கு நம்பிக்கை இல்லை, என். ஜி. ஓவை பாருங்கள் ஆசிரியர்களைப் பாருங்கள். ராஜபாளையத்திலே இருந்து ஆசிரியர்கள் டெலிகிராம் கொடுத்து விட்டு வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். ராஜபாளையத்திலே இருக்கும் பாலிடெக்னிக்கும், பல பாலிடெக்னிக்குகளிலும் மாணவர்கள் படிக்க முடியவில்லை. அவர்களுடைய பிரச்சினையை உடனே தீர்த்து வைப்பதிலே ஏற்படுகின்ற தாமதத்தினால் கல்லூரிகள் மூடப்பட்டன. பள்ளிகள் மூடப்பட்டன. மக்கள் கொந்தளிப்படைந்து இருக்கிறார்கள். மாணவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறீர்கள். தாமரைக்கனி கூட ஒன்றைச் சொன்னார். சிறையில் அவருக்கு பாதி கடலை மிட்டாய்தான் கிடைத்தது என்று. பாதியாவது கிடைத்ததே என்று அவர் சந்தோஷப்படவேண்டும். இநத நிலையிலே மாணவர்களைச் சிறைக்கனுப்பாமல் தடுப்பது எப்படி. இந்த மாதிரி ஜனநாயக உரிமைகளை அளித்து, நிர்வாகத்தோடு இந்த சர்க்கார் பேசி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும். அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி செய்ய வைக்கவேண்டும். செய்யக்கூடிய வேலையைச் செய்யவேண்டும். செய்ய முடியாவிட்டால் எழுந்து போய்விடுகள்.

விவசாயிகள் பிரச்சினைகளை தீர்த்தோமா? நீங்கள் மறுபடியும் என்ன சொல்லுகிறீர்கள். கொப்பைத் தூக்கி கோனான் தலையில் வைத்த மாதிரி எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போகவேண்டும்.

டெல்லியைக் கேட்கவேண்டும். டெல்லி என்ன இன்றைக்கா வந்து இருக்கிறது. நேற்று இல்லையா, மொரார்ஜி தேசாய் இருந்தபோது இல்லையா. நேற்றே ஏன் கேட்கவில்லை. டெல்லியிலே எதைக் கேட்கவேண்டுமோ அதைக் கேட்பதில்லை. கேட்கக் கூடாததைக் கேட்டு வாங்கி கட்டிக் கொண்டு வருவது. டெல்லியிலே கேட்பதற்கு $2\frac{1}{2}$ வருடமா. $2\frac{1}{2}$ வருடமா கேட்காததை இனிமேலேயா கேட்கப் போகிறீர்கள். இப்போது கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று சேர்ந்து ஆட்சி அமைக்கும் என்றாலும், அது கூடச் சரியில்லை. ஏன் சரியில்லை என்று சொன்னால் அது மக்களிடத்திலே மறுபடியும் வாக்கு வாங்கி நீங்கள் வராமல்——மக்கள் நமக்கு ஒட்டளித்திருக்கிறார்களா நம்முடைய காம்பினேஷனுக்கு வாக்களித்திருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளாமல் சும்மா இடத்தை மாற்றி அங்கேயும் இங்கேயும், நீங்கள் இங்கேயும் நாங்கள் அங்கேயும மாறிக் கொள்வதினாலே ஒன்றும் பலன் கிடையாது. ஆனாலும் மக்கள் ஓட்டுப் போடுவார்கள். அவர்கள் மனது எப்படி இருக்கிறது. நேற்று வரையிலும் அபரிமிதமான ஓட்டு பெற்று வெற்றி பெற்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள் —நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது கரக்ட். அவர் சொன்னார் நான் சொல்வதைத்தான் எல்லேரும் கேட்பார்கள். வேறு யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள் என்றார், இப்போது அவர் சொன்னாலும் கேட்கமாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். சொன்னதைக் கேட்கும் போது ஆட்சியில் இருந்தால் நல்லது சொன்னதை கேட்காத போது ஆட்சியிலே இருப்பதில் அர்த்தம் இல்லை. வேறு என்ன அர்த்தம். அர்த்த மில்லை என்பதுதான் அர்த்தம்.

ஆகவேதான் நான் சொல்லுகிறேன் இதிலே பெரிய அரசியல் சட்ட நுணுக்கம் எல்லாம் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. இன்றைக்கு இருக்கிற நிலைமை இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எல்லா பகுதி மக்களும் பகைவர்களாக கருதி, எல்லா பக்கத்து மக்களின் பிரச்சினைகளை அணுகுவதில் தவறு செய்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி அல்லது வேறு எந்த கட்சியாக இருந்தாலும், அவர்கள் சொன்னதை எல்லாம் புறக்கணித்துவிட்டு உங்களை ஆதரிக்க வேண்டுமென்று வேதனையோடு ஆதரிக்கின்றார்கள். இருந்தாலும் சுட்டிக் காட்டுகிறார்கள். தட்டிக் கேட்கிறார்கள். இருப்பதை எடுத்துச் சொல்லுகிறார்கள். அப்போது நீங்கள் திருந்தி இருந்தாலும் உங்களை மாற்றி இருக்க முடியும். ஆனால் நீங்கள் திருந்தாது, தீர்வது என்று முடிவு செய்து விட்டீர்கள். தீர்ந்து விட்டீர்கள். தீர்ந்த பிறகு இங்கே உட்கார்ந்து இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான் இருக்கங்குடி கணக்கபிள்ளை என்று சொல்லி, இந்த நிலையிலே இல்லாமல் நீங்கள் மாறவேண்டும் என் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.





திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நடந்து முடிந்த பார்லிமென்ட் எலக்‌ஷனிலே பல கிராமங்களில் ஓட்டுப் போடவில்லை என்ற குற்றச் சாட்டு இந்த மன்றத்தில் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி கவர்னர் உரையிலே ஒரு வரி கூட சொல்வதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இது கிராமங்கள் நிலை எவ்வளவு அவலமாக இருக்கிறது என்பதை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இந்த மன்றத்திலே எத்தனையோ முறை எடுத்துச் சொன்னாலும் அதைக் கேட்பதே இல்லை. அதற்கு நிவர்த்தி செய்வதும் இல்லை. நானே பல முறை சொல்லியிருக்கிறேன். இருப்பினும் கூட தீர்வு காணவில்லை. பல கிராமங்களிலே போகின்ற பஸ்களை மறிக்கிறார்கள். காரணம் அங்கே பஸ் வசதி அதிகம் இல்லாத காரணத்தினாலே பஸ் விடவேண்டும் என்று கேட்கிறார்கள். என் தொகுதியிலே நிலமலமங்கலத்தில் கூட தேர்தலுக்கு முன்பு ஒரு போராட்டம் ஏற்பட்டது தேர்தலுக்கு. ஒரு மாதத்திற்குள் டவுன்பஸ் விடுவதாக வாக்குறுதி தந்தார்கள். இன்னும் இது வரையில் பஸ் விடவில்லை.

[பிற்பகல் 1-00]

இப்படி இருந்தால் கிராமங்கள் எப்படி நல்ல நிலையை அடைய முடியும் என்று இப்போதே நீங்கள் யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஏற்கனவே போட்ட ரோடுகள் இன்னும் சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. சென்ற ஆண்டு வெள்ளத்தின்போது மிக அபரிமிதமாக வேலை செய்ததாக கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு உடைத்துக்கொண்ட ரோடுகள். பாலங்கள் இன்னும் சீர்படுத்தபடவில்லை. அதை இப்போது வேண்டுமானாலும் சென்று பார்க்கலாம். ஆகவே அபரிமிதமான வேலை செய்து இருக்கிறோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

## 7 அறிவிப்பு.

## பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து எடுத்து முடிவிற்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 8—2—80 (வெள்ளிக்கிழமை), 9—2—80 (சனிக்கிழமை) பேரவைக்கூட்டம் இல்லை. 10—2—80 ஞாயிற்றுக்

கிழமை விடுமுறை. 11—2—80 (திங்கட்கிழமை) அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். 12—2—80 (செவ்வாய்க்கிழமை) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும்பதில் உரையும். 12—2—80 அன்று கேள்வி நேரம் கிடையாது.

## (6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட ரோடுகள், பாலங்கள், அணைக்கட்டுகள் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. இதற்கு முன்பு எல்லாம் வெள்ளம் வந்து அடித்துச் சென்று விட்டால், ஒரு 3 மாத காலத்திற்குள் அவையெல்லாம் சீர்செய்யப்பட்டு விடும். அப்படி இப்போது செய்யப்படாததால் இந்த அரசாங்கம் சரிவர அதை எல்லாம் கவனிப்பதில்லை என்று நன்றாகத் தெரிகிறது. சென்ற ஆண்டுமட்டுமல்ல, அதற்குமுன் வருஷத்தில் வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அப்படியே இருக்கின்றன. ஆகவே, கிராமங்களை இந்த அரசு புறக்கணிக்கிறது என்று சொல்லிக் கொள்றேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அடிப்படையிலே அரசு அரிசி கொடுக்கிறது. அந்த அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த அரிசி வேலை நடைபெறுகின்றவர்களிடத்தில் போய் சேருகிறதா என்று பார்த்தால் அது சேருவது இல்லை. அரிசியை எந்த டெப்போக்களில் வாங்கிறார்களோ அங்கேயே திட்டம் போட்டு அந்தக் கான்டிராக்டர்கள் விற்று விடுகிறார்கள். அதனாலே அங்கே போய் அது சேருவது இல்லை. பொய் பில் போடுகிறார்கள். பொய் கணக்கு வைக்கிறார்கள். இந்த மாதிரி நிலையில் அந்தத் திட்டம் பெயிலாகப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், உணவுத் திட்டத்தில் வேலைக்கு ஆட்களை வைத்துச்செய்கிற வேலையைக் கண்காணிப்பது மேஸ்திரிதான். மேஸ்திரிக்கு கொடுக்கவேண்டியதைக் கொடுத்து விட்டால் அவர் வேலை நன்றாக நடந்து இருக்கிறது என்று எழுதிவிடுகிறார். ஆகவே, அங்கே அந்த வேலை சரியாக நடைபெறாமலேயே வேலை நடந்ததாக சான்றிதழ் வருகிறது. வேலைக்கு உணவுத் திட்டம் சரியாகக் கண்காணிக்கப்படவில்லை என்றால் அந்தத் திட்டமே பெயிலாகி போய்விடும், அதை அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பற்றி இங்கே பலர் பேசினார்கள். குடிநீர் திட்டம் எங்கே பார்த்தாலும் பிரமாதமாகச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். குடிநீர் குழாய்கள் போடப்படுகின்றன.



அந்தக் குழாய்கள் போடப்பட்டு வருகிறபோது ரிப்பேர் வந்து விடுகிறது என்றால் அதை அப்படியே விட்டுவிடுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் தண்ணீர் கொடுத்தாகிவிட்டது என்று எழுதிவிடுகிறார்கள். வேலைகள் தரக்குறைவாக இருப்பதால், குழாய்களின் தரக்குறைவின் காரணமாகதண்ணீர் ஒழுங்காகபோய் சேருவது இல்லை. இதை எத்தனையோ முறை சொன்னாலும் கூட, டி.டி சி. மீட்டிங்கில் அந்தக் குறைகளை எடுத்து வைத்தாலும் கூட அந்தத் தவறுகள் நிவர்த்திக்கப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் வீதி லைட்கள், எரிவது இல்லை. பஞ்சாயத்தை திடீரென்று கலைத்து விட்டீர்கள். அசெம்பிளியைக் கலைக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு இத்தனை மல்லுக் கட்டுகிறீர்கள், சப்போர்ட் பண்ணிப் பேசுகிறீர்கள். ஆனால் பஞ்சாயத்துகளைக் கலைத்து விட்டீர்கள். அதைப் பற்றி இந்த அரசாங்கம் சிந்தித்தார்களா என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் லைட் எரியாத காரணத்தால், கிராமங்கள் பூராவும் இருள் சூழ்ந்து இருக்கிறது என்பதை நான் இந்தமன்றத்தில் 5 முறைசொல்லியிருக்கிறேன். அங்கேயெல்லாம் லைட் எரிய ஒரு வழி செய்ய வேண்டும். அதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு செய்ய வேண்டும். பஞ்சாயத்து செய்தால் கூட சரியாக செய்ய முடியாது. ஓரளவிற்குச் சரியாகச் செய்து கொண்டு இருந்த பஞ்சாயத்துக்களையும் கலைத்து விட்டு சுத்தமாக லைட் எரியாமல் செய்து விட்டீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே அதிகாரியைப் போய்க் கேட்டால் அவர் இன்னொரு அதிகாரியைக் காட்டுவார்; அந்த அதிகாரியிடம் கேட்டால் அவர் வேறொரு அதிகாரியைக் காட்டுவார். இவர்கள் சரியாக அதையெல்லாம் கவனித்து செய்யவில்லை. ஆகவே கிராமங்கள் இன்றைக்கு இருள் சூழ்ந்து இருக்கின்றன. இதை நன்றாகக் கவனித்து நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கை பொறுத்தமட்டில் சொல்ல வேண்டுமானால், 'நாங்கள் உடனடியாக இதை அமுல் நடத்தி மதுவையே இல்லாமல் செய்து விடுவோம்' என்று முதலமைச்சர் இந்த மன்றத்திலே சொல்லும் போது, நான் அடுத்தபடியாகப் பேசும் போது சொன்னேன். இதில் நீங்கள் 'ஃபெயில்' ஆகிவிடுவீர்கள், உங்களால் செய்ய முடியாது என்று சொன்னேன். இப்போது நீங்கள் மதுவிலக்கை தளர்த்தி, மக்களை பெரும் தீங்குக்கு உள்ளாக்கிவிட்டீர்கள். நீங்கள் தேர்தலிலே வெற்றி பெறாததால் மக்கள் இந்த மதுவிலக்குக் கொள்கையினால் ஓட்டு போடவில்லை என்ற சந்தேகத்தில் தளர்த்தி இருக்கிறீர்கள். இதனால் மக்கள்

மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். மது கொடிய விஷம், குடிப்பவர்களை குடிகெடுக்கின்றது. அப்படிபட்ட மதுவை உங்களுக்கு ஓட்டுப் போடாததற்காக தாராளமாக்கி விட்டீர்கள். நாட்டை அது குட்டிச்சுவராக்கிவிடும். ஆகையால் இந்த மது விலக்கை மீண்டும் தீவிரமாக அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டுவதற்கு 'லோன்' கொடுப்பதாக எங்கு பார்த்தாலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வீடு கட்ட லோன் கிடைக்கும் என்று தேர்தல் நேரத்தில் பேசினார்கள். ஆனால் எங்காவது வீடு கட்ட லோன் கிடைக்கிறதா என்று பார்த்தால், கிடைப்பதில்லை. பணம் செலவிடுகிறவர்களுக்கு லோன் கிடைக்கிறது ; மற்றவர்களுக்கு கிடைப்பதில்லை. லோன் எல்லோருக்கும் கிடைக்கின்ற வகையில், அதை பரவலாக்க வேண்டும். யார், யார் வீடு கட்ட லோன் வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்க, அப்படிபட்ட ஒரு திட்டம் இருந்தால், ஏற்பாடு வேண்டுமென்று செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் 9 அம்சத் திட்டத்தை வைத்து, எங்கு பார்த்தாலும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கேஸ் வாபஸ் பெறப்படும் என்று சொன்னார்கள். ஆனால் சில கேஸ்களை வாபஸ் பெறாமல் வைத்திருக்கிறார்கள். அந்த மாநில சங்கத்தின் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு மீது ஒரு பெரிய மோசமான கேசை போட்டிருக்கிறீர்கள். அவர் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யாதபோது அவர் மீது போட்டிருக்கிற கேசை வாபஸ் பெறுவதுதான் நல்லது ; வாபஸ் பெற வேண்டும். அதோடு விவசாயிகளுடைய 9 அம்சத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இல்லை என்றால், இன்னும் பெரியதாக விவசாயிகள் போராட்டம் வெடிக்கும். விவசாயச் சங்கத் தலைவர் எங்கு சென்றாலும் ஏகப்பட்ட கூட்டம் கூடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் ; உங்களுக்கு ரிப்போர்ட் வருகிறது. அதற்கு என்ன காரணம் ? அப்படிப்பட்ட பெரிய ஆபத்திலே விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் கடனை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை நிவர்த்தி செய்தால் என்ன ? குடியா முழுகிவிடும் ? விவசாயிகள் மீது இருக்கிற கடனை ரத்து செய்யலாம், எத்தனையோ கம்பெனிகளில் கோடிக் கணக்கான ரூபாய் வரி பாக்கி வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்று இருக்கிறார்கள் அத்தனை மக்களுக்கும் உணவு அளிக்கக்கூடிய விவசாயிகள் கடன்பட்டிருக்கிறார்கள் ; கஷ்டப்படுகிறார்கள். அதை ஏன் நிவர்த்தி செய்யக் கூடாது. அதையெல்லாம் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





சமீபத்தில் நடைபெற்ற போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தெருவிலே நின்று திண்டாடுகிறார்கள். அந்த கேஸ்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்படும் என்று சொன்னாலும் இன்னும் பலர் மீதுள்ள கேஸ் வாபஸ் பெறப்படாமல் இருக்கிறது. அது அவ்வளவு நல்ல காரியம் அல்ல. அவர்கள் சாதாரணமாக, ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். எல்லா அரசாங்க சிப்பந்திகளும் சங்கம் வைத்துக் கொண்டிருக்கும்போது போலீஸ்காரர்கள் ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டார்கள். அதற்காக அவர்களை வேலை நீக்கம் செய்திருக்கிறீர்கள். அவர்களை எல்லாம் உடனடியாக வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சியிலே லஞ்சம் அதிகமாக தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. அதை பிடிக்க ஒரு டிபார்ட்மென்ட் இருக்கிறது. ஒரு மாதத்தில் எங்காவது ஒரு கேஸ் பிடிக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. 6 மாதத்திற்கு ஒரு கேஸ் கூட பிடிப்பதில்லை. இன்றைக்கு எல்லா இடங்களிலும் லஞ்சம் பெறுகிறார்கள். அந்த மாதிரியாக இருக்கும்போது ஏன் ஒரு டிபார்ட்மென்ட் போட்டும், அதை கவனிக்க முடியவில்லை ?

முதலமைச்சர் இந்த மன்றத்தில் வந்த அன்றைக்கே லஞ்சத்தை ஒழித்துவிடுவேன் என்று சொன்னார்கள். நான் அப்போதே சொன்னேன், முடியாது என்று. இப்போது என்ன நிலைமை என்று பார்த்தால் முன்னால் இருந்ததைவிட லஞ்சம் அதிகமாகி இருக்கிறது. லஞ்சம் கொடுக்காமல் எதையும் செய்ய முடியவில்லை. போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு பொய் கேஸ் போடுகிறார்கள். அது பரவலாக எல்லா இடத்திலும் இருக்கிறது. அந்த மாதிரியான நிலை இருப்பதால் மக்கள் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டுப் போடாமல் விட்டு விட்டார்கள் என்பதை உணர்ந்து, எங்களைப் போன்றவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு, அதையெல்லாம் நிவர்த்தி செய்ய தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.10]

## (3) தகவல் கோரல்.

### (ஆ) மக்கள் குரல் நாளேட்டில் பேரவையில் நடைபெறாத செய்தி வந்துள்ளது குறித்து—தொடர்ச்சி.

<u>திரு. து. புருஷோத்தமன்</u> : தலைவரவர்களே, இன்று காலையிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களைப் பார்த்து நேற்றைய தினம் ** என்று சொன்னதாக

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மக்கள் குரல் பத்திரிக்கையிலே வந்ததாகக் குறிப்பிட்டீர்கள். அவர்கள் பேசுகிறபோது கூட ஒரு குரல் வந்தது என்றுதான் சொன்னார்கள். ஆனால் நீங்கள் என்னைப் பார்த்து கேட்டதும் நான் இல்லை என்று சொன்னேன். பின்னால் அந்த மக்கள் குரல் பத்திரிக்கையை வாங்கிப் பார்க்கிற போதும் நான் பேசியதாக அந்த மக்கள் குரல் பத்திரிக்கையிலே செய்தி வெளியிடப்படவில்லை. ஆகவே நீங்கள் நான் சொல்லாத வார்த்தைக்கு விளக்கம் கேட்டு அது பத்திரிக்கையிலேயும் மற்ற எல்லா குறிப்பேடுகளிலேயும் வந்திருக்கிறது. நான் உள்ளபடியே அதற்காக வருத்தப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் : அன்று நடந்த பிரச்சினையைப் பற்றி, கனம் கூத்தகுடி சண்முகம் அவர்கள் பத்திரிக்கையில் வந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தார்கள். அவையில் அன்று திரு. புருஷோத்தமன் அவர்களோடு வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்ட நிலையையொட்டித் தான் பத்திரிக்கையில் அச் செய்திவந்துள்ளது. ஆகவேதான் நான் திரு. புருஷோத்தமன் அவர்களைக் கேட்டேன். பத்திரிகையிலே திரு. புருஷோத்தமன் இதைச் சொன்னார் என்று இல்லைதான். திரு புருஷோத்தமனைப் புண்படுத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. காலையிலே திரு சண்முகத்தை கூப்பிட்டு அழைத்துப்பேசி, இதுபோல் இனி ஏற்படாது தவிர்க்கப் பெறும் என்று தெரிவித்து விட்டேன். எனவே இதோடு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

நடவடிக்கை குறிப்பிலேயிருந்தும் பத்திரிகைக் குறிப்பிலேயிருந்தும் * * * * * என்ற அந்த வாசகத்தை எடுத்து விட வேண்டும் ; அதை வெளியிடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இப்போது நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இந்த விஷயம் நடந்து ரொம்ப நேரம் ஆகிவிட்டது. ஆகவே சில பத்திரிக்கைகளின் எடிஷன்களுக்கு இந்தச் செய்தி டெஸ்பாச் ஆகிப்போயிருக்கும். ஆகவே பிரெஸ் பேரிலே பிரிவிலெஜ் மேட்டர் எடுத்துவிடாதீர்கள், அப்படியே வந்துவிட்டாலும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் (பொ. வி.)—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தில் இந்த நேரத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நான் உங்களுக்கு முதலிலே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகப் பெரிய சிரமத்திற்கிடையே இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்கு நான் மிகுந்த நன்றியுடையவன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்ற பெயரில் இங்கே ஆற்றப்பட்ட உரைக்கு பதில் சொல்ல வேண்டும் என்ற வகையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அத்தனை பிரதிநிதிகளும் மிகச் சிறந்த கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற ஆளும் கட்சியின் சார்பிலே பல கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாலும் கூட சில உணர்வுகளோடு சில நிலைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று அருமை நண்பர் திரு. சுப்பு அவர்கள் பேசியதற்குப் பின்னாலே எனக்கும் அந்த உணர்வு ஏற்படுகிறது. பொதுவாக அவர்கள் எதைப் பேசினாலும் சிரித்துக்கொண்டே பேசுகிற காரணத்தாலே அது எப்படிச் செல்கிறது என்று எழுதி வைத்துப் படிக்கிற நேரத்திலேதான் அதனுடைய முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள முடியும். பேசுகிற நேரத்தில் அவர் சிரித்துக் கொண்டே பேசுவதால் அதனுடைய அர்த்தங்கள் முழுமையான அளவிலே தெரிவதில்லை. அவருடைய பேச்சைப் பொறுத்த அளவில் கலைவாணர் அவர்களுடைய சிரிப்பைப் போல அதிலே ஆழ்ந்த கருத்தும் இருக்கும். அதேபோல் அவருடைய பேச்சுகளிலே சில உண்மைகள் தெரிய ஆரம்பித்து விடும். ஆனால் அவர் பேசிய பேச்சுகளில் நான் உள்ளபடியே வருத்தப்படுவது என்னவென்றால் "மாண்புமிகு எம். ஜி. ஆரைத் தாங்கிய நாங்கள் ஏன் திரு. இளையபெருமாளைத் தாங்கக் கூடாது" என்று கேட்கின்ற நிலைமைக்கு வரக்கூடாது என்பது தான் திராவிட பாரம்பரிய உணர்வைவிட்டு நாம் போகக்கூடாது.

...திரு. எம். ஜி. ஆரைத் தாங்கினோம்... அதனாலே இளையபெருமாளை தாங்குவோம் என்று சொன்னால், இளையபெருமாள் யார் என்பது அல்ல இன்றைக்கு இருக்கிற பிரச்னை, அந்த சக்தி, இந்த சக்தி எல்லாம் சேர்ந்து இன்றைக்கு நம்முடைய சக்தி என்ன என்று அவர் சொன்னார். கருப்பு சிவப்பின் இடையிலே ஒரு வெள்ளையை எடுத்து விட்டால் கருப்பு சிவப்பாக ஆகிவிடும். கருப்பு சிவப்பிலே வெள்ளையை போட்டால் ஜாதியே மாறிவிடும் என்பது தான் நம்முடைய நிலைமையே தவிர, இதற்கிடையே கலரை புகுத்தி வேறுபாடு காண்பது அவ்வளவு நல்லதல்ல. நாடு அதை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் நாம் நிச்சயமாக திராவிட இயக்கத்திற்கு உட்பட்டிருக்கிறோம், உணர்ந்திருக்கிறோம் என்பதாகாது என்பதுதான் என்னுடைய கருத்து என்பதை இந்த நேரத்திலே நண்பர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

நண்பர்கள் பேசும்போது பேசினார்கள், இந்தத் தேர்தல் அமைதியாக நடைபெறவில்லை, பல்வேறு அமைதியற்ற சூழ்நிலை இருந்தன என்று, எடுத்துச் சொன்னார்கள். அப்படி சொல்கிற நிலைமையிலே அமைதியாக நடைபெறவில்லை என்று சொன்னால், அமைதியில்லாத காரணத்தினால்தான் அவர்கள் ஜெயித்து விட்டார்களோ என்னவோ என்ற சந்தேகம் கூட வரும். நான் உதாரணத்திற்கு சொல்கிறேன. பல் வேறு சம்பவங்களை குறிப்பிட்டார்கள். நான குறிப்பிடுவதாக இருந்தால் நான் ஏற்கனவே இந்த மன்றத்திலே கூறியபடி தேர்தல் நேரத்திலே எவ்வளவு வேகம் இருந்தாலும் அமைதியாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று. ஆனால் குடந்தையிலே இருக்கிற என்னுடைய அலுவலகத்தை கொளுத்தினார்கள், என்னுடைய அச்சகததை தாக்கினார்கள். தேர்தலிலே வாக்குகள் கிடைக்க வேண்டும் என்ற அந்த கோவத்திலே அப்படி எல்லாம் நடைபெறுவதுண்டு. ஆனால் கோபம் தேர்தல் வரையிலும் இருக்க வேணடிய ஒன்றே தவிர, தேர்தல் முடிந்த பின்னாலே ஓட்டுகள் எண்ணியதற்கு பினனாலே, இன்றைக்கு ஓட்டுகள் மாறிவிட்டது அதனால் நீங்கள் ராஜிநாமா செய்தால் என்ன என்று கேள்விகள் வேகமாக பிறபபிக்க ஆரம்பித்து இருக்கின்றன.

அப்படிச்சொல்வதாக இருந்தால் நானும் அதிகமாக சிந்தித்து பார்ததேன். இதற்கு என்ன வழி வகை காணலாம் என்று. 17,000 ஓட்டுகள் இன்றைக்கு குடந்தையலே குறைந்து விட்டன எனக்கு. இதனால் கும்பககோணத்திலே இருக்கிற மக்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால், அண்ணன் மாரிமுத்து அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. அவருக்கும் குறைந்து விட்டது அவரும் அதற்காக கவலைப்படுபவர்கள் அல்ல....

திரு. ஏ. ஆர் மாரிமுத்து: ஓட்டு குறைந்து போனவர்கள் அத்தனை பேரும் திரும்ப தேர்தலில் நிற்க வேண்டும் என்று தான் நான் சொல்கிறேன் இப்பொழுது.

திரு. எஸ். ஆர் இராதா: அண்ணன் மாரிமுத்து அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அருமையாகச் சொன்னார்கள். பரிகாரம் காண வேண்டும் என்றால், இருவரும் போராட்டத்திலே ஈடுபடுவோம். அண்ணன் மாரிமுத்து அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றால் நாங்கள் இரண்டு பேரும் ராஜிநாமா செய்து, கும்பகோணத்தில் என்னை எதிர்த்து தி. மு. க. வும், பட்டுக்கோட்டையிலே அவரை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரும் போட்டியிட ஏற்றுக் கொள்வார்களேயானால், தமிழ்நாட்டின் நிலைமையை நம் இருவருடைய நிலைமையை வைத்து முடிவு செய்துவிடலாம். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டால், அது நிச்சயமாக நாட்டிற்கு ஒரு நல்ல வழிகாட்டியாகவும் அமையலாம.....





திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இது பாலிஸி விஷயமே தவிர போட்டிபோட்டுக்கொண்டு பேசுவதற்காக அல்ல. குறைந்து போன இடங்களிலே எல்லோருமே நிற்க வேண்டும். அவ்வளவு தான்.

திரு. எஸ். ஆர். இராதா: வெற்றி பெற்றவர்கள் அத்தனை பேரும் ராஜிநாமா செய்ய வேண்டும் என்று பாலிஸியாக வருகிறது என்றால், நான்சொல்வேன் நேரத்திற்கு நேரம் பாலிஸி மாறிக்கொண்டு வருகிறது. அதிலே யார் மாறுகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். எவ்வளவு வேகமாக என்னென்ன பேசினோம், இன்றைக்கு என்னென்ன பேசுகிறோம். நான் மாறினேன், நீ மாறினாயா? நாங்கள் இன்றைக்கும் மாறவில்லை அன்றைக்கு தான் மாறினோம்.

நீ அன்றைக்கு மாறிவிட்டாய் இன்றைக்கு எப்படி மாறவில்லை என்று பேசுகிற நிலைமைக்கு வந்துவிடுகிறது, நான் பரிதாபத்தோடு கேட்கிறேன். தலைவர்களே எங்களுக்கு அந்த சூழ்நிலையை உண்டாக்கிவிடாதீர்கள். எவ்வளவு கஷ்டப்பட்டு திரு. சுப்பு பேச வேண்டிய அவசியம் வந்து விட்டது. மிசாவைப் பற்றி பேசினால் எப்படி பேசுவது. நண்பர் மாரிமுத்து அவர்கள் வருந்துவார்களே என்று எப்படிப்பட்ட தியாகங்கள் இன்றைக்கு விற்கப்பட்டு விட்டன. மிக சாதாரண விலைக்கு போய்விட்டனவே. இன்றைக்கு நீங்கள் அதைப்பற்றி பேச முடியாத நிலைமைக்கு அவை விலை போய்விட்டன என்று தெரிவிக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் விலைவாசி போராட்டத்தில் எதிர்த்து ஜெயிலுக்கு போனேன், இந்தி எதிர்ப்பிலே ஜெயிலுக்குப் போனேன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். ஆனால் மிகப் பெரிய தியாகங்கள், பல பேர் உயிரை இழந்து பெறப்பட்ட தியாகங்கள், வரலாற்றைப் படைத்த தியாகங்கள், இன்றைக்கு பேச முடியாமல் போய்விடுகின்றன. இந்த நிலைமை தேவைதானா ? இந்தச் சூழ்நிலை இன்றைக்கு தேவைதானா ? விளக்கம் சொல்ல முடியாது, சென்னால் ஏற்றுக்கொள்வார்களா? என்றால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அந்த நிலைமையை சங்கரய்யா அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள்....

திரு. க. சுப்பு: எங்களுடைய தியாகத்தை திரு. மாரிமுத்து ஏற்றுக் கொள்ளாவிட்டால் பரவாயில்லை, நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?

திரு. எஸ். ஆர். இராதா: நான் எப்பொழுதுமே எந்த தியாகத்தையுமே ஏற்றுக் கொள்கிறவன். நண்பர் திரு. சுப்பு அவர்கள் திரு. மாரிமுத்து அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே

என்பதை பந்றி கவலைப்பட கூடாது, தியாகங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். மிசாவில் போனோம் என்றால் நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.......

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராதா அவர்கள் மிசாவைபற்றி சொல்ல ஏதோ பயப்படுகிறோம் என்பது போல் சொல்கிறார்கள். அவர் மட்டும் அல்ல அவர் தலைவர் கூட சொன்னார். முன்பெல்லாம் மிசா கணேசன் என்று போடுவார்கள் இப்பொழுது போடுவது இல்லை என்று சொன்னார்கள்.

நான் உணர்ந்து சொல்கிறேன்.

நாங்கள் சர்வாதிகாரத்தை எதிர்த்து சிறைக்கு போனவர்கள் தான். மிசா பட்டம் பெற்றவர்கள்தான். அதில் கொஞ்சம் கூட சந்தேகம் இல்லை, அச்சமும் இல்லை. ஆனால் நாங்கள் தியாகம் செய்த போது கூட இருந்து காட்டி கொடுத்தவர்கள் நீங்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

[பிற்பகல் 1.20]

திரு. எஸ். ஆர். இராதா : திரு. துரைமுருகன் அவர்கள் பழைய நிலைமைகளை மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். காட்டிக் கொடுக்கிற பரம்பரையை நிச்சயமாக நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நண்பர் துரைமுருகன் சிறையில் இருந்தால் வருத்தப்படுவோமே தவிர துரைமுருகனை சிறையில் அடைக்க வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படமாட்டோம்.

திரு. துரைமுருகன் : தனிப்பட்ட திரு. ராதா திராவிட பாரம்பரியத்தில் வந்தவர். தனிப்பட்ட ராதாவை மதிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். உங்கள் திராவிட பண்பாட்டை மதிக்கிறேன். ஆனால் உங்கள் இயக்கத்தை நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

திரு எஸ். ஆர். இராதா ; நான் இயக்கத்தின் சார்பில் சொல்கிறேன். திரு. துரைமுருகனைக் காட்டிக் கொடுக்க வேண்டுமென்றோ அல்லது திரு. சுப்பு அவர்களைக் காட்டிக் கொடுக்க வேண்டுமென்றோ, அந்த உணர்வு எங்களிலே யாருக்கு இருந்தாலும் சரி நாங்கள் அதைக் கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறோமே தவிர அதை ஆதரிக்க மாட்டோம். அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை.

திரு. என். கிட்டப்பா : என் இனிய நண்பர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் மிசாவில் சிறை சென்றவர்கள், தியாகத்தைப் பற்றி இங்கே வெகுவாகப் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே தியாகத்தைப் பாராட்டக் கூடிய பண்பு அவர்களிடத்தில் உண்டு. ஆனால் ஆளும் கட்சியில் உள்ளவர்கள்



இதற்கு முன்னால் இதே அவையில் பல தடவைகள் மிசாவில் சிறை சென்றவர்களைப் பற்றிக் கூறும்போது திருடிவிட்டு, கொள்ளையடித்துவிட்டு சிறை சென்றவர்கள் என்று கூறியிருக்கிறார்கள் என்பதை என் இனிய நண்பர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நண்பர் திரு. கிட்டப்பா அவர்கள் நினைவுபடுத்தியதற்கு நன்றி தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன் அன்றிருந்த ஆட்சி உங்கள் மீது அந்த வழக்குகளைப் போடச் சொன்னார்கள். அதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். உங்களைச் சிறைச்சாலையில் அடைக்கச் சொன்னார்கள். அப்படி அடைக்கச் சொன்னவர்களோடு இன்று நீங்கள் இருக்கிறீர்கள். சிறைச்சாலை வாசல் வரை சென்று இன்னார் இன்னாரை அடிக்க வேண்டும், இன்னின்ன இடத்தில் அடிக்க வேண்டும் என்று சொன்னதை உங்களில் பலர் மறந்திருக்கலாம். இன்று தோழமை என்ற காரணத்தினால் அவைகளை மறந்துவிட்டுத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக குறுக்கே வருவதற்குத் தயாராயில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆட்சியைக் கலை, ஆட்சியைக் கலை என்று வேகமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 1967-ல்......

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய அருமை நண்பர் எஸ். ஆர். இராதா அவர்கள் மிஸாவில் சிறை சென்றவர்களை, தியாகிகளை மதிப்பவர். நான் மட்டுமல்ல என் கட்சியும் அப்படித் தான் என்று சொன்னார்கள். ஆனால் அன்று சிறைக்குச் சென்ற நேரத்தில், அவசர நிலை பிரகடனப்படுத்தியதை ஆதரித்ததோடு சிறைக்குச் சென்றது சரிதான் என்று கருத்து தெரிவித்தவர்கள், அவர்கள் கட்சிக்காரர்கள். அதோடு மட்டுமல்ல. அன்றையதினம் அதை எதிர்த்து நாங்கள் போராடியபோது எங்கள் எதிர்ப்பு சரிதான் என்று ஏன் ஒரு அறிக்கை கூட நீங்கள் வெளியிடவில்லை? எங்களோடு ஏன் நிற்கவில்லை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே கருத்தை எல்லா உறுப்பினர்களும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுப்பினால் நேரமாகிவிடும். அவர் கேட்டதிலேயே நீங்கள் கேட்பதும் உள்ளடங்கியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா: மிஸாவை ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டு நெருக்கடி நிலைமை என்று சொல்வது வேதனைக்குரியது. அதை திரு. சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டார்கள். நெருக்கடி நிலையை ஆதரித்து யார் யார் வேண்டாதவர்களோ அவர்களைப் பிடித்துப் போட்டவர்கள் அவர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்றைக்கு நிலைமை மாறலாம், காலம் மாறலாம்,

காலம் அடிக்கடி மாறிக்கொண்டிருக்கலாம். நிலைமை மாறிக்கொண்டிருக்கலாம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது எதிரிகளை ஒழிக்க எதுவாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளலாம், அது அவசர நிலையாக இருந்தாலும் சரி அல்லது நெருக்கடி நிலையாக இருந்தாலும் சரி என்பது தான் நாம் முன்னால் கடைப்பிடித்த கொள்கையென்பதை ரகுமான்கான் அவர்கள் மறந்துவிடக்கூடாது. ஒன்றை நான் கூற விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியை எங்களுக்கு வாங்கித்தந்தார்கள். நாம் அதை மறந்துவிடக் கூடாது. இதிலே யாருக்கும் உரிமை இருக்கிறது பங்கு இருக்கிறது என்று கேட்கக்கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருபது ஆண்டுகள் தமிழ்நாட்டில் அவர்கள் செய்த மிகப்பெரிய தியாகம் தான், அந்த விளைவுதான் நாம் ஆட்சியில் உட்கார முடிந்தது.

1952, 1962-ல் காங்கிரஸ்காரர்கள் என்ன பேசினார்கள் என்பது எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. அவர்கள் கேவலமாக, அலட்சியமாக நீங்களாவது, ஆள்வதாவது ஆளுகிற முகமா உங்கள் முகம், ஆள உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று பேசியபேச்சுகள் எல்லாம் மீறித்தான் திராவிடர் இயக்கம் வளர்ந்து வந்தது. வளர்ந்து இங்கே உள்ளே வந்தும் உட்கார்ந்தார்கள். அதோடு இன்னொன்றையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஒரு ஆட்சி கூட ஐந்து ஆண்டுக் காலம் நடக்க வில்லை. 1967-ல் இருந்து இன்று வரை: அண்ணா ஆட்சி என்று சொல்லி அமைக்கப்பட்ட ஆட்சி திடீரென்று நான்காண்டு காலத்தில் கலைக்கப்பட்டது. யார் கலைத்தார்கள் என்பதல்ல கேள்வி. நாங்களா கலைத்தோம், மேலே இருந்தவர்கள் கலைத் தார்கள் என்பதல்ல. ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சி நடத்த முடிய வில்லை. அதேபோல் அதற்குப் பிறகு 1971-ல் கலைஞர் ஆட்சி ஐந்தாண்டுக் காலம் நடக்கவில்லை. அந்த ஆட்சி கலைக்கப் பட்டது. இன்றைக்கு நீங்கள் ஆட்சியைக் கலை என்றால் காங்கிரஸ்காரர்கள் வெளியே பேசுவார்கள், எங்களைத் தவிர வேறு யாரும் ஐந்தாண்டுக் காலம் ஆள முடியாது என்று.

ஐந்தாண்டுக் காலம் ஆள வேண்டுமென்றால் நாங்கள் தான் ஆள வரவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் சொல்கிறபோது திராவிடர் இயக்கம் தலைகுனிந்தாக வேண்டும். அப்படி தலை குனிகிற நிலையை உண்டாக்க அவசரம் உங்களுக்குத் தேவை இல்லை. இன்று மும்முனைப் போராட்டம் மாதிரி நடக்கிறது. சட்டசபைக்கு வந்தால் ராஜிநாமா செய் என்கிறார்கள்.

உறுப்பினர் விடுதிக்குப் போனால், "கட்சி மாறுவதற்குத் தயாரா, வெளியே ஆள் தயாராக இருக்கிறது, கார் தயாராக இருக்கிறது எப்போது வருகிறாய் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெளியே போனால் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம். இந்த மூன்றையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு சந்தித்தாக





வேண்டும். முதலில் யார் செய்தார்கள் என்பதல்ல பிரச்சினை. யார் செய்தாலும், அது தவறு என்பதைத்தான் நாம் பெருந் தன்மையாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, தவறுகளை ஆதரிக்கின்ற அந்தப் பழக்கத்திற்குப் போகக் கூடாது. எனவே, மும்முனைப் போராட்டத்தைச் சந்திக்கிற நாம், திராவிட உணர்வோடு, அண்ணா வளர்த்து வந்த அந்த இயக்க உணர் வோடு நாம் சிந்திக்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விடுகின்ற நேரத்தில், மறைந்த நேரத்தில் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழ் நாட்டிலே இருந்து டெல்லிக்கு அனுப்பினார்கள். அந்த 25 உறுப்பினர்கள் மொழிப்பற்றோடு, திராவிட இன உணர்வோடு, பகுத்தறிவு உணர்வோடு டெல்லி மாநகரத்திற்குச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்களில் பேராசிரியர் இன்றைக்கு இருக்கின் றார்கள். 25 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்ற தெம்போடு திராவிட இயக்கம் நடைபோட்டது. ஆனால், 1971 ஆம் ஆண்டு தேர்தலிலே அண்ணா அவர்கள் கொடுத்த 25 உறுப்பினர்களை, நாம் என்ன நிலைமைக்குக் கொண்டு வந்தோம்? என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். யார் குறைந்திருந்தாலும், குறைவு நம்மாலே என்பதை நாம் எடுத்துக் கொண்டாகவேண்டும். 1967-ல் 25 பேர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் களாக இருந்தார்கள் என்ற நிலை, 1971-லே 23 ஆக மாறியது. அதற்குப் பின்னாலே, கலைஞர், புரட்சித் தலைவர் ஆகியோர் சேர்ந்து 23 பேர்களை உறுப்பினர்களாக அனுப்பினார்கள். அவற்றில் இரண்டு குறைந்து விட்டது என்று அண்ணா சமாதிக்குப் போய், நாமெல்லாம் சேர்ந்து, பரவாயில்லை அண்ணா, இரண்டை குறைத்துக் கொள்ளுங்கள், எங்களாலே இவ்வளவுதான் முடிந்தது என்று சொன்னோம். ஆனால், அதற்குப் பின் 1971-க்குப் பின் னுள்ள கணக்கைப் பார்க்க வேண்டும். 1977 லே திராவிட இயக்கம் என்று சொல்வதற்கு 19 பேர்கள்தான். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 18, மறைந்த ஆசைத்தம்பி 1, ஆக மொத்தம் 19 ஆகியது. அதற்குப் பின் இன்றைக்கு 1980ல் நம்முடைய நிலையைப் பார்க்க வேண்டும். 16 பிளஸ் 1—17-ல் நிற்கிறோம்.....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் ராதா அவர்கள் பாரளுமன்றத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள். அண்ணா அவர்கள் தமிழ் நாட்டில் 138 உறுப்பினர்களை விட்டுச் சென்றார்கள். அது 185 ஆக நாம் எல்லாம் ஒன்றாக இருந்து ஆக்கினோம். அதை இப்போது 120 ஆகக் குறைத்தவர்கள் யார்?

திரு. எஸ். ஆர், இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திற்கு மொழி உணர்வோடு, பகுத்தறிவு உணர்வோடு இருக்கின்றவர்களை அண்ணா அவர்கள் அனுப்பி

வைத்தார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்பதுதான் கேள்வி. இங்கே எப்படியிருக்கிறோம் என்றால், அதே பழைய நிலை, நீடித்துக் கொண்டிருக்கிறது. எப்படி போனாலும் அங்கே 48 இங்கே 126. எண்ணிக்கைக்கு வந்தால் அந்த 26 பேர்களிலே கொஞ்சம் கொஞ்சமாக வெளியே அவர்களை ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறோம். மறுபடியும் திரு. இளையபெருமாள் உள்ளே வருவார் என்றால், திராவிட இயக்கம் அழிந்துவிடும். நான் சொல்வது 18 பேர்களை இன்றைக்கு அனுப்பியிருக்கிறோம். 7 பேர்கள் நஷ்டமாகி இருக்கிறது. அண்ணா சமாதிக்குப் போகிறோம்,...........

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படியானால் நாங்கள் கேள்விப்படுவதெல்லாம் தவறான தகவலா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு அரசியல் உறவு வைத்துக் கொள்ள இப்போது தயாராக இருக்கின்றது என்றும், அதற்கான முனனேற்பாடுகள் செய்யப் படுவதாகவும் கேள்விப்படுவது தவறான தகவலா?

திரு. எஸ். ஆர். : இராதா பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர்அவர்களுக்கு பதில் சொல்லக் கூடாது என்று கருதுகிறவன் நான். முன்னாலே அவர்கள் கேட்டார்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, ஏன் ஆளும் கட்சியிலே இருந்து பேசக்கூடாது என்று கேட்டார்கள். இந்தப் பிரச்சினையில் நான் போய் கலைஞருக்கு பதில் சொல்லி, அது ஒரு நாலு பேருக்குக் கோபம் வந்து இந்தப் பயல் கலைஞருக்குப் பதில் சொல்லுகிறானே என்ற எண்ணம் வரக்கூடாது என்பதில் நான் கொஞ்சம் அக்கறை கொள்ளுகிறவன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்கிற வாதம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்குப் பொருந்துமா? நீங்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்துக் கொள்ள டெல்லிக்குச் சென்று வந்தது உண்மையா? இல்லையா? இதற்குத் தான் விளக்கம் கேட்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் அவருக்கு அதைத்தான் சொல்ல வந்தேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது திருப்பித் திருப்பிக் கேட்டார்கள். அதற்கு இங்கே திரு. மாரிமுத்து அவர்கள்தான் அவசரப்பட்டு பதில் சொல்ல வேண்டுமென்று நின்றார்கள். இன்றைக்கு உள்ள கேள்வி என்னவென்றால், உறவுக்காக டெல்லிக்குப் போகின்ற



நிலை உங்களுக்கு வந்துவிட்டது. நீங்கள் டெல்லிக்குப் போவதற்காக நான் கவலைப்படுகிறவன். கலைஞரைத் தேடி அவர்கள் எல்லாம் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறவன் நான். கலைஞர் அவர்களும் டெல்லிக்குச் சென்று, உறவுக்காகப் பேசி முடித்துவிட்டு வந்தார்கள். இன்றைக்கு டெல்லிக்கு போகின்ற நிலை நம்மில் யாருக்கு வந்தாலும் சரி........

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, டெல்லிக்குப் போய் பேசவில்லை. அப்போதே பகிரங்கமாக ஒரு கூட்டத்தில் சொன்னேன். தமிழக அரசு இங்குள்ள டெலிபோன்களை டேப் செய்வதால், டேப் செய்ய முடியாத ஒரு இடத்திலிருந்து இந்திரா காந்தி அம்மையாரோடு போனில் பேசி, உடன்பாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, இந்திரா காந்தி அம்மையாரைப் பார்க்கவும், பத்திரிகையாளர்களுக்கு அதனை வெளியிடவும்தான் நான் டெல்லிக்குச் சென்றேன். இப்போது நீங்கள் டெல்லிக்குப் போய் விட்டு வந்தீர்களே? அது எதற்கு?

[பிற்பகல் 1-30.]

திரு. எஸ். ஆர் இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் டெலிபோனில் சொல்லி அதற்குப் பின்னாலே போய் கையெழுத்துப் போட்டேன் என்று சொல்வது நான் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. 1971-ல், எனக்குத் தெரியும், நம்மைத் தேடி வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஐந்து நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: இன்னும் 15 நிமிடங்கள் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராதா அவர்கள் பேச்சு தொடரும். பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் 11–2–80 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணியளவில் ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

60. தமிழ்நாடு கைத்தறிப் பொருள் வளர்ச்சிக் கழகத்தின் 1975-76-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*12. 1980-ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1980).

* 5-2-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.



இணைப்பு-I

[........2 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 81-க்கான விடையைக் காண்க]

அவைமுன் வைக்கப்படும் அறிக்கை.

(அ) ஆம்

(ஆ) கீழ்க்காணும் நடைமுறைகளுக்குட்பட்டு நிலவள வங்கிகள் மூலம் முன் கடன்கள் தீர்க்க கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது;

(i) மாநில நிலவள வங்கி ஓராண்டில் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 10 சதவீதத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்,

(ii) ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன்கள், அடைமானம் வைத்துப் பெற்ற கடன்கள், மற்றும் டிகிரி கொடுக்கப்பட்ட கடன்கள் ஆகிய முன் கடன்களைத் தீர்க்க கடன் வழங்கப்படுகிறது.

(iii) முன் கடன்கள் தீர்க்க மட்டுமே வழங்கப்படும் கடன்கள் உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 5,000-க்கு அதிகப்படக் கூடாது.

(iv) அரசு கடன் மற்றும் ஒற்றியின் பேரில் வாங்கப்பட்ட கடன் தவிர, பிற முன் கடன் கணக்கை தீர்க்க மட்டும் கடன் பெற வேண்டுமானால், மேற்குறிப்பிட்ட கடன்கள் அவைகளைத் தீர்க்க கோரப்படும் கடன் மனுவின் தேதியிலிருந்து குறைந்த அளவு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டிருக்க வேண்டும். இக்கால அளவு, முன் கடன்களைத் தீர்ப்பதோடு, மற்ற காரணங்களுக்கும் சேர்த்து கோரப்படும் கடன்களுக்குப் பொருந்தாது.

(இ) இல்லை.

இணைப்பு II

[....13ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 85-க்கான விடையைக் காண்க.]

(அ) கடல் மீனளத்தை மேம்படுத்துவதற்காக இழுபடகுகளை (Trawlers) இறக்குமதி செய்ய 1973 ஆம் ஆண்டில் மத்திய அரசு அறிவித்த திட்டத்தின் கீழ் மாநில மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து இரு இழுபடகுகளைக் காலம் தாழ்த்தித் தொகை கொடுக்கும்படி அடிப்படையில் வாங்கியுள்ளது.

[1980 பிப்ரவரி 7

(ஆ) மீன் வளர்ச்சிக் கழகம், மெக்சிகோவில் 30-8-1977 அன்று இரு இழு படகுகளையும் தன் வசம் பெற்றுக் கொண்டது. இப்படகுகள் 7-3-1978 அன்று சென்னை வந்து சேர்ந்தன. இவ்விரு இழு படகுகளுக்கும் ஈட்டுறுதி போக்குவரத்துச் செலவுஉட்பட மொத்த செலவு ஏறத்தாழ 80 இலட்ச ரூபாயாகும். வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி, விலையில் 20 சதவீதம் தொகை ஒப்பந்தம் கையெழுத்திடும் போது கொடுக்கப்பட்டது. எஞ்சியுள்ள 80 சதவீதத்தை, 13 அரையாண்டுத் தவணைகளில் கொடுக்க வேண்டும். இழு படகுகளைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் கழித்து 7சதவீதம் வட்டியுடன் கொடுக்கப்பட வேண்டும். மெக்சிகன்கப்பல் கட்டும் தளத்திற்கு உடனடியாக கொடுக்கப்படும் 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் காலம் தாழ்த்திக் கொடுக்கப்படும் 80 சதவீதம் தொகைக்கும் 90 சதவீதம் வரை கடன் வழங்கிய மத்திய அரசு, கப்பல் போக்குவரத்து மேம்பாட்டு நிதிக்குழுவிடம் (Shipping Development Fund Committee) ஏற்பாடு செய்துள்ளது. உடனடியாக கொடுக்கப்படும், 20 சதவீதம் ரொக்கத் தொகைக்கும் பிற செலவுகளுக்காகவும் தொடக்கத்தில், 29.90 இலட்சம் ரூபாயை வழங்கக் கப்பல் போக்கு வரத்து மேம்பாட்டு நிதிக்குழு ஒப்புக்கொண்டுள்ளது.

## இணைப்பு III

[......14ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத வினா எண் 86-க்கான விடையைக் காண்க]

(அ) 1979-ம் ஆண்டில், மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்க தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

(ஆ) அத்திட்டத்தின்படி—

(1) மீனவர்களுக்கு 1,600 மீன் பிடி விசைப்படகுகள் வழங்கப்படும் (93 மீனவர்களுக்கு 30 அடி அளவுள்ள படகுகளும், 67 மீனவர்களுக்கு 32 அடி அளவுள்ள படகுகளும் வழங்கப்படும்).

(2) படகின் மொத்த விற்பனை விலையில், 10 சதவீதத் தொகையை அரசு மானியமாக வழங்கும்.

(3) எஞ்சிய 90 சதவீத தொகையில், 5 சதவீதத்தை மீனவர்கள் ரொக்கமாக செலுத்த வேண்டும் 15 சதவீதத்தை அரசு கடனாக வழங்கும். மீதி 80 சதவீதத்தை வங்கிகள் கடனாக வழங்கும்.



[1980 பிப்ரவரி 7]

(4) வங்கிகள் கடன் வழங்குவதற்கு உதவியாக விவசாய மறுநிதி அபிவிருத்திக் கழகம் நிதி உதவி வழங்கும். வங்கிகள் வழங்கும் கடனுக்கு அரசு உத்திரவாதமுண்டு.

(5) வங்கிகள் 32 அடி படகுகளுக்கு வழங்கும் கடனை 5 ஆண்டுக்குள் 45 மாத தவணைகளிலும், 30 அடி படகுகளுக்கு வழங்கும் கடனை 6 ஆண்டுகளுக்குள் 54 மாத தவணைகளிலும் 11 சதவீத வட்டியுடன் செலுத்த வேண்டும். இந்த கடனை செலுத்திய பின் அரசு கடனை சதவீத வட்டியுடன் 2 ஆண்டுகள் 18 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(6) விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் நிதியுதவிக்காக குறித்துள்ள (Unit cost) 32 அடி அளவுள்ள படகின் விலையில், விற்பனை விலையைவிட குறைவாக உள்ளதால், 32 அடி அளவுள்ள ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்ட படகிற்கு ரூ. 6,481-ம், அசோக் லேலண்ட் என்ஜின் பொருத்தப்பட்ட படகிற்கு ரூ. 14,799-ம் கூடுதல் கடனாக மீனவர்களுக்கு அரசு வழங்குகிறது. இக்கடனை 14 சதவீத வட்டியில் 24 மாத தவணையில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

(7) மீனவர்களுக்கு மின்விசைப் படகு வாங்க படகின் மொத்த விலையில் 10 சதவீதம் மான்யம் தள்ளுபடி செய்தபின் விலைவிவரம் பின்வருமாறு :—

பின் படகின் விலை விவரம் பின்வருமாறு—

| | |
|---|---|
| (அ) 30 அடி நிலுவையுள்ள படகு (ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்டது) | 1,08,655.65 |
| (ஆ) 30 அடி நிலுவையுள்ள படகு (கிர்லோஸ்கர் என்ஜின் பொருத்தப்பட்டது) | 1,05,680.97 |
| (இ) 30 அடி நிலுவையுள்ள படகு (பிரிமியர் மரைனீர் என்ஜின் பொருத்தப்பட்டது) | 1,02,789.00 |

32 அடி நிலுவையுள்ள மின்விசை படகு

| | |
|---|---|
| (அ) ரஸ்டன் என்ஜின் பொருத்தப்பட்டது | 1,73,350.32 |
| (ஆ) கிர்லோஸ்கர் என்ஜின் பொருத்தப்பட்டது | 1,63,402.32 |
| (இ) அசோக் லேலண்ட் என்ஜின் பொருத்தப்பட்டது | 1,84,072.21 |
| (ஈ) பிரிமியர் மரைன்னர் என்ஜின் பொருத்தப்பட்டது | 1,52,219.61 |

[1980 பிப்ரவரி

## இணைப்பு-IV

[......18ம் பக்கத்திலுள்ள உடுகுறியிட்ட வினா எண் 87க்கான விடையைக் காண்க]

(அ) ஆம்

(ஆ) (i) காணாமல் போகும் மீனவர்களைத் தேடிக்கண்டு பிடித்து காப்பாற்றவும், தமிழ்நாடு கடற்கரையில் கட்டுமர மீனவர்களுக்கும், விசைபடகோட்டிகளுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்படும் பகுதிகளை ரோந்து செய்யவும், மீனளத் துறையில் பிடிபடாமல் தப்பி மீன் பிடிக்கும் விசைப்படகுகளைத் தேடவும் ஒரு காப்பாற்றும் படை ஏற்படுத்த ரூ 10 இலட்சம் விலையில் அதிக திறனுள்ள இயந்திரங்களும் நவீன சாதனங்களும் பொருத்தப்பட்ட 43½ அடி நீளமுள்ள இரண்டு படகுகளை மீனளத் துறை வாங்க உத்தேசித்துள்ளது,

(ii) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மீனவர்களுக்கு படகுகள் வழங்குவதில் அவர்களின் தேவைகளை முழுவதும் பூர்த்தி செய்யும் பொருட்டு, படகுகள் கட்டுவதோடன்றி வெளியிலிருந்தும் படகுகள் வாங்க உத்தேசித்துள்ளது. இக்கழகம் படகு கட்டும் மீனவர்கள் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ரூ. 10 இலட்சம் விலையில் 32 அடி நீளமுள்ள இரண்டு படகு கூடுகளை வாங்கும். புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 50 சதவீதம் மானியம், என்ற அடிப்படையில் இயங்கும் இயந்திரத்துடன் வழங்க ரூ. 2.20 இலட்சம் விலையில் 18 அடி நீளமுள்ள இருபது கண்ணாடியிழை படகுகளை பரிசோதனைக்காக வாங்க முடிவெடுத்துள்ளது. கண்ணாடியிழை படகுகள் திருப்தியான முறையில் செயல்பட்டால், மீனவர்களுக்கு வழங்க இன்னும் அதிக அளவில் அவ்வித படகுகளை கழகம் வாங்குவதாக இருக்கிறது.

12341
D
Y311,31 N80
N80.37-1